
Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර
பக்கம் 24 ரூபா 30.00
மே 01 - 07, 2014

# வாரமலர் தினமுரசு



சினி விசிட்

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1064



# அரசியலுக்கு அப்பால்...

## சவால்களுக்கு மத்தியில் கிழக்கு பல்கலைக்கழகம்

## இஸ்ரேல் விரும்பாத பலஸ்தீனத்தின் ஒற்றுமை!

ஒரு பார்வை



## தாயின் கண்ணீருக்கு நியாயம் கிடைக்குமா?

# கடவுளிடம் பயம் வேண்டும்

ஒரே பரம்பொருளை 'முருகா!' என்றாலும், 'சிவனே!' என்று துதித்தாலும் 'திருமாளே' என்று வணங்கினாலும், 'கணபதியே' என்று அழைத்தாலும் ஏன் என்கிறார்கள் மானிடர்கள். ஒவ்வொரு சுவாமிக்கும் தேங்காய் உடைக்கச் சொல்கிறீர்களே என வருத்தப்படுகின்றனர்.

*இறைவனின் பரதநாட்டிய தத்துவம் கேளுங்கள். ஆண்டவன், மாயையை எடுத்து உடுக்கையினால் உதறுகிறார். ஆன்மாக்களின் வல்வினைகள் என்னும் சஞ்சிதத்தைத் தமது திருக்கரத்தில் உள்ள நெருப்பினால் சுட்டுச் சாம்பலாக்குகிறார். ஆணவமாகிய முயலகனை மேலெழாவண்ணம் கிரியாசக்தியாகிய வலப்பாதத்தினால் மிதித்திருக்கிறார். ஆனந்த ' அனுபவத்தை தமது தூக்கிய திருவடியின்மூலம் தருகிறார். ஆன்மாக்களுக்கு நாம் நன்மையே செய்யவேண்டும். உயிர்களுக்குச் செய்யும் நன்மையே உண்மையான கடவுள் வழிபாடாகும்.

* ஆண்டவன் அகிலாண்ட நாயகன். சர்வ வல்லமையும் உடையவன். நம்முடைய தலைவன். மனம், வாக்கு, காயம் ஆகியவற்றால் நாம் செய்யும் குற்றங்கள் அனைத்தையும் அறிகிறான். ஆகவே, கடவுளிடத்தில் ஒவ்வொருவருக்கும் அச்சம் இருக்கவேண்டும்.

* கடவுளை நம்மால் காண முடியவில்லை. பாலுக்குள் இருக்கும் நெய் நம் கண்ணுக்கு தெரிவதில்லை. தயிராக்கி கடைந்தால்தான் புலப்படுகிறது. அதுபோல, பக்தி செய்தால்தான் இறைவனைக் காண முடியும்.

# ஆன்மீகம்

## நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்!

நல்லவைகளை நாலு பேரிடம் சொல்லத் துடிக்கும் மனது. இது இயற்கை. அனுபவத்தை அண்டை அயலானோடு பகிர்ந்துகொள்ள ஆசை கொள்வதும் இயல்பு. அதிலும் அதிசயங்கள் அற்புதங்கள் என்றால் சொல்லவேவேண்டாம்.

இயல்போடு இணைந்து இயங்கும் இயேசுவும் இதன் அடிப்படையிலே படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றும் பெறும் பணியை தன்சீடர்களிடம் ஒப்படைக்கிறார். முதன்முதலாக உயிர்த்த இயேசுவைக் கண்ட மகதலா மரியா, இயல்பாக புறப்பட்டுச் சென்று, இயேசுவின் சீடர்களுக்கு அதை அறிவித்து தன் நற்செய்தியைப் பறைசாற்றும் பணியைத் தொடங்கியுள்ளார்.

அதன்பின் உயர்த்த இயேசுவை கண்ட சீடர்களுக்கு இயல்பான இச்செயல் ஒரு உன்னத பணியாகக் கொடுக்கப்படுகிறது. இவ்வாறு இயல்பான ஒன்றை, ஒரு பணியாக ஒப்படைத்ததன்மூலம், இந்நற்செய்தியை பறைசாற்றுவது ஒரு பெருங்கடமை என்பதை உறுதிப்படுத்துகிறார்.

திருமுழுக்குப் பெற்ற நீங்கள் அதே உயிர்த்த இயேசுவைப் பார்த்தவர்கள். திருமுழுக்கால் இயேசுவோடு இறந்து உயிர்த்தவர்கள் நீங்கள். ஆகவே அந்த உயிர்ப்பின் அனுபவத்தை உங்கள் அருகில்உள்ள உங்கள் நண்பருக்கு அறிவிக்க வேண்டியது உங்கள் கடமை. சோர்ந்திருக்கும் உங்கள் நண்பருக்கு ஆறுதலும் நம்பிக்கையும் மகிழ்ச்சியும் கொடுங்கள்.

# அகத்தூய்மை பெறுவோம்!

ஒரு மனிதன் தனது உள்ளத்தில் உள்ளது என்ன என்பதை தினமும் தீர்மானித்துக் கொள்ளவேண்டும். உமர் (ரழி) அவர்கள் உறங்குவதற்குமுன் ஓர் சாட்டையை தன்கையில் எடுத்துக்கொள்வார்களாம். அன்றைய தினத்தில் அவர்கள் செய்த ஒவ்வொரு விடயத்தையும் ஒரு முறைதான் மீட்டிப் பார்த்து அதில் ஏதாவது தவறுகள் நடந்திருந்தால்,

உமரே நீ ஏன் இவ்வாறெல்லாம் செய்தாய் என தனது உள்ளத்தில் கேள்விகளை எழுப்பி அதற்காக தன்னையே சாட்டையால் அடித்துக்கொள்வார்களாம். இவ்வாறு தமது உள்ளத்தில் தேவையற்ற விடயங்கள் சேர்ந்துவிடாமல் பார்த்துக் கொள்வார்களாம் உமர் (ரழி).

ஏன் உமர் (ரழி) இவ்வாறெல்லாம் செய்தார்கள் என்றால் நாளை மறுமையில் தமது உள்ளம் திறக்கப்படும். அப்போது அங்கே உண்மைகள் வெளிப்படும் என்ற அல்லாஹ்வை பற்றிய அச்சமே. ஆகவே நாமும் நாளும் நமது உள்ளத்தைப் பரிசோதனை செய்து அதில் அல்லாஹ்வின் கட்டளைகளையேற்று அகத்தூய்மை பெறுவோம்.

எம்.சீ.கலீல், கல்முனை 05.

# கவிதைப்போட்டி 1061



## பாராட்டுக்குரியது

### பாலகன் நான்...

பச்சிளம் பாலகன் நான்
பசிதீர்க்க தவிக்கிறேன்
என் உணவை எனக்குண்ண
வழிகாட்ட தாயில்லையே
என் கையே எனக்குதவி என்று
என் கையால் நான் பிசைந்து
உண்கிறேன் என் உணவை
தாய் இல்லா பாலகன் நான்
செல்வம் இருந்தும், பயனில்லையே
தாய்ச் செல்வம், எனக்கில்லையே
படைத்தவன் கருணையுடன்
வளருகிறேன் இவ்வுலகில்
என் வாழ்வில் வழிகாட்ட
நீ உண்டு என்பதால்
உண்கிறேன் இவ்வுணவை
பெலன் தாரும் இறைவா...
நீ எனக்கு...

P.Y.ஜேசுமணி.
கண்டி.

### என் நிலை பாரீர்!

அமுதூட்டும் என் அன்னையை
ஆண்டவன் அழைத்து விட்டான்
கண்டதும் கட்டியணைக்கும்
தந்தையோ சித்தியின்
கைப் பாவை
என் பசிக்கு யாருண்டு ஊட்டிவிட
சாதம் சிந்த முன் அள்ளியுண்ண
வேண்டும் ஒருபிடி யாகிலும்...

S.மோகனதாசன்.
திருமுறிகண்டி.




# கவிதைப் போட்டி இல 1064



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபால்அட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி 13.05. 2014

கவிதைப் போட்டி இல. 1064 தினமுரசு வாரமலர், த.பெ.இல. 167, யாழ்ப்பாணம். இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### வேறென்ன செய்வேன்?

நானே பிசைந்து
நானே உண்பதல்லால்
வேறென்ன செய்வேன்.
அன்னமூட்டிய என் அன்னையை
பாவிகள் அடைத்துவிட்டார்களே
அகதி முகாமில்.

அ.சந்தியாகோ. கண்டி.

### குழந்தையே!

தெய்வீக குழந்தையே
செல்வத்தின் தோற்றமே
உன்முகத்தில்.
உண்ணும் உணவிலே
உலகை மறந்தாயோ?
உணவை பிசைவதும்
விளையாட்டோ? உனக்கு.
பசிக்கொடுமை உன்
வயிற்றை
பிடுங்குதோ?
உணவு ஊட்ட தாய் எங்கே
குழந்தாய் தனிமையிலே
உணவருந்த முடியுமா?
உனக்கு.

ஜே.ஜேசுமணி. கண்டி.

### கண்பட்டால்...!

குண்டுப் பயல் இவனே...
உண்பதவன் கடனே...
கண்பட்டுவிடும் உடனே...
பண்பட்டுவிடும் உடலே...

ஏ.எம்.கமால், புத்தளம்.

### குட்டிப் பயலின் சுட்டித்தனம்

பார்க்காமல் யாரையுமே - உன்
பார்வை மட்டும் ஏன் பாற்சோற்றிலே
தன் பக்கம் வைத்து பகிர்ந்திடும் - உன்
பச்சிளம் கரங்களால்
எத்தனை தடவைகள்தான்
பகிர்ந்து கொள்வாய் அதை
குண்டான குட்டிப் பயலே - உன்
சுட்டித்தனத்திற்கு - இந்த
பாற்சோறுதான் கிடைத்ததா?

இளம்பிறை யோகன். புத்தளம்.

### தடித்தவுடல்

"ஓடி விளையாடு பாப்பா
ஒய்ந்திருக்கலாகாது பாப்பா"
தனித்திருந்து விளையாடாதே பாப்பா
தடித்தவுடல் வந்துவிடும் பாப்பா.

எம்.சி.கலீல். கல்முனை-05.

### ஊக்கம் உடையார்

ஊக்கம் உடையார்,
உயர்வடைவர்
தன்னம்பிக்கை, விடாமுயற்சி
தனிமையிலே...
உணவருந்த வைத்ததோ
எடுக்கும் உன் முயற்சியில்
உன் எதிர்காலம்,
பிரதிபலிக்கின்றன.
பார்ப்பவர்களின் உள்ளங்கள்
பூரிப்படைகின்றன.

யே.ஒகஸ்ரா. கண்டி.

# உங்கள் பக்கம்

## பஸ்ரியன் சந்தியில் நிழற்குடையின் அவசியம்

யாழ்ப்பாணத்தில் வீதிப் புனரமைப்பு இடம்பெற்றபொழுது பஸ்ரியன் சந்தியிலுள்ள நிழற்குடை அகற்றப்பட்டதால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

யாழ். பஸ்ரியன் சந்தியில் தற்காலிக நிழற்குடை பயணிகளின் நன்மை கருதி அமைக்கப்பட்டிருந்தது. வீதி திருத்தப் பணிகள் மேற்கொள்ளும்பொழுது அந்த நிழற்குடை அகற்றப்பட்டிருந்தது.

இதனால் இச்சந்தியில் பேருந்துக்காக காத்து நிற்கும் நீண்ட தூரப் பயணிகள், மாணவர்கள், வேலையாட்கள் எனப் பலரும் பாதிக்கப்படுகின்றனர்.

வீதி அபிவிருத்திப் பயணிகள் நிறைவுற்று நீண்ட நாட்களாகியும் அந்த நிழற்குடையை அமைக்கவில்லை. இதனால், பஸ்ரியன் சந்தியிலிருந்து தென்மராட்சி மற்றும் ஏ9 வீதியூடாகச் செல்வதற்கு பேருந்துக்காக காத்திருக்கும் பயணிகள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். வெயில், மழை காலத்திலும் கால்கடுக்க காத்திருக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.

ஆகவே, உரிய அதிகாரிகள், பயணிகளின் நன்மை கருதி பஸ்ரியன் சந்தியில் நிழற்குடை ஒன்றை அமைத்துத் தருமாறு தினமுரசின் உங்கள் பக்கமூடாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

எஸ்.யானு,
யாழ்ப்பாணம்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com

## அபிப்பிராயம்

வாசகர்கள் மத்தியில் தனக்கென தனியிடத்தை பிடித்து வைத்திருக்கின்றாய் என்று சொன்னால் மிகையாது. இதற்கு சூடு, சுவை, சுவாரசியம் குறையாமல் இருப்பது காரணம்.

முரசு கடந்த சில மாதங்களாக விறுவிறுப்பு இல்லாமல் இருக்கின்றது. சூடு இருக்கின்றது, சுவை இல்லை. சுவாரசியம் குறைவு. முரசு இதில் அதிக அக்கறை எடுக்கவேண்டும் என்பதே எனது தனிப்பட்ட அபிப்பிராயம்.

அற்புதன் காலத்தில் முரசின் மௌசுக்கு குறைவில்லை. முரசை வரிசையில் நின்று வாங்கிப் படித்த காலங்கள் உண்டு. அற்புதன் கால நிலையை முரசு கொண்டுவரவேண்டும். முரசு இதில் அக்கறை கொள்ளுமென நான் திடமாக நம்புகின்றேன்.

ஆர்.சாலமன், காலி.

## தேவை!

வணக்கம் முரசுக்கு.
உன் முன் பக்க வடிவமைப்பு
என் நெஞ்சை கொள்ளை
கொள்கிறது.
சினிமாவில் குளுகுளு
படங்களும், புதுப் படங்களும்
கண்குளிர வைக்கின்றது.
நெஞ்சம் தொட்டு
மனசை கொள்ளை கொள்கிறாய்
பலதும்பத்தும் தந்து
அறிவுள்ள முழு மனிதன்
ஆக்குகின்றாய்.
உன் பணி இன்றும்
என்றுமே எனக்கு மட்டுமல்ல
எல்லா வாசகர்களுக்கும்
தேவையே!

யாழ். யானு.




## சபாஷ்!

சென்ற வாரம் வெளியான பொதுபல சேனாவுக்கும் அதிகாரம் அனுசரணையா? என்ற கட்டுரையில் பிரச்சினையின் உண்மைத் தன்மையை புட்டுப்புட்டு வைத்துள்ளார் ஹுசைன்.

தொடராக வரும் இக்கட்டுரையில் பல யதார்த்தம் தெட்டத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. கட்டுரையாளருக்கு ஒரு சபாஷ் போடுகிறேன்.

ஆர்.அசார், தர்ஹா.

## அமைதியின் சொற்கள்

உங்கள் புரிந்துணர்வின் நிலத்தைத் தயார் செய்யுங்கள். பிறகு உங்களுடைய இந்த வாழ்க்கையை எடுத்து அதில் விதையுங்கள். அதில் அறிவது என்ற நீரைப் பாய்ச்சுங்கள். நம்புவது அல்ல. அறிவது. அதற்கு தெளிவின் வெளிச்சத்தைக் கொடுங்கள். அந்த விதை மலர்வதைப் பாருங்கள். அந்த மலர்வதுதான் "அமைதி" என்று அழைக்கப்படுகின்றது. அதுதான் அமைதி.

- பிரேம் ராவத்

# அமைச்சர் டக்ளஸின் முயற்சியினாலேயே நிரந்தர நியமனங்கள் சாத்தியமானது

## தமிழ் தேசியக் கூட்டமைப்பு புகழாரம்

**மாநகர சபையில் பணியாற்றிவந்த பணியாளர்களாகிய நீங்கள் நடத்திய போராட்டங்கள் காரணமாக அந்த நியமனங்கள் உங்களுக்கு கிடைப்பதாக நீங்கள் கருதக்கூடாது. இந்நியமனங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களாலேயே உங்களுக்குக் கிடைக்கின்றன என்பதை நின்னவில் கொள்ளுங்கள் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரும், யாழ்.மாநகர சபை எதிர்க்கட்சித் தலைவருமான திரு.நடராஜன் இராஜதேவன் தெரிவித்தார்.**

யாழ்.மாநகர சபை பணியாளர்கள் 87 பேருக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கும் வைபவம் மாநகர சபை கேட்போர் கூடத்தில், முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெற்றது.



இந்நிகழ்வில் சிறப்புரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவிக்கையில், பணியாளர்களாகிய உங்களது பிரச்சினையைத் தீர்த்துவிட்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இங்கு ஒரு பெருமகனாக வருகை தந்திருக்கிறார். அவரால் கிடைக்கப்பெற்ற உங்களது நிரந்தர நியமனங்களுக்காக நீங்கள் அவருக்கு நன்றியுடையவர்களாக இருத்தல் வேண்டும் எனத் தெரிவித்தார். அதேவேளை, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றும்போது, சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் இங்கே ஒன்றிணைந்து இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. வேற்றுமையிலும் ஒற்றுமை காண்பதைப் போல் இவ்வாறான இணைவுகள், எமது மக்களுக்கான சேவைகளின்போது மிகுந்த உற்சாகத்தை அளிப்பதாக உள்ளது. இதற்காக நான் சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன், எனத் தெரிவித்தார்.

# மலையக மக்களுக்கு "சொந்த வீடு - சொந்த காணி"

மலையக சிவில் அமைப்புக்கள் ஒன்றுசேர்ந்து ஏற்பாடு செய்துள்ள சர்வதேச தொழிலாளர் தின நிகழ்வு, இம்முறை லிந்துலையில் நடைபெறுகிறது. மலையக சிவில் அமைப்புக்களான அடையாளம் மற்றும் மலையக சமூக ஆய்வு மையம் ஆகியவற்றோடு புதிய உதயம் இளைஞர் கழகமும் சர்வதேச தொழிலாளர் தின நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளன.

மலையகத் தொழிலாளர்களுக்கு சொந்த வீடு, சொந்த காணி என்ற தொனிப்பொருளில் 2014ஆம் ஆண்டுக்கான சர்வதேச தொழிலாளர் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. தொழிலாளர்களின் உரிமைகளை முன்னிறுத்தி, தொழிலாளர் தின ஊர்வலமும் இடம்பெறவுள்ளது. அதன் பின்னர் மலையக மக்களின் வீடு, காணிப் பிரச்சினை தொடர்பாக பிரகடனம் ஒன்று முன்வைக்கப்படவுள்ளது. அத்தோடு மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பான கோரிக்கைகள் பலவும் முன்வைக்கப்படவுள்ளன.

# ஆனந்த அழுகுரல்...!

இத்தனை நாளும்
சத்தமில்லாத வானம்
இன்று மட்டும்
குரல் ஒலியால் நடுங்குகிறது...

நெல்மணிகள்
விதைத்த நிலங்கள்
வறண்டு போச்சு...
இதயம் இன்றும்
இருண்டு போச்சு!

எங்கள் உழைப்பின்
உதிரத்தில்
துளியேனும் மாற்றமில்லை...!
கறுப்பாகத்தான்
காலம் இன்னும் ஓடுகிறது...!!

மறைந்த வருடத்தோடு
வளர்ந்த வருடத்தை
மதிப்பீடு செய்து பார்த்தேன்...
குத்தூசி ஒன்று
குத்துகிறது...
கத்தும் சத்தம்
காதில் விழுகிறதா?

விதண்டாவாதம்
விந்தை செய்கிறது
இருண்ட வாழ்வுதான்
இன்னும் தொடர்கிறது

இத்தனை நாளும்
சத்தமில்லாத வானில்
மொத்தக்குரலும் ஒலிக்கிறது...
தொழிலாளர் வாழ்கவென்றும்
துன்பங்கள் நீங்குகவென்றும்

அகிலம் முழுவதும்
ஆதரித்த குரலோடு
அழுகுரலும் இன்று
ஆனந்தத்தில்...!

மிகிந்தலை ஏ.பாரிஸ்





# தாயின் கண்ணீருக்கு நியாயம் கிடைக்குமா ?

தொகுப்பு :ராஜு




குருநகர் பகுதியைச் சேர்ந்த ஜெரோன் ஜெயரோமி கொன்சலிட்டா என்ற இளம் பெண் கடந்த ஏப்ரல் மாதம் 13ஆம் திகதி காணாமல் போன நிலையில் மறுதினம் அப்பகுதியில் உள்ள கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த பெண் தற்கொலை செய்துகொண்டதாக ஆரம்பத்தில் யாரும் கருதியபோதும் அதன்பின் இடம்பெற்ற விசாரணைகள், மரண சடங்கில் கலந்துகொண்ட பொது மக்கள் இச்சம்பவம் தொடர்பில் தமக்கு சந்தேகம் உள்ளதாக தெரிவித்ததை அடுத்து இக்கொலையின் மர்ம முடிச்சு அவிழ்ந்துள்ளது.

அவற்றின்படி, குறித்த பெண்ணின் மரணத்திற்கு இரு பாதரிமாரின் தொந்தரவே காரணம் என்ற தகவல் கசிய ஆரம்பித்தது. இது தொடர்பில் மரணமடைந்த பெண்ணின் தாயான ஜெரோன் மேரி புஸ்பராணி தெரிவிக்கையில், "எனது மகள் படித்துவிட்டு வீட்டில் இருந்த நிலையில் அருகில் இருந்த பெரிய கோவில் சபையினுடைய இரு பாதிரிமார் எனது மகளை மறைக்கல்வி போதிக்க அனுப்புமாறு கோரினர். வீட்டில் சும்மாதானே இருக்கிறாள், போய் மறைக்கல்வி கற்பிப்பது நலலம்தானே என நானும் ஓம் என்று விட்டுட்டேன். ஆனால் மறைக் கல்வி போதிக்கச் சென்ற எனது மகளை அங்கிருந்த பிரதான பாதிரியாரின் உதவியாளர்களான திருச்செலவம் குயின்றன் பெர்னாண்டோ, மற்றும் நிக்சன் ஆகிய இருவரும் தொடர்ச்சியாக எனது மகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்து வந்தனர்.

அங்கிருந்து வந்ததும் எனது மகள் ஒரே சோகமாய் அமர்ந்திருப்பாள். அவளது தொலைபேசிக்கு ஒரே அழைப்புவரும். அதை அவள் கட் பண்ணுவாள். இந்நிலையில் அவளிடம் நடந்தவற்றை விசாரித்தேன். அப்போதுதான் அவள் கூறிய கருத்துக்கள் எனக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அங்கிருந்த உதவிப் பாதிரியாரான திருச்செல்வம் குயின்றன் பெர்னாண்டோ என்பவர் தன்னை காதலிக்குமாறு எனது மகளை கேட்டுள்ளார். அதற்கு அவள் மறுப்புத் தெரிவிக்க, "எங்க போனாலும் என்னை மறக்கக்கூடாது என்னுடன் தொடர்பில இருக்கணும் எனக்கூறியதுடன் மேலே உள்ள தனது றூமுக்கும வருமாறு உதவிப் பாதிரியார் நிக்சன் வற்புறுத்தியுள்ளார். இதனை வெளியே யாரிடமும் சொல்லக் கூடாது, சொன்னால் உன்னைப் பற்றிகூடாமல் சொல்லுவன்" என மிரட்டியுள்ளார்.



அதன்பின் எனது பிள்ளை வெளியில் போறதே குறைவு. ஒரே பயந்து போய் இருப்பாள். அவளுடைய தொலைபேசிக்கு பலதடவைகள் கோல் வந்துள்ளது. அதன்பின்தான் அவள் இவ்வாறு செய்துள்ளாள். ஆகவே எனது மகள் இறப்பதற்கு இந்த நாசம் கெட்ட உதவிப் பாதிரியாரே காரணம்" என அழுது புலம்புகிறார்.

குடுமப நலனினை கருத்தில் கொண்டு மறைக்கப்பட்ட இச்சம்பவத்தில் வெளிப்படையாக இரு மறைமாவட்ட உதவிப் பாதிரிமார்கள் சம்பந்தப்பட்டுள்ளனர். இதனையறிந்த ஊர் மக்கள் திரண்டு பெண்ணின் கொலை தொடர்பில் நீதிகோரி மறைமாவட்ட ஆயர் இல்லத்தின்முன் ஆர்ப்பாட்டம் ஒன்றினையும் மேற்கொண்டனர்.

இதனை அடுத்து சில பாதிரிமார்கள் மரண வீட்டிற்கு வந்து ஆறுதல் படுத்தும் முயற்சியிலும், சம்பவத்தை இருட்டடிக்கும் முயற்சியிலும் ஈடுபடுவதாக தெரிவிக்கப்படுகிறது. 'மரணமடைந்த பெண் மிகவும் அமைதியான, பண்புள்ள, மறைக்கல்வி போதித்து வந்த ஆசிரியை என பொதுமக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இது இவ்வாறிருக்க, குறித்த உதவிப் பாதிரியார் உயிரிழந்த பெண்ணின் கைத்தொலைபேசிக்கு அனுப்பியதாக தெரிவிக்கப்படும் குறுந்தகவல்கள் தற்போது மீட்கப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது. அக்குறுந்தகவல்களின் மூலம் உதவிப் பாதிரியாரின் முகத்திரை கிழிந்துள்ளது. மறைக் கல்வியையும் சமயத்தையும் போதிக்க வேண்டிய பாதிரியார் காமத்தையும் காமலீலைகளையும் போதிக்க முயன்றமையும் மதத்தின் பெயரால் பாலியல் இம்சை செய்தமையும் தெரிய வந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவே, இவ்வாறான பாதிரிமார் தொடர்ந்தும் தேவையா? என்பதை அந்த மதம்சார்ந்த எமது சமூகம் முடிவெடுக்கவேண்டும். இது போன்று வேறு பெண்களுக்கு நடக்காது என்று என்ன உத்தரவாதம்? இதுபோன்ற மதகுருமார்கள் ஒரு சிலரின் நடவடிக்கைகளினால் கடவுள் நம்பிக்கையே கேள்விக்குறியாகிறது. மதத்தின் பெயரால் காமலீலை செய்யும் கயவர்களை எமது பிரதேசத்தில் இருந்து விரட்டுவோம். கொலை செய்தவனை விட தூண்டியவனே குற்றவாளியாகின்றான்.

இப்பின்னணியில், குறித்த யுவதியின் மரணத்திற்கு குருநகர் பகுதியில் உள்ள மறைக்கல்வி தேவாலயத்தில் பணிபுரியும் இரு உதவிப் பாதிரிமாரே காரணம் எனப் பெற்றோரும், அயலவர்களும், பொதுமக்களும் கூறிவரும் நிலையில் இவ்விவகாரம் நீதிமன்றினால் தற்போது கையாளப்படுகின்றது.

இதுதொடர்பிலான நீதவான் விசாரணை யாழ். நீதிமன்ற நீதவான் பொ.சிவகுமார் முன்னிலையில் கடந்த மாதம் 23ஆம் திகதி நடைபெற்றபோது, யுவதியின் தாயாரான ஜெரோம் புஸபராணி வாக்குமூலமளிக்கையில், "எனது மகளின் மரணத்திற்கு ஆயர் இல்லத்தில் பாதிரியார்கள் இருவரே காரணம்" எனத் தெரிவித்தார். அவரது தந்தையான புனோரி ஜெரோம் சாட்சியமளிக்கையில், "எனது மகள் கொலை செய்யப்பட்டு கிணற்றில் போடப்பட்டிருக்கலாம்" எனத் தாம் சந்தேகிப்பதாக தெரிவித்தார். இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இம்மாதம் 12 ஆம் திகதி நடத்துவதாக நீதவான் அறிவித்துள்ளார்.

இந்நிலையில், கொன்சலிற்றாவின் மரணத்திற்கு காரணம் என பெற்றோர்களினால் கூறப்படும் இரு பாதிரியார்களையும் யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக யாழ். பிரதேச சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யு.பி.விமலசேன தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில், கொன்சலிற்றாவின் தொலைபேசிக்கு இரு பாதிரியார்களின் கையடக்கத் தொலைபேசிகளிலிருந்து ஏற்படுத்திய அழைப்புக்களின் விபரங்கள் தொடர்பில் நீதிமன்றின் உத்தரவின் பேரில் தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றன. அந்த அழைப்புக்களின் விபரங்களுடனும், சட்ட வைத்திய அதிகாரியின் உடற்கூற்று பரிசோதனையின் பிரகாரமும், மே மாதம் 12ஆம் திகதி இரு பாதிரியார்களையும் நீதிமன்றில் ஆஜர் படுத்தவுள்ளதாகவும், நீதிமன்றின் உத்தரவில் நீதிவான் விசாரணையும் இடம்பெற்றுவருகின்றதாகவும் யாழ்.பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மேலும் கூறினார்.

இந்த பெண் தற்கொலையா?, கொலையா என்பது ஒருபுறமிருக்க இவ் மரணத்திற்கு முற்றுமுழுதாக குறித்த உதவிப்பாதிரியாரே காரணமென முழுமையான ஆதாரங்கள் இருப்பதாக குறித்த பெண்ணின் உறவினர்களும் அயலவர்களும் உறுதியுடன் கூறுகின்றனர். இதனையும் கருத்தில் கொண்டு எமது சமூகத்திற்கு முன்மாதிரியாக பொலிஸாரும் நீதித்துறையினரும் இந்த விடயத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

வாரமலர்
தினமுரசு

த.பெ.இல:- 167. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

# உழைப்பவராவோம்!

மே மாதம் முதலாம் திகதி உலக தொழிலாளர் தினம். உழைப்புக்கேற்ற ஊதியம். ஊதியத்திற்கேற்ற உழைப்பு என்பதையும் தொழிலாளர்களின் பாதுகாப்பு, உரிமைகள் மற்றும் முதலாளி வர்க்கத்தின் சுரண்டலுக்கு எதிரான போராட்டம் என்பவற்றை வலியுறுத்தும் சிவப்பு நாள்.

தொழிலாளர்கள் தயாராக முன்னரே அரசியல் கட்சிகள் ஆளுக்கொரு மாவட்டத்தை குறிவைத்தபடி தமது ஆரவாரங்களை தொடங்கிவிட்டன. அந்தக் கூட்டங்களில் தொழிலாளர்கள் கலந்துகொண்டு கொடி பிடிக்கலாம். கோஷம் போடலாம். ஊர்வலமும் போகலாம். தேர்தல் ஊர்வலங்களைப் போல் தலைவர்கள் முன்வரிசையில் அணி வகுத்து நடப்பார்கள். அவர்களுக்குப் பின்னால் ஏற்பாடு செய்யப்பட்டவர்கள் அடிவயிற்றிலிருந்து குரல் எடுத்து கோஷங்களையும். புகழ்ச்சி வார்த்தைகளையும் கத்திக் கொண்டுவருவார்கள்.

கூட்டங்களில் தொழிலாளர்களின் மீட்பர்கள்போல் பேச்சாளர்கள் உணர்ச்சிக் கொந்தளிப்பில் பேசுவார்கள். இவற்றையெல்லாம் பார்க்கும்போது அடுத்த நாளான மே இரண்டாம் திகதியிலிருந்து தொழிலாளர்களின் அத்தனை பிரச்சினைகளும் தீர்ந்துவிடும்போல் இருக்கும்.

ஆனால், இவை எதுவும் உண்மை இல்லை. எல்லாமும் சம்பிரதாய நாடகங்கள் என்பதை அதே பிரச்சினைகளும், அதே சுரண்டல்களும், அதே முதலாளித்துவ அடக்குமுறைகளும் பறைசாற்றிக் கொண்டிருக்கும்.

அண்மைக் காலமாக குடும்ப வறுமை காரணமாக விவாகரத்துக்களும், பிள்ளைகளை பெற்றோர்களே கொலை செய்வதும், கல்வியை சீராகத் தொடர முடியாமல் பாடசாலையிலிருந்து இடைவிலகல் செய்வதுமான சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

எத்தனையோ அமைச்சுக்கள். எத்தனையோ திணைக்களங்கள். அதிகாரிகள் வளங்கள் இருந்தபோதும் இரண்டு கோடி சனத்தொகையைக் கொண்ட எமது நாட்டின் முழுமையான பிரச்சினைகளை இன்னும் மதிப்பிட முடியாமல் நாம் இருக்கின்றோம் என்பது வெட்கத்துக்குரியது.

மாவட்டங்கள் வாரியாக மக்களின் வாழ்வாதாரத்தையும், வளங்களையும், மேம்படுத்துவதற்கான வாய்ப்புக்களையும் நாம் சரியாக மதிப்பிட்டு செயற்பட்டால் பட்டினிக்கும், வறுமைக்கும் இலங்கை மக்கள் முகங்கொடுக்கத் தேவை இருக்காது.

உழைத்து உண்ணும் உறுதியோடு மக்கள் இருக்கின்றபோது அவர்களை இனங்கண்டு திட்டங்களை வகுத்து மூன்று வேளை உணவுக்கும், சீரான கல்விக்கும், பாதுகாப்பான உறைவிடத்துக்கும், உடைக்கும் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். இளைஞர், யுவதிகள் அரச தொழில் மற்றும் அரச உதவிகள் என்பவற்றை மட்டும் தேடிக் கொண்டு இருக்காமல் சுயமாக தொழில்களை உருவாக்கவும், மற்றவர்களுக்கும் தொழில் வழங்கவும் முயற்சிக்கவேண்டும்.

இந்த உழைப்பவர் தினத்தில் அப்படி ஒரு உறுதியெடுப்போம். அதுதான் உழைப்பவர்களின் உரிமைக்காகப் போராடி தமது உயிர்களைத் தியாகம் செய்த தியாகிகளுக்கு நாம் செய்யும் மரியாதையாகும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

மாகாண சபையில் சில குறைபாடுகள் இருந்தாலும் அதை ஒரு ஆரோக்கியமான புள்ளியிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் அது தமிழ் மக்களை முடக்க நினைத்தவர்களுக்கு தகுந்த பதிலடியாக இருந்திருக்கும். முதலமைச்சரையும் ஆற்றல் உள்ள மனிதராக போற்றியிருக்கலாம். ஆனால், வட மாகாணம் முடக்கப்பட வேண்டும், வட மாகாண சபை முழுக்க முழுக்க தமிழர்களின் சபை. அப்படி ஒரு சபை எந்தச் சந்தர்ப்பத்திலும் இன்னொரு பாய்ச்சலுக்கு தயாராகிவிடக்கூடாது.

# அரசியலுக்கு அப்பால்...

வட மாகாணத்தில் இரண்டு வகையான அரசியல்போக்கு முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. வட மாகாண சபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அதிகாரத்தின்கீழ் உள்ளது.

கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் வட மாகாண சபைக்கான தேர்தல் நடைபெற்றது. கூட்டமைப்பு பெருவாரியான வெற்றி பெற்றது. 13ஆவது திருத்தச் சட்டத்தில் தமக்கு நம்பிக்கை இல்லை என்றும், மாகாண சபை முறைமையானது தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வுக்கான ஒரு அடிப்படையாக அமையாது என்றும் கூறினார்கள்.

ஆனால், மாகாண சபையை தாமே வெல்லவேண்டும். அவ்வாறு வெல்வதன் ஊடாகவே தமிழ் மக்கள் தமிழ்க் கூட்டமைப்பினரை தமது ஏக தலைமைகளாக ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்ற செய்தியை சர்வதேச சமூகத்துக்கு காட்ட முடியும், சர்வதேச தளத்தில் இலங்கைக்கு எதிராக பணியாற்ற முடியும் என்று கூறினார்கள்.

முன்னாள் நீதிபதி ஒருவரை முதலமைச்சராக்கினால் அவர் இலங்கையின் சிங்கள அரசுடன் விடயங்களை சட்டரீதியாக அணுகி தமிழ் மக்களுக்கு தீர்வுகளைப் பெற்றுத்தருவார் என்றார்கள்.

தேர்தலில் வென்றதும், முதற்கட்டமாக உயர் பாதுகாப்பு வலயங்களை இல்லாது செய்து, படையினரை வடக்கிலிருந்து விரட்டுவோம், ஆளுனரை விரட்டுவோம் என்றார்கள்.

யாழ். குடாநாட்டுக்கு காப்பெட் வீதிகள் போடப்பட்டது, இராணுவ வாகனங்கள் பயணிப்பதற்கும், தென்னிலங்கை சிங்களவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்து செல்வதற்கும் என்றும் மின்சாரம் வழங்கும் பணிகள் இராணுவத்திற்காகவே துரிதமாக முன்னெடுப்பதாகவும் கூறினார்கள்.

தமிழ் மக்களுக்கு அபிவிருத்தியும் வேண்டாம், வேலைவாய்ப்பும் வேண்டாம். தம்மைத் தாமே ஆளுகின்ற அரசியல் தீர்வுதான் வேண்டும். ஆகவே அதுவரையில் தமிழ் மக்களின் அரசியல் பலமானது ஏனையவர்களின் கைகளுக்கு சென்றுவிடக்கூடாது. ஆகையால், கூட்டமைப்பினர்வசமே அது முடங்கிக் கிடக்கும் இதில் உள்ள தந்திரோபாயத்தை தன்மானமுள்ள தமிழ் மக்கள் புரிந்துகொள்வார்கள் என்றார்கள்.

தமிழ் மக்களுக்கு தனியான ஆளுமைத் தீர்வொன்று வழங்காமல் இந்த அரசு எதை வழங்கினாலும் அது சலுகை அரசியல் என்றும், வெளிநாடுகள் கொடுக்கும் பணத்தைக்கொண்டு செய்கின்றார்கள். இந்த அரசு தமிழ் மக்களுக்காக எதையும் செய்யவில்லை என்றும் கூறினார்கள்.

பெரும்பான்மையான தமிழ் மக்களுக்கு அல்லது கூட்டமைப்பு கூறுவதுபோல் தன்மானமுள்ள தமிழ் மக்களுக்கு கூட்டமைப்பு கொடுக்கும் கயிறை பல்லில் படாமல் விழுங்குவதென்றால் அப்படி ஒரு விருப்பம். தேர்தல் முடிந்து இப்போது ஏழு மாதங்களாகிவிட்டது.

பாதுகாப்பு வலயம், இராணுவம் வெளியேற்றம், ஆளுனர் வெளியேற்றம். இவை எவையும் இதுவரை நடைபெறவில்லை. கடந்த வாரம் ஜனாதிபதி ஊடகவியலாளர்களுடன் பேசும்போது எக்காரணத்துக்காகவும் வடக்கில் இருந்து இராணுவம் அகற்றப்பட மாட்டாது என்று திட்டவட்டமாக கூறிவிட்டார். ஆளுனர், பிரதம செயலாளர் விவகாரங்களையும் அவசரப்படாமல் கிடப்பில் போட்டுவிட்டார். சும்மா இருந்த படையினர் இப்போது பல்வேறு தளங்களில் விபரங்களை திரட்டுவதில் முனைப்புக் காட்டிவருகின்றனர்.

கூட்டமைப்பு ஜெனிவாவில் கூத்தாடி முடித்துவிட்டு தென்னாபிரிக்காவுக்கு அரசியல் கலை நிகழ்ச்சிக்காக சென்றுள்ளது. கூட்டமைப்பு என்ன கூத்தாடினாலும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வராவிட்டால் எதுவும் இங்கே நடக்காது என்று அரசாங்கம் தெளிவாக கூறியுள்ளது.

இந்த நிலையில் வட மாகாண முதலமைச்சர் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் கலந்துகொண்டு, தமிழ் மக்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்ய வேண்டும் என்றும் அதை நாங்கள் செய்யாவிட்டாலும் அரசு நேரடியாக செய்துவிடும் என்பதாலேயே தாம் மாகாணத்துக்குள் மத்திய அரசு தனது [illegible]டி வேலைத்திட்டத்தை செய்வத[illegible]க ஏற்படுத்தியுள்ள ஒருங்கி[illegible]ணப்புக்குழு என்ற பொறிமு[illegible]தள் நுழையவேண்டிய கட்டாய[illegible]பட்டுள்ளதாகவும் வியாக்கிய[illegible]ம் கூறியுள்ளார்.

அவர் என்ன வியாக்கியானம் கூறினாலும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் இணைத் தலைவராக கலந்துகொண்டு ஜனாதிபதியின் மகிந்த சிந்தனை வேலைத்திட்டத்தையும், மத்திய அரசின் வேலைத்திட்டங்களையும் திட்டமிடுகின்ற சபையில் கௌரவமாக இருந்துகொள்வது வரவேற்கத்தக்கது.

கூட்டமைப்புக்கும், முதலமைச்சருக்கும் விருப்பமில்லாவிட்டாலும் இது காலத்தின் கட்டாயம். அவர்கள் இதற்குள் வந்துதான் ஆகவேண்டும். இதற்கு வெளியால் நின்றுகொண்டு எதைக் கூறினாலும் அதை யாரும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்போவதில்லை.

மாகாண சபையில் சில குறைபாடுகள் இருந்தாலும் அதை ஒரு ஆரோக்கியமான புள்ளியிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் அது தமிழ் மக்களை முடக்க நினைத்தவர்களுக்கு தகுந்த பதிலடியாக இருந்திருக்கும். முதலமைச்சரையும் ஆற்றல் உள்ள மனிதராக போற்றியிருக்கலாம்.

ஆனால் வட மாகாணம் முடக்கப்படவேண்டும், வடமாகாண சபை முழுக்க முழுக்க தமிழர்களின் சபை. அப்படி ஒரு சபை எந்தச் சந்தர்ப்பத்திலும் இன்னொரு பாய்ச்சலுக்கு தயாராகிவிடக்கூடாது. இப்படியெல்லாம் யார் விரும்பினார்களோ, அதை கச்சிதமாக தற்போது கூட்டமைப்பு செய்து கொண்டிருக்கின்றது. எதிரிகளினதும், சதிகாரர்களினதும் விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் இவர்களை தன்மானத் தமிழர்கள், இனத்தின் துரோகிகளாக நினைப்பார்களோ தெரியாது.



மறுபக்கத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா புலிகள் இருந்த காலப்பகுதியிலேயே தமிழ் மக்களுக்கு நிவாரணம் போகவேண்டும், மக்களின் போக்குவரத்து தேவை, பட்டினிச் சாவுக்கு மக்கள் முகங்கொடுத்துவிடக்கூடாது என்றால், மத்திய அரசுடன் இணக்கமாகப் பேசவேண்டும். அரசு கட்டுப்பாட்டுத் தளர்வுகளையும், பாதுகாப்பையும், கப்பல், விமானம் போன்றவற்றில் போக்குவரத்துக்கும் உதவினாலே, நாட்டின் ஏனைய பகுதியோடு தொடர்பு துண்டிக்கப்பட்டுக்கிடக்கும் யாழ்.குடாவுக்கு விடியல் பிறக்கும் என்று கருதி மத்திய அரசுடன் பங்காளித்துவ இடத்தைப் பெற்றுக் கொண்டு அதைச் சாதித்தார்.

யாழ். குடாநாட்டை விட்டு தென்னிலங்கைக்கு வருவதற்காக ஈ.பி.டி.பியின் அலுவலக வாசல் மிதிக்காதவர்கள் எவரும் இருக்க முடியாது. அப்போது தொடக்கம் இப்போதுவரை அரச தொழில் வாய்ப்புக்காக ஈ.பி.டி.பி.யின் அலுவலகம் வராதவர்கள் இருக்கமுடியாது.

ஈ.பி.டி.பி.க்கு வாக்குகள் போட்டாலும் போடாவிட்டாலும் கிடைத்த அதிகாரத்தைக் கொண்டு தன்னால் முடிந்ததையும் மத்திய அரசிடமிருந்து பெற்றுக்கொண்டதையும் மக்களுக்கு வழங்கிக் கொண்டிருப்பதே தனது கடமை என்று செய்துகொண்டிருக்கின்றார்.

சாதாரண மக்களைவிடவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் உதவிகேட்டுப் பெற்றவர்களில் அதிகமானவர்கள் இன்று கூட்டமைப்பு கண்டுபிடித்திருக்கும் தன்மானத் தமிழர்கள்தான். தனது முயற்சியால் தொழில் பெற்றவர்களும், வேறு உதவிகள் பெற்றவர்களும் நன்றி உணர்வோடு தன்னோடு அணி திரண்டிருந்தால் யாழ்ப்பாணத்தில் தொண்ணூறு வீதமான மக்கள் இருந்திருப்பார்கள் என்று அமைச்சர் எதிர்காலத்தில் கூறக்கூடும்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அளவுக்கு தென்னிலங்கையில் சிங்கள மக்களுக்கோ, ஏனையவர்களுக்கோ சேவைகளைச் செய்திருந்தால் மக்கள் நன்றியோடு கொண்டாடுவர்கள். யாழ்ப்பாணத்தில் எதைச் செய்தாலும் அது ஆழிக்கடலுக்குள் கப்பல் மூழ்கிய கதைதான் என்று யுத்தத்திற்குப் பின்னர் யாழ்ப்பாணத்துக்கு வந்துசென்ற அமைச்சர்கள் கூறுவார்கள்.

இத்தனைக்குப்பிறகும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடக்குடன் குறிப்பாக, யாழ்ப்பாணத்துடன் தனது நீண்ட காலத்தையும், நேரத்தையும் செலவழித்துக் கொண்டும், அதிக காலம் அங்கேயே தங்கியிருந்து கொண்டும் இருப்பதற்குக் காரணம், அரசியலுக்கு அப்பாலும் அவருக்கு இருக்கும் கடமைப்பாடும், பொறுப்பும் தான் என்பதை கடந்த 28ஆம் திகதி யாழ்.மாநகர சபையில் 87 பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வில் ஆற்றிய உரையிலும் குறிப்பிட்டிருந்தார்.

அதாவது இந்தப் போராட்டத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் தானும் ஒருவன் என்பதால் போராட்டத்தை தலையேற்றவர்கள் தவறாக நடத்தியதால் தமிழ் மக்கள் பல இழப்புக்களுக்கும், அழிவுகளுக்கும் முகங்கொடுக்க நேரிட்ட துயரம் நடந்துவிட்டது. ஆகவே அதிலிருந்து எமது மக்களை கரையேற்றி விடுகின்ற அதேவேளை அவர்களின் எதிர்காலத்தை பாதுகாப்பானதாகவும், அபிவிருத்தி கொண்டதாகவும் மாற்றிக் கொடுக்கவேண்டிய கடமைப்பொறுப்பு தனக்கு இருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

வட மாகாண முதலமைச்சரோ விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொள்ளாதவர். மாறாக அதில் ஈடுபட்டவர்களையும், சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவர்களையும் தண்டனையின் பெயரால் சிறைகளுக்கு அனுப்பியவர். தனது மகன்களை சிறப்பாக படிக்கச் செய்து தென்னிலங்கை அரசியல் தலைவர்களுடன் சம்மந்தியாகி வடக்கு, கிழக்கு அவலங்களிலிருந்து மிகவும் தூரத்தில் வாழ்ந்தவர்.

சுருக்கமாகக் கூறினால், 2009 ஆம் ஆண்டு மே மாதம்வரை தமிழர்களின் அரசியல் உரிமையையும், அதில் இருக்கின்ற நியாயங்களையும் கவனத்துக்குரிய தளத்தில் பேசாதவர்.

இப்போது எதிர்ப்பு அரசியலின் கூடாரத்துக்குள் வசதியாக அரசியல் செய்கின்றவர். எப்போதும் எதிர்பார்ப்புக்குரிய வார்த்தைப்பிரயோகத்தை பேசி தனது புத்திசாலித்தனத்தை நிருபிக்க முயற்சிக்கின்றவர் இப்படியெல்லாம் விமர்சனங்கள் உண்டு.

இவற்றையெல்லாம் தாண்டி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் முதலமைச்சர் விக்கினேஸ்வரனும் வட மாகாணத்தை யுத்தப் பாதிப்பிலிருந்து விரைவாக மீளக்கட்டியெழுப்பவும், அர்த்தபூர்வமான மீள்குடியேற்றத்தைச் செய்யவும், அபிவிருத்திப் பணிகளை துரிதப்படுத்தவும் பாடுபடுவார்களேயானால் அது நிச்சயமாக வடக்கின் ஒளிமயமான எதிர்காலத்துக்கு வழிவகுக்கும்.

அதற்கு அரசியல் வேறுபாடுகளையும், கொள்கை முரண்பாடுகளையும் கடந்து மக்களின் நலனை முன்னிறுத்தி பயணிக்க வேண்டும். இறுதியாக நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கலந்துகொண்ட கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களும், மாகாண சபை உறுப்பிர்களும் கூட்டத்தை குழப்பும்விதமாகவே நடந்துகொண்டனர். அரசியல் விருப்பு வெறுப்போடு முரண்பட்ட கருத்துக்களை கூறினார்கள்.

வட மாகாண சபையைப் போல் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் தமது உறுப்பினர்களின் அமளிகளைப் பார்த்துக் கொண்டு முதலமைச்சர் இருந்துவிட்டபோதும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவோ கூச்சல் குழப்பங்கள் கட்டுப்படும் பொருட்டு அங்கு உரையாற்றும்போது, இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமானது மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் நோக்கோடு நடைபெறுகின்றது. இங்கே ஒவ்வொருவரும் தமது அரசியல் நோக்கத்தோடு விவாதித்துக் கொண்டிருக்கமுடியாது. எனவே அரசியல் கணக்கு வழக்குகளை கைவிட்டு ஆக்கபூர்வமாக சிந்திப்போம். அதற்கான கூட்டமாக இதை நடத்துவோம் என்று கூறியிருந்தார்.

இவற்றைப் பார்க்கும்போது, அரசியலுக்கப்பால் மக்கள் பிரதிநிதிகள் சிந்திக்கவேண்டியுள்ளது. அரசியல் காழ்ப்புணர்வை முன்னிறுத்தி குழப்பங்களை தோற்றுவிக்கும் கலாசாரம் ஒழியவேண்டும்.

அரச நிதி, அரச வளம், அரச அதிகாரம் இவற்றை மக்களுக்காக பயன்படுத்தும்போது, இவர்கள் வாக்காளர்களா? எத்தனை வாக்குகள் இவர்களிடமிருந்து கிடைக்கும் என்று கணக்குப் பார்க்கும் எந்தவொரு அரசியல்வாதியாலும் மக்களுக்கு அர்ப்பணிப்பு மிகுந்த தன்னலமற்ற சேவையை செய்ய முடியாது.

மதியூகி
எக்ஸ்ரே ரிப்போர்ட்



# தொடரும் ஏமாற்றங்கள்

அவள்முன் கௌரவமாய் காட்சி கொடுத்த தயாளன் காமுகனாய் அவளைக் கலைக்கத்தொடங்கினான்.

யாரோ வீட்டுக் கோடியில் அவளை அந்தரிக்க விட்டுவிட்டுப்போன காதலனை நோகவா?, இல்லை கணவனாய் ஒருநாள் கூட வாழாது மணிக்கூட்டை ஞாபகமாய் தந்துவிட்டு வெடித்த கணவனை நோகவா?, அல்லது அவளுக்கு உயிர்கொடுத்து உதிரம் கொடுத்து இந்த அநியாயம் நிறைந்த அக்கிரமம் புரியும் மனிதர்களுடன் அந்தரிக்க விட்டு அவளை ஆதரிக்காத அம்மா அப்பாவை நோகவா...? யாரை நோக...? பரந்து விரிந்த அவளது வர்ணங்கள் நிறைந்த உலகம் சுருங்கிக் கொண்டது.

தொடர்ந்து எல்லா முயற்சிகளும் ஏமாற்றமாகியது. விரக்தியே மிச்சமாய் அவள்மீது அவளுக்கே வெறுப்பாயிருந்தது. அன்றாட உணவு அவளது அத்தியாவசிய தேவைகள் எல்லாவற்றுக்கும் கையேந்தத் தொடங்கினாள்.

நிறுவனங்கள் பல ஊனமுற்றோர் பலருக்கு தொழில் வாய்ப்புக்கள் வழங்குவதாகச் சொன்னார்கள். நிறுவனங்களைத் தேடிப்போனாள். உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்கள் எதையும் மிச்சம் விடவில்லை. எல்லா இடங்களுக்கும் தனது செயற்கைக்காலின் துணையோடு ஏறாத நிறுவனங்களில்லை. அவளது தகைமைகளை அவர்கள் நேர்முகச் சந்திப்புகளில் கேட்டுப் பதிவுசெய்து கொண்டார்கள். அவளுக்கு நிச்சயம் ஒரு வேலை கிடைக்குமென்று பலர் நம்பிக்கை கொடுத்தார்கள்.

அழகான வாகனங்கள் வாசலில் நிற்கும் அழகான ஆடைகள் உடுத்திய மனிதர்கள் அந்த நிறுவனங்களில் பணிசெய்து கொண்டிருந்தார்கள். அவர்களது முகங்களில் நிறைந்த வழியும் கருணையும் சிரிப்பும் தன்னைக் காக்குமென்று நம்பினாள். ஆனால் எல்லோரையும் நம்பி ஏமாந்தாள். எந்த நிறுவனமும் ஒரு சதமதானும் உதவவுமில்லை தொழிலையும் கொடுக்கவில்லை.

அப்படித்தான் ஒரு நிறுவனத்திடம் உதவி கேட்டுச் சென்ற நேரம் அவளைப்போலொரு முன்னாள் போராளியொருவனைச் சந்தித்தாள். பெயர் பிரபாகரன். பிரபு என்று அழைப்பார்கள். அவனை ஏற்கனவே அறிந்திருக்கிறாள். அவனும் தனது இரண்டு கால்களையும் இழந்திருந்தான். ஜெயசிக்குறுய் சமரில் அவன் காயமடைந்து இவள் போல இருகால்களையும் நாட்டுக்காகக் கொடுத்திருந்தான். இவள் போல செயற்கைக்கால் பொருத்தி நடக்கப்பழகி நடந்து வந்திருந்தான்.

சினேகபூர்வமான புன்னகையால் அவளை இனங்கண்டு அவளைப்பற்றி அவள் அனுபவிக்கும் வாழ்வு பற்றியெல்லாம் விசாரித்தான். அவளைத் துரத்திய பெற்றோர்கள் மீதுதான் கோபப்பட்டான். தானும் ஒரு ஊனமடைந்தவனாக இருப்பதால் சமூகத்தின் பாராமுகம் பற்றி நிறையவே அனுபவித்திருப்பதாகச் சொன்னான்.

அவனுக்கு அடைக்கலம் கொடுத்துள்ள 4ம் ஒழுங்கை, கற்பகபுரம், பம்பைமடு, வவுனியா பகுதியில் அமைந்திருக்கும் Varodlife நிறுவனம் பற்றிச் சொன்னான். அந்த நிறுவனமானது பாதிரியார்களால் நடாத்தப்படுவதாகவும் அங்கே பல ஊனமுற்ற போராளிகள் குடும்பங்களுடனும் வாழ்வதாகவும் அங்கேயே தானும் இருப்பதாகச் சொன்னான். அந்த நிறுவனத்தில் தானும் இணைந்து கொள்ளலாமா என்பதை விசாரித்தாள். அந்நிறுவனத்திற்கு பொறுப்பாக உள்ள பாதிரியாருடன் கதைத்துவிட்டு அறிவிப்பதாக அவளது தொலைபேசி இலக்கத்தைப் பெற்றுக்கொண்டு போனான் பிரபு.

இருண்டுபோன தனது வாழ்வுக்கு Varodlife நிறுவனம் ஒளியேற்றுமென நம்பினாள். அவளை அங்கே சேர்த்து விடுவதாகச் சொன்ன காலிரண்டையும் இழந்த பிரபுவின் பதில் வருமெனக் காத்திருந்தாள். ஒருநாள் பிரபு அவளைத் தொடர்புகொண்டான். சற்றுப் பொறுத்திருக்கும்படியும் Varodlife நிறுவனத்தின் பொறுப்பான பாதிரியார் வெளியூர் சென்றுவிட்டதாகவும் அவர் வந்ததும் கட்டாயம் அவளை அங்கே சேர்த்து விடுவேனென்றும் வாக்குறுதி அளித்தான். காத்திருந்தாள் பிரபுவின் பதிலுக்காக...

சில வாரங்களின் பின்னர் பிரபு தொடர்பு கொண்டான். தன்னிடம் ஒரு சிறந்த வழி அவளுக்காக இருப்பதாகச் சொன்னான். அவள் இந்த அவலங்களில் இருந்து மீள வெளிநாடு போகும் நல்ல வாய்ப்பொன்று உள்ளதாகச் சொன்னான். அவள் விரும்பினால் வெளிநாட்டு ஒழுங்கைச் செய்துதருவதாகச் சொன்னான்.

வெளிநாடுபோகும் எதுவித எண்ணமும் இல்லாது அன்றாட வாழ்வை ஓட்டுவதற்குப் பிச்சையெடுக்காத குறையாய் இருக்க அதெல்லாம் தனக்கு சரிப்படாது என மறுத்தாள் அன்பினி. தொடர்ந்து அவளோடு கதைத்து வெளிநாட்டுக்கு அவள் செல்வதே சிறப்பென்பதை நிறுவினான் பிரபு.

எவ்வளவு காசு வேணும்? கேட்டாள் அன்பினி. இரண்டு லட்சம் இருந்தாப்போதும். என்றான். அவன்கூறிய ஐரோப்பா கனடா அவுஸ்ரேலியாவுக்குப் போக பல இலட்சங்கள் தேவையென்று பயந்தவளை நம்பிக்கை கொடுத்து வெளிநாட்டுக்குச் செல்லும் முடிவுக்கு அவளைத் தயார்படுத்தினான்.

இந்த வெளிநாட்டு ஆலோசனை நடந்து கொண்டிருந்த நேரம்... அவள் எதிர்பாராத சில தொலைபேசியழைப்புகள் அவளைத் தேடி வரத்தொடங்கியது. செத்துப்போன நம்பிக்கை துளிர்த்துச் செடியாகி மரமாகியது.

வெளிநாட்டிலிருந்து தாயகம் வந்து பணிசெய்து முள்ளிவாய்க்கால் வரையும் போய் முகாமுகளுக்கு வந்தவர்கள் சிலர் முகாமுகளிலிருந்து வெளியேறி தாம் வாழ்ந்த நாடுகளுக்குச் சென்றிருந்தனர். அவர்களில் சிலர் இவளைத் தொடர்புகொண்டனர். இவளுக்காக உதவ விரும்பினார்கள். அவர்கள் அவளுக்காக இரண்டு லட்சரூபாய் பணம் அனுப்பினார்கள்.

அவளுக்குள் வெளிநாட்டு ஆசையை விதைத்த காலிழந்த பிரபு இப்போது நாளுக்கு 3,4 முறை அழைக்கத் தொடங்கினான். அவளது வாழ்வில் நன்மை நிகழவேண்டுமென்ற அக்கறையுடன் கதைத்தான்.

ஒருநாள் இரவு தொடர்பு கொண்டவன்... நம்பிக்கையான ஸ்ரீவர் ஒருவரை மறுநாள் அழைத்துவருவதாகவும் அவளை வவுனியாவில் உள்ள ஓரிடத்துக்கு வரும்படியும் அழைத்தான்.

மறுநாள் அவன் சொன்ன நேரத்துக்கு அரை மணித்தியாலம் முன்னரே அந்த இடத்திற்குப் போனாள். பிரபு ஒருவரை அழைத்துவந்தான்.

இவர் என்ரை அக்காடை புருசன். என்ரை அத்தான். மட்டக்களப்பில இருக்கிறார். கனபேரை அவுஸ்ரேலியா, கனடா, ஐரோப்பா எண்டு அனுப்பியிருக்கிறார். என்னையும் அவுஸ்ரேலியாவுக்கு அனுப்பக்கேட்டவர், எனக்கு வெளிநாடு போக விருப்பமில்லை. அக்கா அத்தானெண்டு சொந்தபந்தமிருக்க ஏன் வெளிநாடெண்டு மறுத்திட்டன். ஆனா அன்பினி உங்கடை நிலைமை வேறை... சொந்த அம்மா அப்பாவே ஒதுக்கித் தனிச்சுப்போனியள்.

(ஏமாற்றங்கள் தொடரும்...)



# புலிகளின் வதை முகாமில் மணியம்

வதை 111

**புலிகளின் ஊடுருவல்களால் சீரழிக்கப்பட்ட இயக்கங்களும், புலிகளுக்கு சேவகம் செய்த ஐந்தாம் படைகளும்!**

புலிகள் என்னைக் கடத்திவந்து இந்த ஆனைக்கோட்டை முகாமுக்குக் கொண்டு வந்த நாளிலிருந்து, காலையும் மாலையும் என அநேகமாக எல்லா நாட்களும் நான் விசாரிக்கப்பட்டுக் கொண்டிருந்தேன். தயாபரன் என்பவன்தான் எனது பிரதான விசாரணையாளன். இடையிடையே வெளியிலிருந்து வரும் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த முக்கியமானவர்களும் வந்து ஏதாவது கேட்டுச்செல்வார்கள். தவிர இதே முகாமில் உள்ள முக்கியமானவர்களான சேவியர், சார்ள்ஸ், அம்புறோஸ் போன்றவர்களும் விசாரிப்பார்கள். காந்தி வாரத்தில் இரு முறையாவது கூப்பிட்டு விசாரிப்பான்.

புலிகளது விசாரணைகள் சுற்றிச் சுற்றி என்.எல்.எவ்.ரி - பி.எல்.எவ்.ரி இயக்கங்கள் சம்பந்தமாகவே கூடுதலாக இருக்கும். அதுவும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்குள்ளும், வெளியிலும் தமக்கு எதிரானவர்கள் யார் யாருடன் எனக்குத் தொடர்புகள் உண்டென்பதும் புலிகளது விசாரணைகளின் போது இடம்பெறும்.

புலிகளது விசாரணைகளில் இருந்து ஒன்றை என்னால் அவதானிக்க முடிந்தது. அதாவது நான்தான் என்.எல்.எவ்.ரி - பி.எல்.எவ்.ரி இயக்கங்களை மறைமுகமாக வழி நடாத்திவந்த முக்கியமான நபரென புலிகள் கருதினார்கள். அதை எப்படியும் நிரூபித்துவிட வேண்டும் என்பதில் பலத்த பிரயத்தனங்களில் ஈடுபட்டனர். ஏனெனில் புலிகளைப் பொறுத்தவரை எமது கம்யூனிஸ்ட் கட்சி போன்ற கட்சிகளை விடத் தமக்கு எதிரான ஆயுதப் போராட்ட இயக்கங்களைத்தான் தமது உடனடிப் பிரதான எதிரியாகக் கருதினார்கள். எனவே எப்படியும் என்.எல்.எவ்.ரி - பி.எல்.எவ்.ரி இயக்கங்களின் ஒரு சூத்திரதாரி அங்கத்தவர் என்றாவது என்னை நிரூபித்துவிட்டால், என்.எல்.எவ்.ரி இலிருந்த மணி (செல்வகுமாரன்) மற்றும் என்.எல்.எவ்.ரி - பி.எல்.எவ்.ரி இலிருந்த அன்ரன் (விவேகானந்தன்) ஞானம் (ஜீவன்) போன்றவர்களுக்குச் செய்ததுபோல எனக்கும் செய்துவிட்டு, "அவர் ஆயுதம் தாங்கிய எதிர் இயக்கத்தைச் சேர்ந்தவர்" என எனது கதையையும் முடித்துவிடலாம்.

ஆனால், என்னதான் புலிகள் முயன்றபோதிலும், என்.எல்.எவ்.ரி - பி.எல்.எவ்.ரி இயக்கத்திலோ அல்லது வேறு எந்தவொரு இயக்கத்திலோ நான் ஸ்தாபன ரீதியிலான தொடர்புகள் கொண்டிருந்ததற்கான சான்றுகளை புலிகளால் திரட்ட முடியவில்லை.

அத்துடன் புலிகள் எனக்குத் தண்டனை தந்தாலும் பரவாயில்லை என்ற திடமான நிலைப்பாட்டில் இருந்த நான், தமிழீழ கருத்தையும் நிராகரித்தே தொடர்ந்து கதைத்துவந்தேன். அத்துடன் நாங்கள் குறுகிய கண்ணோட்டம் கொண்ட தேசியவாதிகள் அல்ல. பரந்த கண்ணோட்டம் உள்ள சர்வதேசியத்துவவாதிகள் என்பதையும் தெளிவுபடுத்தி வந்தேன்.

ஆனால் என்னவோ தெரியவில்லை. எனது விசாரணைகளின் போதும் சரி. என்னை விடுதலை செய்தபோது கபிலம்மான் மூன்று மணித்தியாலங்கள் என்னுடன் உரையாடியபோதும் சரி. நான் தமிழீழக் கருத்தை ஏற்கவில்லை என்பதைத் தெளிவாகக் கூறியபோதும், புலிகள் அந்தக் கருத்தை ஏற்கும்படி என்னை மிரட்டவோ அல்லது என்மீது அதைத் திணிக்கவோ முயற்சிக்கவில்லை.

உண்மையிலும்கூட எனக்கு என்.எல்.எவ்.ரி இயக்கத்துடன் ஸ்தாபனரீதியான தொடர்புகளோ அல்லது அரசியல்ரீதியான உடன்பாடோ இருக்கவில்லை. தோழர் வி.விசுவானந்ததேவன் எமது கட்சியினால் உருவாக்கப்பட்ட தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியைத் தனியாகக் கொண்டு சென்றபோது, எமது கட்சி அன்றைய சூழ்நிலையில் தீவிரமடைந்து வந்த தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு உரிய முறையில் முகங்கொடுக்காததுடன், செயலற்ற ஒரு நிலைமைக்கும் போய்விட்டது என்ற குற்றச்சாட்டையே பிரதானமாக முன்வைத்தார்.

மார்க்சிச - லெனினிசவாதிகளான நாம் தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியை உருவாக்கும்போது, மிகவும் அவதானத்துடனேயே அதைச் செய்தோம். நாடு தழுவிய பிரதான பிரச்சினைகளுடன், தேசிய இனப் பிரச்சினையை ஒரு முக்கியமான பிரச்சினையாகவே பார்த்தோம். ஏகாதிபத்தியம் மற்றும் அதன் உள்நாட்டு அடிவருடிகள் (ஐக்கிய தேசியக் கட்சியும் பிற்போக்குத் தமிழ் தலைமையும் கொண்ட கூட்டு) கொண்ட மக்கள் விரோத சக்திகளுக்கும், பரந்துபட்ட இலங்கை மக்களுக்கும் இடையிலான முரண்பாடே, இலங்கையின் பிரதான முரண்பாடு என்பதே அன்றும் இன்றும் எமது கருத்தாகும்.

இனங்களுக்கிடையிலான சிநேக முரண்பாட்டை பகைமை முரண்பாடாகக் காண்பதும், அதற்குத் தீர்வாக தமிழ் மக்கள் பிரிந்து சென்று தனிநாடு அமைக்கவேண்டும் என்று தவறாகத் தீர்மானிப்பதும், அதற்காக ஆயுதம் தாங்கிப் போராடுவதும் தவறானது என்பதே எமது அப்போதையதும் இப்போதையதும் கருத்து நிலையாகும்.

எமது இந்தச் சரியான கருத்து, 30 வருடம் பெருமளவு இரத்தம் சிந்தி நடாத்திய ஆயுதப் போராட்டத்தின் பின்னர், அது மிகச் சரியான ஒரு நிலைப்பாடு என்பதை வரலாறு ஐயம் திரிபற நிரூபித்துள்ளது. அதற்காக நானும் எமது கருத்தில் கடைசிவரை ஊன்றி நின்ற தோழர்களும் நியாயமாகப் பெருமைப்படமுடியும்.

ஆனால் தோழர் விசுவானந்ததேவனும் வேறு சில கட்சித் தோழர்களும், கட்சியின் இந்தச் சரியான நிலைப்பாட்டைத் தொடராமல் வழி தவறிப்போனதே. அவர்களது தோல்விக்கும் அழிவுக்கும் காரணமாய் அமைந்துவிட்டமை மிகவும் துயரமான சம்பவம். அவர்கள் தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியின் பெயரை தமிழீழ தேசிய விடுதலை முன்னணி (N.L.F.T) என மாற்றி தமிழீழம் என்ற தவறான கருத்தை ஏற்றுக் கொண்டதுடன், அதற்காக ஆயுதம் தாங்கி போராடுவது எனவும் தீர்மானித்துக் கொண்டனர். இது கட்சியின் அடிப்படை நிலைப்பாட்டுக்கு நேர் எதிரானது.

அவர்கள் இந்தத் தவறான முடிவை எடுத்ததின் காரணமாக தீவிர தமிழ் தேசியவாதிகளின் இயக்கமாக என்.எல்.எவ்.ரி மாறியதுடன், இப்பொழுது ஆராய்ந்து பார்க்கையில், புலிகள் ஊடுருவக் கூடிய ஓர் இயக்கமாகவும் மாறிவிட்டது என்பது புலனாகின்றது.

அதற்குள் ஊடுருவிய புலி சார்பான சக்திகள், தேசிய இனவிடுதலைக்குப் போராடுவதே பிரதான நோக்கம் என ஆரம்பிக்கப்பட்ட அந்த இயக்கத்தின் கொள்கைகளை மாற்றியதுடன், தோழர் விசுவானந்ததேவனைத் தனிமைப்படுத்தி, அவரை என்.எல்.எவ்.ரி இயக்கத்திலிருந்து வெளியேற்ற முயன்றனர்.

(தொடரும்...)




**ஆனால்** இந்தப் பகுதி இஸ்ரேலின்வசமோ, பாலஸ்தீனின்வசமோ தரப்படமாட்டாது. பிரச்சினைக்குரிய இடம் என்பதால் இப்பகுதியின் நிர்வாகக் கட்டுப்பாடு முழுவதுமாக ஐக்கிய நாடுகள் சபையின் வசமே இருக்கும்.

04. நெகவ் பாலை வனப்பகுதி, யூத தேசத்தின் வசத்தில் இருக்கும்.

05. கலிலீ மலைப் பகுதியின் மேற்குப் பகுதி முழுவதும் பயிரிடுவதற்கு ஏற்ற பகுதிகளாகும். இப் பகுதி அரேபிய தேசத்தின் வசம் இருக்கும்.

இந்த ஐந்து தீர்மானங்களை மிகக் கவனமாகக் குறித்துக்கொள்ளுங்கள். பாலஸ்தீனைப் பிரிக்கும் விஷயத்தில் முதல் முதலாக அதிகாரபூர்வமாக ஐக்கிய நாடுகள் சபையின் வாயிலாக வெளியிடப்பட்ட திட்டவரைவு இது.

இந்த அறிவிப்பு வெளியான மறுகணமே பாலஸ்தீன் அராபியர்கள் ஆயுதம் ஏந்த ஆரம்பித்துவிட்டார்கள். நாட்டுத் துப்பாக்கிகள் வெடித்தன. கண்ணிவெடிகள் பூமியைப் பிளந்தன. கத்திகள் வானில் உயர்ந்தன. புழுதிவாரிக் கொட்ட கூட்டம் கூட்டமாகத் தலைதெறிக்க ஓடத் தொடங்கினார்கள். ஐயோ, ஐயோ என்று கதறினார்கள். தேசம் துண்டாடப்படுகிறதே என்று அலறினார்கள். அநியாயமாகப் பாலஸ்தீனை இப்படி யாரோ பங்கு போடுகிறார்களே என்று அழுது புலம்பினார்கள்.

யார் கேட்பது?

அங்கே யூதர்களின் முகத்தில் நிம்மதிப் புன்னகை முழுநிலவுபோல ததும்பியது. கண்ணை மூடிக்கடவுளுக்கு நன்றி சொன்னார்கள். பிரிட்டன் இருந்த திசை நோக்கி வணக்கம் தெரிவித்தார்கள். ஐ.நா. சபையை ஆராதனை செய்தார்கள். இனிப்புகள் பரிமாறிக்கொள்ளப்பட்டன. பூக்களால் அலங்கரித்து, வீடுகளில் பண்டிகை அறிவித்தார்கள். உலகெங்கும் சிதறிக்கிடக்கும் தங்கள் உடன்பிறவாத யூத சகோதரர்களுக்குக் கடிதம் எழுதினார்கள். கண்ணீர் மல்க கூடிக் கூடிப் பேசிக் களித்தார்கள்.

செப்டெம்பர் மாதம் கூடிய அராபியர்களின் அரசியல் உயர்மட்டக் குழு, ஐக்கிய நாடுகள் சபையின் இந்தத் தீர்மானத்தை முற்றிலுமாக நிராகரித்தது.

தேசம் துண்டாடப்படுவதில் தங்களுக்கு துளிகூட சம்மதம் இல்லை என்று தெரிவித்தார்கள். இதன் பின்விளைவுகள் என்ன மாதிரி இருக்கும் என்று தங்களால் யூகிக்கக்கூட முடியவில்லை என்று மறைமுகமாக எச்சரித்தார்கள்.

அதையும் யாரும் பொருட்படுத்தவில்லை. ஒரு முடிவுடன்தான் இருந்தார்கள். 29 நவம்பர் 1947 அன்று ஐ.நாவின் பொதுக்குழு கூடியது. சிறப்பு கமிட்டியின் தீர்மானம் மீதான வாக்கெடுப்பு நடத்தப் பட்டது. முப்பது மூன்று ஆதரவு ஓட்டுக்கள் பே-ாதாது?

ஆறு அண்டை அரேபிய தேசங்களும் கியூபா, ஆப்கானிஸ்தான், ஈரான், க்ரீஸ், துருக்கி போன்ற தேசங்களுக்கும் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்தன. அப்போதுதான் சுதந்திரம்



பெற்ற தேசங்களான இந்தியாவும் பாகிஸ்தானும் கூட பாலஸ்தீன் துண்டாடப்படுவதை எதிர்த்தன.

ஆனால் ஆதரித்த தேசங்கள் எவை என்று பார்க்க வேண்டும். அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, சோவியத் யூனியன், பிரான்ஸ், நெதர்லாண்ட், நியூசிலாந்து, ஸ்வீடன் மற்றும் போலந்து.

இவற்றுள் அன்றைய சூழ்நிலையில் நெதர்லாந்து, நியூசிலாந்து, போலந்து தவிர மற்ற அனைத்து தேசங்களுமே மத்திய கிழக்கின் எண்ணெய் வாசனையை மோப்பம் பிடித்துக் கொண்டிருந்தவை, எண்ணெயே இல்லாவிட்டாலும் இந்த தேசங்களுக்கு மத்திய கிழக்கில் ஏதோ ஒரு விதத்தில் தமது ஈடுபாட்டை உறுதிப்படுத்திக் காட்டிக் கொள்ள இதை ஒரு சந்தர்ப்பமாகக் கருதினார்கள்.

மேலும் அமெரிக்கா அந்த அணியில் இருந்தது. பிரான்ஸ் இருந்தது. மேற்கின் தவிர்க்கமுடியாத சக்திகள் என்று வர்ணிக்கப்பட்ட தேசங்கள் அவை. அத்தகைய தேசங்கள் நிற்கும் அணியில் நிற்பது தங்களுக்கு எந்த வகையிலாவது இலாபம் தரலாம் என்று இவை கருதியிருக்கலாம். மற்றபடி பாலஸ்தீனைப் பிரிப்பதில் நியூசிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் வேறு என்ன அக்கறை இருந்துவிட முடியும்? இத்தனைக்கும் ஐரோப்பிய தேசங்களில் இருந்த அளவுக்கெல்லாம் அங்கே யூதர்கள்கூட அவ்வளவாகக் கிடையாது.

இதுஇவ்வாறிருக்க, யூத தேசம் உருவாவதற்கு ஆதரவாக ஓட்டளித்த தேசங்களுக்கெல்லாம் பாலஸ்தீனிய யூதர்கள் மறக்காமல் நன்றி சொல்லிக் கடிதம் எழுதினார்கள். முடிந்த இடங்களுக்குத் தங்கள் பிரதிநிதிகளையே நேரில் அனுப்பி நன்றி சொன்னார்கள். இஸ்ரேல் உருவான பிறகு அந்த தேசங்களுடன் நிரந்தரமாக அரசியல் உறவுகொள்ளத் தாங்கள் விரும்புவதாக முன்னதாகவே சொல்லியனுப்பினார்கள். பரஸ்பரம் உதவிகள் செய்துகொள்ளவும் ஆதரவுக்கரம் கொடுக்கவும் எப்போதும் தாங்கள் தயார் என்று தெரிவித்தார்கள்.

அராபியர்களுக்கு அடிவயிறு பற்றிக்கொண்டு எரிந்தது. யாருடைய பூமியை யார் பங்கிட்டு யாருக்குக் கொடுப்பது அவர்களது அலறலையோ, கதறலையோ கேட்பதற்கு ஒரு நாதி இல்லாமல் போய்விட்டதுதான் துரதிர்ஷ்டம். எதிர்த்து வாக்களித்த பிற அரேபிய தேசங்கள்கூட மல்லுக்கட்டி நிற்கத் தயங்கின. காரணம் அந்த நிமிடம்வரை பாலஸ்தீன் பிரிட்டிஸ் ஆளுகைக்கு உட்பட்ட ஒரு தேசம். ஒரு சௌகரியத்துக்காகத்தான் ஐ.நாவின் சிறப்பு கமிட்டியிடம் பொறுப்பை ஒப்படைத்து பிரிக்கும் விஷயத்தை முன்னெடுத்துச் சென்று கொண்டு இருந்தார்கள்.

அப்படியிருக்க, பிரிட்டன், தனக்குச் சொந்தமான ஒரு காலனியை என்னவேண்டுமானாலும் செய்யலாம், எப்படி வேண்டுமானாலும் பிரிக்கலாம் யார் கேட்பது?

தார்மீக நியாயங்களும் சத்திர நியாயங்களும் பத்திரமாகச் சுருட்டிப் பரண்மீது போடப்பட்டன. அத்தனை வருஷம் கஷ்டப்பட்ட யூதர்கள் இனியேனும் நிம்மதியாக வாழவேண்டும் என்பதுதான் அந்தக் காலகட்டத்தின் ஒரே நியாயமாக இருந்தது. தவிரவும் ஐ.நாவின் சிறப்பு கமிட்டி வரைந்தளித்த திட்டத்தின்படி பாலஸ்தீனைப் பிரிப்பதால் அராபியர்களுக்கு எந்தக் கஷ்டமும் வந்துவிடாது. அவர்களுக்குப் போதுமான நிலப்பரப்பு இருக்கவே செய்யும் என்றும் சொல்லப்பட்டது. இஸ்ரேலை உருவாக்கியபின் தேவைப்பட்டால் எல்லை விஷயத்தில் கொஞ்சம் மறு ஆய்வு செய்துகொள்ளலாம் என்று நினைத்தார்களே தவிர, தேசத்தைப் பிரிக்கும் விசயத்தில் மிகவும் தீர்மானமாகவே இருந்தார்கள்.

நடுநிலைமையோடு பார்ப்பதென்றால் ஐ.நா. அன்று எடுத்த முடிவு சரியானதே. எப்படி அராபியர்களுக்கு அது தாய் மண்ணோ அதேபோலத்தான் யூதர்களுக்கும். இடையில் அவர்கள் மண்ணைவிட்டு பல ஆயிரம் வருடங்களாக எங்கோ போய்விட்டவர்கள்தானே என்கிற ஒரு குற்றச்சாட்டு இல்லாமல் இல்லை.

ஆனால் அவர்களும் கஸ்டப்பட்டிருக்கிறார்கள். ஓட ஓட விரட்டப்பட்டிருக்கிறார்கள். இலட்சக்கணக்கில் உயிர் இழப்பைச் சந்தித்த இனம் அது. ஒதுங்க ஒரு நிழலில்லாமல் வாழ்நாளெல்லாம் சுற்றிக் கொண்டே இருந்தவர்கள்.

என்னவோ, செய்து எப்படியெப்படியோ யார் யாரையோ பிடித்து கனவை நனவாக்கிக் கொள்ளவிருந்தார்கள். நல்லது தான்.

(தொடரும்...)




புலிகளின் சில விடயங்களை நான் கூறவேண்டிய தேவை இல்லை! அவை என்னைப்போல் உங்களுக்கும், உங்களைப் போல் கீதாஞ்சலிக்கும் கீதாஞ்சலியைப்போல் குடும்பத்திற்கும் தெரியும். சில முடிவெடுத்தால் அதுதான் முடிவு. அதுதான் அவர்களின் சட்டம்! ஏன் சிலர் இப்பொழுதும் கூறுகிறார்கள், அவர்களின் இரும்புச்சட்டத்தைப் பற்றியும் பகிரங்க மரண தண்டனையையும்!

கீதாஞ்சலி பல்கலைக்கழகம் செல்வதற்கு இரண்டு நாட்கள் இருந்தது! இன்றோடு மூன்று நாள்!

மறுநாள் பொழுது புலர்ந்தது. தாய் கமலம் சந்தைக்கு போயிருந்தாள். சீதாதேவி வேலைக்கு போயிருந்தாள். இதுவரை நாளும் கீதாஞ்சலியை தனிமையில் சந்திக்கும் அவகாசம் வரும்வரை தவமிருந்த அகத்தியனுக்கு அது



கொண்டாட்டமானது! கோவில் திருவிழாவானது! ஓடிப்போகும் வேகத்தைவிட வீடு நாடி வந்தான் அகத்தியன்!

தாய் வருவதற்குள் மதிய உணவு சமைக்கலாம் என எண்ணிக் கொண்டு சமையலறை நோக்கி செல்கையில், அன்பினை உணர்த்தும் வார்த்தைப் பிரயோகத்தோடு பண்பான ஒரு ஆண்குரல்...

"அக்கா" என்றது.

"வாங்கோ அகத்தியன்... காலமை வந்ததும் வந்ததைவிட அவசரமாக போனீங்க... போனதைவிட வேகமாக வந்திருக்கீங்க?

"உங்களை தனிமையில் சந்திக்கும் சந்தர்ப்பத்தை காத்திருந்தேன்.... இன்றுதான் கிடைத்தது..."

அகத்தியன் கூறிக்கொண்டிருக்கையில், அவளின் மூளையை குடைந்தது பலவித எண்ணங்கள்.

ஒரு குமரியை எதற்காக சந்திக்க வேண்டும்? அதுவும் தனிமை யில்... ஒரு இளைஞனுக்கும் யுவதிக்கும் அப்படி என்ன இரகசியம்? அத்துமீறல் நடந்தால் கத்திக் குத்தில் முடிவுகட்டும் முடிவோடு கத்தி அருகே சென்றாள். அதற்குப் பிறகுதான் கதையைத்துவங்கினாள் கீதாஞ்சலி!

"அம்மா வரமுன்னம் சமைக்க வேணும்...

அம்மா பாவம் வீட்டுவேலைகள் எல்லாம் தனியத்தானே.. இருக்கும் போது அப்படி இல்லை.

"அதைவிடுங்க சொல்லங்க தம்பி அகத்தியன்"

தப்பாக வந்தால் தப்பிற்கும் வகையில் கத்திக்கு அருகிலும் அவனை கட்டுப்படுத்தும் வகையிலும் தம்பி என்று மிகவும் அன்பாகவும் அழைத்தாள். வார்த்தையை தொடுத்தாள்.

நியாயம் பல அதர்மமான கதைகள் இருக்கு.

"நம்மட இனத்திற்கு நடந்தது, நடக்கின்றது, நடக்கப்போகின்றது அவைகள் ஒரு பக்கம் இருக்கட்டும்! உங்கட குடும்பத்தை சிதைத்து சீரழித்துக் கொண்டிருப்பது மறுபக்கம்"

"போதும் விஷயத்தை சொல்லப்பு"

"கம்பசுக்குப் போக முதல்லே புதுமுக மாணவர்களுக்கு சந்திப்பு நடக்கும். ஆனால் உங்களை சந்திக்க கிடைக்க இல்லையாம்! அது தொடர்பாகத்தான் கதைக்க நினைத்தேன்!"

அதற்கு பிறகு சிவராம் கூறியதாக பல பொய்யான வடிவமைத்த வர்ணக்கதைகளையும், கீதாஞ்சலியின் மனதில் அகத்தியன் விதைத்தான். அலங்கரிப்பு வார்த்தைகளுக்கு இளகிப்போன கீதாஞ்சலி உடனே!

"நான் அப்பா சொல் தட்டாத பிள்ளை, மனத்தூய்மையுடன் கூறுகிறேன், அப்பா சொன்னது தானே. பயப்படாமல் சொல்லுங்கள். கட்டாயம் செய்வேன். அதையும்விட அப்பா எதையும் தப்பா. சொல்லமாட்டார்!"

"சரி அக்கா அப்ப விசயத்தை சொல்லுறன்.

நீங்க அங்கிருந்து எங்களுக்கு உதவி செய்யவேணும். உங்களுக்கு உதவிப் பணம் கிடைக்கும். சுருக்கமாக சொன்னால் எங்கட முகவர்!"

"உதவிப் பணம் தேவை இல்லை... என்னுயிர் இருக்கும் வரை உதவிசெய்வேன் நம்மட இனத்துக்காக!"

அது கீதாஞ்சலி கொடுத்த உத்தரவாதம்! புலிகளோடு ஏற்படுத்திய தகவல் பரிமாற்ற ஒப்பந்தம்! (நிலவுகள் வளரும்...)

ஏ.எச்.ஏ. ஹுஸைன்




# பொதுபல சேனாவுக்கு அதிகாரம் அனுசரணையா?

**பொதுபலசேனாவின்** பின்னணிகளை நாம் கூறிக்கொண்டிருக்கும்போதே நாட்டின் நாலாபுறங்களிலும் பல சம்பவங்கள் நடந்துவிட்டிருக்கின்றன.

ஏப்ரல் 9-2014 ஜனபலசேனா அமைப்பின் ஏற்பாட்டாளர் வட்டரக்க விஜித்த தேரரினால் கடந்த ஏப்ரல் 9ஆம் திகதி கொழும்பு, கொம்பனி வீதியிலுள்ள நிப்போன் ஹோட்டலில் ஊடகவியலாளர் மாநாடு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. உண்மையான அஹிம்சை பௌத்தத்தையும் பொதுபல சேனாவின் அக்கிரம செயற்பாடுகளையும் பிரித்துக்காண்பிப்பதே இந்த ஊடக மாநாட்டின் நோக்கமாக இருந்தது.

இதனை மோப்பம் பிடித்த பொதுபல சேனா அமைப்பினர் சும்மா இருப்பார்களா என்ன! எவரும் எதிர்பார்த்திராத நிலையில் தடாலடியாக ஹோட்டலின் உள்ளே புகுந்தனர்.

அங்கு ஆக்ரோஷமாக கூச்சலிட்ட பொதுபல சேனா பொதுச் செயலாளர் கலகொடத்தே ஞானசார தேரரும் அவரது அடியாட்களும் அங்கிருந்த ஜனபலசேனா அமைப்பின் ஏற்பாட்டாளர் வட்டரக்க விஜித்த தேரரையும் ஊடக வியலாளர்களையும் மற்றும் அங்கிருந்த சமூகநல ஆர்வலர்களையும் சூழ்ந்து கொண்டு திட்டித் தீர்த்தனர்.

நாட்டிலுள்ள பௌத்த மக்களிடமும் பொதுபல சேனாவிடமும் வட்டரக்க விஜித்த தேரர் பொதுமன்னிப்புக் கேட்குமாறும்தான் முஸ்லிம்களிடம் பணம் பெற்றுக்கொண்டே பொதுபல சேனாவுக்கு எதிரான பிரசாரங்களில் ஈடுபடுவதாகக் கூறுமாறும் அவர் வற்புறுத்தப்பட்டார்.

சூழ்நிலைகளின் உக்கிரத்தை உணர்ந்துகொண்ட வட்டரக்க விஜித்த தேரர் பொதுபலசேனா கலகொடத்தே ஞானசார தேரர் நிர்ப்பந்தித்த வார்த்தைப் பிரயோகங்களைக்கூறி பொதுமன்னிப்புக் கேட்டார்.

இதன்பின்னர் அவ்விடத்தில் இருந்த உயிர் அச்சுறுத்தல் ஓரளவு தணிந்தது. வட்டரக்க விஜித தேரரின் கையிலிருந்த 5 பைல்களை (ஆவணக் கோப்புக்களை) பொதுபல சேனா அங்கத்தவர் ஒருவர் பறித்தெடுத்துக்கொண்டார்.

ஜனபலசேனா ஏற்பாடு செய்த ஊடக் வியலாளர் மாநாடு பொதுபல சேனாவுக்கு உரிய ஊடகவியலாளர் மாநாடாக மாறியது.

கலகொடத்தே ஞானசாரர் ஊடக வியலாளர்களிடம் தன் "ஞான உபதேசங் களைக்" கொட்டித் தீர்த்தார். அத்துடன் அவர்களது அகங்காரம் நின்றபாடில்லை. முஸ்லிம்களின் புனித மார்க்க வழி காட்டியான அல்குர்ஆனையும் நிந்தித்தனர்.

இத்தனைக்கும் மத்தியில் பொலிஸார் ஆடாமல் அசையாமல் அக்கிரமங்களைப் பார்த்துக்கொண்டு நின்றதுதான் "ஆசியாவின் ஆச்சரியம்" ஆக இருந்தது.

இச்சம்பவம் குறித்து மகாவலி மகா விகாரையை சேர்ந்த விஜித தேரர் கொழும்பு கொம்பனித்தெரு பொலிஸில் முறையிட்டிருந்தார்.

பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் உட்பட பொதுபலசேனா பௌத்த பிக்குகள் பலர், மேற்படி ஊடகவியலாளர் மாநாட்டினுள் பலவந்தமாகப் புகுந்து, பயமுறுத்தி, கூட்டத்தைக் குழப்பி, தன்னையும் மிரட்டியதாக அவர் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவித்திருந்தார்.

தன்மீது பிரயோகிக்கப்பட்ட நிர்ப்பந்தம் காரணமாகவேதான் பொது பலசேனாவிடம் மன்னிப்புக்கேட்டதாக வட்டரக்க விஜித்த தேரர் மேலும் தனது முறைப்பாட்டில் கூறியிருந்தார்.

அதன்பின்னர் கொழும்பு கோட்டை நீதிவான் முன்னிலையில் இந்த விசாரிக் கப்பட்டபொழுது நாட்டில் சமய மற்றும் இன ஒற்றுமைக்கு பங்கம் ஏற்படலாம் என்ற காரணத்தினாலேயே பௌத்த பிக்குகளை தாம் கைது செய்யவில்லை என கொம்பனித்தெரு பொலிஸார் நீதி மன்றில் கூறினர்.




ஆயினும் குழப்பக்காரர்கள் தண்டனைக்கோவையின் கீழ் தண்டிக்கப்பட கூடிய குற்றங்களைப் புரிந்திருப்பதாக பொலிஸார் மேலும் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

அதேவேளை வட்டரக்க விஜித தேரரின் கையிலிருந்த 5 பைல்களை எடுத்துச் சென்ற பொதுபல சேனா அமைப்பு, அவற்றை பொலிஸாரிடம் ஒப்படைத்து விட்டது என்றும் அவர்கள் அவற்றை தவறுதலாக எடுத்துச்சென்றதாக தம்மிடம் தெரிவித்ததாகவும் பொலிஸார், நீதிமன்றில் கூறினர்.

கொழும்பு, கொம்பனி வீதியிலுள்ள நிப்போன் ஹோட்டலில் ஜனபலசேனா அமைப்பின் ஏற்பாட்டாளரான வட்டரக்க விஜித்த தேரரினால் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது பொதுபல சேனா அமைப்பினர் அத்துமீறி நுழைந்தமை தொடர்பிலான வீடியோ ஆதாரங்களை கொம்பனி வீதி பொலிஸாரிடம் கையளிக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் ஏ.எம்.எம்.சஹாப்தீன் தொலைக்காட்சி நிறுவனங்கள் இரண்டிற்கு உத்தரவிட்டிருந்தார்.

ஜனபலசேனாவின் ஊடகவியலாளர் மாநாட்டைக் குழப்பிய பொதுபலசேனாவினர் அதன்பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது, முஸ்லிம்களின் புனித குர்ஆனை அவமதித்தனர் என்று கொம்பனித்தெரு, வொக்ஷல் வீதியைச் சேர்ந்த நூர்தீன் முஹம்மத் தாஜுதீன் என்பவர் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண பின்னர் தெரிவித்திருந்தார்.

ஏப்ரல், 20 - 2014

இதேவேளை திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரதேசத்திலுள்ள கங்குவேலி அகத்தியர் வழிபாட்டுத் தலத்தின் புனரமைப்புப் பணிகளைச் செய்ய அரசாங்க அதிபரால் அனுமதி அளிக்கப்பட்டுள்ள போதிலும் கடும் போக்குடைய பௌத்த பிக்குகளினால் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் கூறுகின்றனர்.

இதனால் ஆலய புனரமைப்பு பணிகள் நிறுத்தப்பட்டு உடமைகளுக்கு பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது.

அகத்தியர் வழிபாட்டு மையம் எனப்படும் இந்த ஆலயத்தில் அகத்திய முனிவர் சிவலிங்கம் வைத்து வழிபாடு செய்ததாக இந்துக்கள் நம்புகின்றனர்.

போர் மற்றும் இன வன்முறைகளை அடுத்து கடந்த காலங்களில் இந்த ஆலயம் கைவிடப்பட்டு வழிபாடுகளும் தடைப்பட்டிருந்தன.

போருக்குப் பின்னர் ஆலய நிர்வாகம் புனரமைப்புப் பணிகளை ஆரம்பிக்கத் தயாரானபோது அண்மித்த பகுதியிலுள்ள பௌத்த பிக்குகள் சிலரால் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்கள் காரணமாக புனரமைப்புப் பணிகள் தடைப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் கூறுகின்றனர்.

சில மாதங்களுக்கு முன்னர் அரசாங்க அதிபர் மேஜர் ஜெனரல் ஆர்.டி.சில்வா நேரில் சென்று அந்த இடத்தைப் பார்வையிட்டு புனரமைப்புப் பணிகளை ஆரம்பிக்க ஆலய நிர்வாகத்தினருக்கு அனுமதி வழங்கியிருந்தார்.

அரசாங்க அதிபரின் அனுமதிபெற்று புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு ஓரிரு நாட்களால் அந்த பகுதியிலுள்ள பௌத்த பிக்குகள் உட்பட சிலரால் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்கள் காரணமாக பணிகளை தாம் நிறுத்திக்கொண்டதாக ஆலய பரிபாலன சபை தலைவரான வேலுப்பிள்ளை தவராசா கூறுகின்றார்.

ஆலயம் அமைந்துள்ள பிரதேசம் பௌத்த மத வழிபாட்டு தடயங்களைக் கொண்ட தொல்பொருள் ஆய்வுக்கு உட்பட்ட இடமென பௌத்த பிக்கு களினால் கூறப்படுவதையும் தவராசா நிராகரித்துள்ளார்.

காணி அபகரிப்புடன் தொடர்புடைய நபர்களே ஆலய புனரமைப்புக்கும் தடைகளை ஏற்படுத்தியுள்ளார்கள் என்றும் அவர் தெரிவிக்கின்றார்.

இது தொடர்பாக அரசாங்க அதிபர் மற்றும் ஜனாதிபதி ஆகியோரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ள தாகவும் அவர் குறிப்பிட்டார். கிழக்கு மாகாண சபையின் அடுத்த அமர்வின் போது இதை விவாதிப்பதற்கான முன்னறிவித்தலை எதிர்க்கட்சித் தலைவர் சி.தண்டாயுதபாணி விடுத்துள்ளார்.

ஏப்ரல், 21 - 2014

தாமரை மலரில் புத்தபெருமான் இருப்பதைப் போன்ற உருவத்தை தனது இடது கை தோள்பட்டையில் பச்சை குத்திக்கொண்டு நாட்டுக்குள் பிரவேசித்த பிரித்தானியப் பெண் விமான நிலையத்தில் வைத்தே கைது செய்யப்பட்டார்.

நவோமி மிஷேல் கோல்மென் எனும் அந்த பிரிட்டிஷ் சுற்றுலாப் பயணி மும்பாயிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையம் வந்திருந்தபோதே கைது செய்யப்பட்டு நீர்கொழும்பு மேலதிக நீதிவான் ஜி.எம். திலக்க பண்டார முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.


பிரதிவாதி குடிவரவு குடியகல்வு சட்டத்தை மீறவில்லை எனவும், புத்த மதத்தை அவமதிக்கும் நோக்கம் அவருக்கு இல்லை எனவும், ஆயினும், இவர் இலங்கையில் தங்கியிருந்தால் பிரச்சினைகள் ஏற்பட இடமுண்டு என பொலிஸார் நீதிமன்றத்தின் கவனத் திற்கு கொண்டுவந்தனர்.

மேற்படி பிரித்தானியப் பிரஜையை அவரது தாய்நாட்டுக்கு திருப்பியனுப்பு மாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் புத்தரின் உருவச்சிலையை முத்தமிட்டதற்காக மூன்று பிரெஞ்சு சுற்றுலாப் பயணிகளுக்கு நிறுத்தி வைக்கப்பட்ட சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

புத்தர் சிலைகளுக்கு முன்னால் நின்றுகொண்டு புகைப்படங்களுக்கு காட்சியளிக்க வேண்டாம் என இலங்கை செல்லும் பயணிகளுக்கு பிரிட்டிஷ் அரசு பயண அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

(தொடரும்...)



இட்சாக் ரபீன், பில் கிளின்டன், யசீர் அரஃபாத் 13, செப்டெம்பர், 1993 ஒஸ்லோ ஒப்பந்தம் கைச்சாத்திடும் வைபவம்.

# இஸ்ரேல் விரும்பாத பலஸ்தீனத்தின் ஒற்றுமை!

## ஒரு பார்வை

தொகுப்பு: வேணு கிருஷ்ணா

**1946** வரை முழுமையாக பலஸ்தீனம் என்பது உலக வரைபடங்களில் குறிக்கப் பட்ட தேசம். 1947ஆம் ஆண்டு ஐ.நா. சபை மற்றும் இங்கிலாந்து அமெரிக்கா போன்ற நாடுகளின் திட்டமிட்ட சதியின் மூலம் பலஸ்தீனம் துண்டாடப்பட்டு அதன் ஒரு பகுதி வந்தேறிகளான யூதர்களிடம் கொடுக்கப்பட்டது. 1967ஆம் ஆண்டு திட்டமிட்ட தாக்குதல்மூலம் பலஸ்தீனின் பெரும்பான்மை இடங்களை யூதர்கள் ஆக்கிரமித்தனர். 2000ஆம் ஆண்டிற்கு இடைப்பட்டகால கட்டத்தில் கிட்டத்தட்ட பெரும்பான்மையான (காஸா, மேற்குக்கரை உள்ளிட்ட சில பகுதிகளை தவிர) 90% அதிகமான பகுதிகளை யூதர்கள் ஆக்கிரமித்துள்ளனர்.

இன்று மேற்குக்கரையை ஆட்சி செய்து கொண்டிருக்கும் பத்தாஹ் கட்சியின் அதிபர் மெஹ்மூத் அப்பாஸ் எந்த ஐ.நா. சபை பலஸ்தீனத்தை திருடி இஸ்ரேல் என்ற ஆக்கிரமிப்பு தேசத்தை உருவாக்கியதோ மேலும் இஸ்ரேல் ஆக்கிரமிப்பை செய்யும் போதெலாம் கண்டுகொள்ளாமல் இஸ்ரேலை பாதுகாத்ததோ அந்த ஐ.நா. சபையில் சுதந்திர பலஸ்தீனம் என்ற ஒரு கோரிக்கையை விடுத்திருந்தார். வழக்கம் போல அமெரிக்கா இஸ்ரேலுக்கு ஆதரவாக தனது எதிர்ப்பை காட்டிவருகிறது.

இதில் அபாஸ் கோருவது ஒன்றும் முழுமையான பலஸ்தீனத்தை அல்ல. மாறாக அதாவது 1967 ஆண்டிற்குமுன் இஸ்ரேல் ஆக்கிரமித்த பகுதிகள் அனைத்தும் இஸ்ரேலுக்கு சொந்தம். 1967 ஆம் ஆண்டிற்கு பின் மீதம் இருக்கும் பகுதிகள் பலஸ்தீனியர்களுக்கு சொந்தம். மீதமுள்ள பகுதி என்பது வெறும் 20% இடங்கள் மட்டுமே பலஸ்தீனத்திற்கு சொந்தம் என்ற கோரிக்கையை அப்பாஸ் ஐ.நா. சபையில் விடுத்துள்ளார்.

இது எந்தவகையிலும் பலஸ்தீனத்திற்கு பலனை தரப்போவதில்லை மாறாக இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை நியாயப்படுத்து வதாகவே உள்ளது. அப்பாஸின் இக்கோரிக்கையை ஹமாஸ் உள்ளிட்ட பலஸ்தீன சுதந்திரப் போராட்ட குழுக்கள் நிராகரித்துவிட்டனர். இந்நிலையில், இஸ்ரேல் - பாலஸ்தீன விவகாரத்தை கொஞ்சம் பின்நோக்கி பார்த்துவிட்டு தற்போதைய நிலவரங்கள் தொடர்பில் பாக்கலாம்.

### 1949 - 1967

ஐ.நா. தீர்வு திட்டம் 181க்கு முன்னமும் இஸ்ரேலின் சுதந்திர நாட்டு பிரகடனத்திற்கு முன்னமும், சில அராபிய நாடுகள் அந் நாடுகளில் உள்ள யூதர்களுக்கெதிராக ஓரங்கட்டலை மேற்கொண்டனர். 1948 அரபு - இஸ்ரேல் முரண்பாட்டைத் தொடர்ந்து அவ் யூதர்களின் நிலை மோசமாகியது. 1947 மார்கழியில் அரபு உலகில் யூத சமூகத்தினருக்கெதிரான பாரிய யூத எதிர்ப்பு உருவாகியது. குறிப்பாக சிரியா விலும் அதெனிலும் மிகமோசமாகி நூற்றுக்கணக்கில் மரணமும் உடற்சேதமும் ஏற்படலாயின.

1948 நடுப்பகுதியில் அராபிய நாடுகளில் இருந்த ஏறக்குறைய முழு யூதர்களும் தாக்குதலுக்குள்ளாகி அவர்களின் அந்தஸ்து பறிக்கப்பட்டது. அரபு - இஸ்ரேல் முரண்பாட்டின் விளைவு நீண்டகாலமாக அராபிய நாடுகள் மற்றும் இஸ்லாமிய நாடுகளில் இருந்த யூதர்களை அரசியல் பணயக் கைதிகளாக்கி, அவர்கள் அந்நாடுகளைவிட்டு வெளியேற நிர்ப்பந் தித்தது. லிபியாவில், யூதர்களின் பிரஜா உரிமை பறிக்கப்பட்டது. ஈராக்கில் உடமைகள் பறிக்கப்பட்டன.

எகிப்து அதிகளவான யூதர்களை 1956இல் வெளியேற்றியது. அல்ஜீரியா பிரஜா உரிமையை பறித்தது. அதிகளவா னோர் அரசியல் காரணங்களினாலும் சிலர் தாயக நோக்கோடும் வெளியேறினர்.

1948 - 1952 காலப்பகுதியில், 700,000 மேற்பட்ட யூதர்களில் ஏறக்குறைய 285,000 பேர் அராபிய நாடுகளிலிருந்து இஸ்ரேலுக்கு குடிபெயர்ந்தனர்.

1960களில் பிற்பகுதியில் 850,000க்கு மேற்பட்ட யூதர்கள் சில 10 அராபிய நாடுகளிலிருந்து பிறந்த இடத்தைவிட்டு வெளியேறினர். இன்று 7,000க்கு குறைவானோர் அந்நாடுகளில் உள்ளனர். சொத்துக்கள் நஷ்டஈடு இன்றி பறிமுதல் செய்யப்பட்டன. இன்றைய இஸ்ரேலின் சனத்தொகையில் 41 வீதமானோர் இடம்பெயர்ந்தோரும் அவர்களின் வாரிசுகளுமாவர்.

இஸ்ரேலின் 1948 சுதந்திரப் போர். வெற்றியின் விளைவு மறுபக்கத்தில் அகப்பட்ட அராபியர்கள் இசுரேலின் புகமுடியாது சொந்த இடத்தை இழக்கச் செய்தது. அதுபோலவே, மேற்குக் கரையிலும் காசாவிலும் அகப்பட்ட யூதர்கள் வீட்டையும் சொத்துக்களையும் விட்டுவிட்டு இஸ்ரேல் வரவேண்டியதாயிற்று.

1956இல் எகிப்து டிரான் நீரிணையை இஸ்ரேல் கப்பல் போக்குவரத்திற்கு மூடி, அகாஃபா குடாவையும் இஸ்ரேலுக்கு நிறுத்திவிட்டது. பின்னர் சுயெஸ்கால்வாயை தேசிய உடமையாக்கி இஸ்ரேல் கப்பல் போக்குவரத்திற்கு தடைவிதித்தது.

இதற்கு பதிலடியாக பிரித்தானிய, பிரான்சு உதவியுடன் இஸ்ரேல் சினாய் தீபகற்பத்தை ஆக்கிரமித்தது. சுயெஸ் கால்வாய் சண்டையில் காசா, சினாய் தீபகற்பத்தை இஸ்ரேல் கைப்பற்றிக் கொண்டது. ஐ.நாவும் அமெரிக்காவும் போர் நிறுத்தத்திற்கு அழுத்தம் கொடுத்தன.

இஸ்ரேல் எகிப்தின் பகுதிகளில் இருந்து விலகிக் கொள்ள உடன்பட்டது. எகிப்தும் இசுரேல் போக்குவரத்திற்கு வழிவிட்டு சினாய் தீபகற்பத்தை இராணுவமற்ற பிரதேசமாக்கியது. இராணுவமற்ற பிரதேசத்தை கண்காணிக்க ஐ.நா. அவசர காலப் படை நிறுத்தப்பட்டது. ஐ.நா. அவசர கால படை எகிப்தின் பகுதிகளில் மட்டும் இருந்தனர். இஸ்ரேல் தன் பகுதியில் ஐ.நா. அவசர கால படையை அனுமதிக்கவில்லை.

பலஸ்தீன விடுதலை இயக்கம் 1964இல் உருவாக்கப்பட்டது. இது சையோனியர் களையும் ஏகாதிபத்தியையும் அழிப்பதுதான் பலஸ்தீன விடுதலை எனும் கொள்கையினைக் கொண்டது.

19, மே, 1967இல் எகிப்து ஐ.நா கண் காணிப்பாளர்களை அனுப்பிவிட்டு, 100,000 படையினரை சினாய் தீபகற்பத்தில் நிறுத்தியது. மீண்டும் டிரான் நீரிணையை இஸ்ரேலுக்கு மூடிவிட்டது.

19, மே, 1967இல் ஜோர்தான், எகிப்துடன் பாதுகாப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டது. ஐ.நா கண்காணிப்பாளர் களை அனுப்பிய எகிப்து ஐ.நா. எல்லையைத் தாண்டி தென் இஸ்ரேலிய எல்லைக்கு முன்னேறியது. 5 ஜூன், இஸ்ரேல் எகிப்தை தாக்கியது. இஸ்ரேலிய விமானப்படையின் எதிர்பாராத தாக்குதலில் அதிகளவு எகிப்து வான்படை அழிவுற்றது.

இசுரேல் ஜோர்தான், சிரியா, ஈராக் வான் படைகளை அழிக்கத்தொடங்கியது. இஸ்ரேலின் இத்தாக்குதல் ஆறு நாள் போரில் அது வெற்றியடைய முக்கிய காரணமாகியது. போரின் முடிவில் இஸ்ரேல் சினாய் தீபகற்பம், காசா, மேற்குக்கரை, கிழக்கு ஜெருசலேம், சேபா பண்ணைகள், கோலான் குன்றுகள் என்பனவற்றை தன் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தது. போரின் விளைவு அப்பிரதேசத்தின் புவியியல் அரசியலில் தாக்கம் செலுத்தியது.

### 1967 - 1973

ஓகஸ்ட், 1967இல், அராபிய தலைவர்கள் இஸ்ரேல் பற்றிய அராபியர் நிலைப்பாடு பற்றி கலந்துரையாடினார்கள். அவர்கள் இஸ்ரேல் அரசுக்கு அங்கீகாரம் இல்லை, அதனுடன் சமாதானம் இல்லை, பேச்சுவார்த்தை இல்லை என்ற "மூன்று இல்லை(கள்)" என்ற முடிவுக்கு வந்தனர்.

1967இல், சினாய் தீபகற்பத்தை இஸ்ரேல் கைவிட்டுவிடும் நோக்காகக் கொண்டு தேய்வுப் போரை எகிப்து ஆரம்பித்தது. 1970 இல் கமால் நாசீரின் மரணத்துடன் அப்போர் முடிவுக்குவந்தது.

6, ஒக்டோபர், 1973இல் சிரியாவும் எகிப்தும் எதிர்பாராத தாக்குதலை யூதர்களில் புனித நாளாகிய யோம் கிப்பூரில் ஆரம்பித்தது. இஸ்ரேல் படைகள் தயாரற்ற நிலையிலிருந்து மீள 3 நாட்கள் எடுத்தது. யோம் கிப்பூர் போர் அமெரிக்காவும் சோவியத் ஒன்றியமும் மறைமுகமாக ஒன்றையொன்று எதிர்க்க வழியமைத்தது. இஸ்ரேல் போரை தீவிரப்படுத்த, சோவியத் ஒன்றியம் இராணுவ நடவடிக்கை பற்றி அச்சுறுத்தல் விடுத்தது. அமெரிக்காவின் அணு ஆயுதப்போர் பற்றிய முன்னெச்சரிக்கை 25 ஒக்டோபரில் போர் நிறுத்தத்திற்கு வழிவிட்டது.

### 1974 - 2000

#### எகிப்து

1970களின் பிற்பகுதியில் டேவிட் முகாம் உடன்பாட்டைத் தொடர்ந்து இஸ்ரேலும் எகிப்தும் சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத் திட்டன. அதனால், சினாய் தீபகற்பம் எகிப்துக்கு கையளிக்கப்பட, காஸா இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் இருந்தது. ஒப்பந்தம்மூலம் இஸ்ரேலின் கப்பல் போக்குவரத்தும் அப்பகுதியில் சுமூகமானது.

#### ஜோர்தான்

1994இல் இஸ்ரேலும் ஜோர்தானும் சமாதான உடன்படிக்கையில் கைச்சாத் திட்டன. இவற்றுக்கிடையேயான முரண்பாடு ஏறக்குறைய 18.3 பில்லியன் டொலர்களை இழக்கச்செய்தது. சமாதான உடன்படிக்கை மூலம் ஜோர்தான் இஸ்ரேலுடன் உறவு ஏற்படுத்திய எகிப்துக்கு அடுத்த இரண்டாவது அராபிய நாடாகியது.

#### ஈராக்

1948 இலிருந்து இஸ்ரேலும் ஈராக்கும் ஜென்ம விரோதிகளாகவே காணப்பட்டனர். 1948ஆம் ஆண்டு நடந்த அராபிய-இசுரேலிய போரில் ஈராக் தன் படைகளை அனுப்பியது. பின்னர், 1967ஆம் ஆண்டு நடந்த ஆறு நாள் போரிலும், 1973ஆம் ஆண்டு நடந்த யோம் கிப்பூர் போரிலும் எகிப்துக்கும் சிரியாவிற்கும் உதவியது.

ஜூன் 1981இல், ஒபரா இராணுவ நட வடிக்கை மூலம் ஈராக் புதிதாக நிர்மானித்த அணு உலைகளை இஸ்ரேல் தாக்கியழித்தது.

1991 வளைகுடா போரின்போது, ஈராக் 39 ஸ்கட் ரக ஏவுகணைகளை இஸ்ரேல் மீது ஏவியது. ஆயினும் அமெரிக்காவின் வேண்டுகோளின்படி இஸ்ரேல் பதில் தாக்குதல் நடத்தாமல், போர் வேறுவடிவம் எடுக்கவிடாமல் மௌனமாக இருந்தது.

#### லெபனான்

ஜோர்தானில் 1970இல் ஏற்பட்ட உள்ளூர் கலவரத்தைத் தொடர்ந்து, ஜோர்தான் மன்னர் ஹுசைன் பாலத்தீன விடுதலை இயக்கத்தை வெளியேற்றினார். இதனால் ஆயிரக்கணக்கான பலஸ்தீன விடுதலை இயக்க உறுப்பினர்கள் லெபனானில் தஞ்சமடைந்தனர். அங்கிருந்து இஸ்ரேல்மீது தாக்குதல் நடத்தினர். 1981இல் சிரியா பலஸ்தீன விடுதலை இயக்க உதவி யுடன் ஏவுகணைகளை லெபனானில் நிறுத்தியது. 1982இல் லெபனான்மீது இஸ்ரேல் போர் தொடுத்தது. இருமாதங்களில் பலஸ்தீன விடுதலை இயக்கம் அங்கிருந்து வெளியேறும் உடன்பாட்டிற்கு வந்தது.

1983இல் இஸ்ரேலும் லெபனானும் போர் நிறுத்தத்திற்கு உடன்பட்டனர். சிரியாவின் அழுத்தத்தினால் ஒப்பந்தம் 1984இல் செல்லு படியற்றதாகியது. முரண்பாட்டின் அளவு குறைந்ததும் 1985இல் இஸ்ரேல் லெபனானின் 15கி.மீ. அகல பரப்பளவில் இருந்து பின்வாங்கியது. 1993 மற்றும் 1996ஆம் ஆண்டுகளில் ஹிஸ்புல்லா ஆயுத குழு வினருக்கு எதிராக இஸ்ரேல் பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டது. சிரியா வுடனான சமாதான உடன்படிக்கை திட்டத்தின்படி, 2000ஆம் ஆண்டில் தென் லெபனான் பகுதிகளிலிருந்த பாதுகாப்பு வலயங்களை இஸ்ரேல் அகற்றியது.

2006இல் ஹஸ்புல்லாவின் எல்லைதாண்டிய தாக்குதல்களைத் தொடர்ந்து தென் லெபனானில் இருந்த ஹஸ்புல்லாவின் இலக்குகளைத் தாக்கத் தொடங்கியதும் 2006 லெபனான் போர் உருவாகியது. 34 நாட்கள் நீடித்த இப்போரின் விளைவாக, தடுப்பு வலயம் தென் லெபனானில் உருவாக்கப்பட்டது. ஹிஸ்புல்லாவின் பின்வாங்குதலைத் தொடர்ந்து, ஐ.நா. அமைதிப் படைக்கு லெபனானின் பகுதிகளை இஸ்ரேல் கையளித்தது. இருதரப்பும் தமக்கே வெற்றியென அறிவித்தன.

#### பலஸ்தீனம்

1970களில் பாரியளவில் சர்வதேச பயங்கரவாத தாக்குதல்கள் நடைபெற்றன. லெட் விமான நிலைய படுகொலை, முனிச் ஒலிம்பிக் படுகொலை, என்டபே பயணக் கைதிகள் ஆகியன குறிப்பிடத்தக்கன.

1987 மார்கழியில் முதலாவது இன்டிபாடா ஆரம்பித்தது. ஜபய்லா அகதிகள் முகாமில் இருந்து ஆரம்பித்து காசா, மேற்குக்கரை, கிழக்கு ஜெருசலேம்வரை பரவியது. பொது ஆர்ப்பாட்டத்தோடு இஸ்ரேல் பொருட்களுக்கு எதிரான புறக்கணிப்பு, வீதி மறியல், இசுரேலிய பாதுகாப்புப் படையினர்மீது கல்லெறிதல் என்பன இடம்பெற்று சர்வதேச கவனத்தைப் பெற்றது. இஸ்ரேலிய பாதுகாப்புப் படையினரின் துப்பாக்கிச் சூடு, பாரிய கைது போன்ற பதில் நடவடிக்கைகள் சர்வதேச விமர்சனத்திற்கு உள்ளானது. அதுவரை பலஸ்தீன மக்கள் தலைமையாக கருதப்படாத பலஸ்தீன விடுதலை இயக்கம் இஸ்ரேலை அங்கீகரித்து பயங்கரவாத செயல்களை கைவிட்டதும் பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்பட்டது.

1993 மத்தியில் இஸ்ரேலிய, பலஸ்தீன பிரதிநிதிகள் நோர்வே நாட்டின் தலைநகரான ஒஸ்லோவில் சமாதான பேச்சுவார்த்தைகளைத் தொடங்கினர். இதன்விளைவாக இஸ்ரேலும் பலஸ்தீன விடுதலை இயக்கமும் செப்டெம்பர் 1993இல் ஒஸ்லோ ஒப்பந்தத்தில் கைச்சாத் திட்டனர். இஸ்ரேல் பலஸ்தீன விடுதலை இயக்கத்தை பலஸ்தீன மக்களின் பிரதி நிதிகளாக ஏற்றுக்கொண்டனர். பலஸ்தீன விடுதலை இயக்கம் இஸ்ரேலிய அரசின் →

**வே.முல்லைத்தீபனின்...**

# "கடவுளிடம் சில கேள்விகள்"

## ஓர் நோக்கு....




**முல்லை** மண்ணுக்கே உரிய தான மிடுக்கோடு "கடவுளிடம் சில கேள்விகள்" என்ற கவிதை நூலின் மூலமாக தன்னை அடையாளப்படுத்திக் கொள்கிறார் வே.முல்லைத்தீபன். பன்முக ஆற்றல்களைக் கொண்ட இவர் நெடுநாட்களாக தன் அகத்தில் சுமந்தவற்றை கவிதைகளாக்கி கவியுலகில் பிரவேசித்திருப்பது மகிழ்ச்சிதரும் செய்தி.

சமூகத்தில் நடைபெறும் அநீதிகளைக் கண்டு பொறுத்துக்கொள்ள முடியாது இவருள் எழும் ஆதங்கமும் கோபமும் இவரை கடவுளிடம் கேள்வி கேட்க வைத்திருக்கிறது. கடவுளிடம் இவர் கேட்கும் கேள்விகள் உலகியல் அடிப்படையிலும் மற்றும் தர்க்க அடிப் படையிலும் விஞ்ஞான அடிப்படையிலும் நியாயமானவையாகவே தென்படு கின்றது.

இந்நூலின் சமர்ப்பணம் "தான் தோன்றீஸ்வரனை" விழித்து "இன்னுமொரு முள்ளிவாய்க்காலை இனியெமக்குத் தந்திடாதே" என சமாதானத்திற்கு சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. கொடிய யுத்தம் ஒன்று உமிழ்ந்த மிச்சங்களாக மீண்டெழும் இனம் மீண்டும் ஒரு கோரத்தை விரும்பவில்லை என்பதன் குறிகாட்டியாக அமைந்திருக்கின்றது தீபனின் கவிதைகள். தன்னுணர்ச்சி சார்ந்தவையாக இருப்பினும் இவரின் சமூகநல நாட்டத்தையும் நாம் வாழும் சமூகப் பின்னணியையும் கோடிட்டுக் காட்டத்தவறவில்லை. "எங்களுக்கும் வெளிநாட்டில் சொந்தக்காரருண்டு என்ற கவிதையில் -

**"கோபுரத்திற்கு**
**கொட்டிக் கொடுப்பதுடன்**
**அதைச் சுற்றியுள்ள**
**குடில்களுக்கு ஆயிரத்திலாவது**
**கூரையமைத்துக்**
**கொடுத்தாலென்ன..."**

என்ற கவிதைகள் கோபுரங்களை அமைத்தும் மணிமண்டபங்களைக் கட்டியும் இன்னும் என்னென்னமோ எல்லாம் செய்கிறோமே. வாழ்வாதார உதவிகள் கிடைக்காமல் தறப்பாளிற்கும் கரத்திற்கும் காத்திருந்து அல்லற்படும் மக்கள் எம் தேசத்தில் இல்லாமல் இல்லை என்ற உண்மையை இக்கவி வரிகள் புலப்படுத்துகின்றன.

இங்கு "மாடி வீட்டு யன்னல்கூட சட்டை போட்டிருக்கு. ஒரு ஏழைப் பிள்ளைகூட இங்கு அம்மணமாயிருக்கு" என்ற பாடல் வரிகளை ஒப்புநோக்கிப் பார்ப்பதும் சாலச்சிறந்தது.

முல்லைத்தீபன் தன் கவிதைகளில் சொல்ல விளைகின்ற செய்தியையும் அதனைச் சொல்லுகின்ற முறையும் தனித்துவமானது. உயிர்த்துடிப்புள்ளது. கவிதை எந்த உணர்ச்சியை, கருத்தை தன்னகத்தே கொண்டிருக்கிறதோ அதைப் படிப்பவரின் நெஞ்சில் மின் வெட்டைப்போல பாய்ச்சும் ஆற்றல் தீபனின் கவிதைகளுக்குண்டு. சில கவிதைகள் படித்து முடித்தவுடன் ஊற்றுப்பெருக்கும்போல் உணர்ச்சிகளை பூத்துச்சொரியச் செய்கின்றன. சில கவிதைகள் மனதிற்குள் கிரகிப்பை ஏற்படுத்திவிடுகின்றன.

இவ்விதமான வாழ்க்கை சொர்க்கமும், நரகமும், தனிமை, தவிப்பு என இருபத்தைந்து கவிதைத் தலைப்புக் களைக் கொண்டு, "கடவுளிடம் சில கேள்விகள் கவிதை தொகுப்பு நூல் வெளிவந்திருக்கிறது.

உள்ளத்தில் கனன்று எழும் உணர்வுகளைத் தாங்கி ஆற்றொழுக்காக வரும் சொற்களைக் கொண்டனவாக கவிதைகள் அமைந்திருக்கின்றன. "கடவுளிடம் சில கேள்விகள்" என்ற கவிதையில் -

**"கோயில்கள் கட்டி**
**கோபுரம் எழுப்பியுனை**
**கொண்டாடிய எம்மீது**
**குண்டடி படும் போது**
**கடவுளே நீ எந்தக்**
**கருவறையில் ஒழிந்துகொண்டாய்?"**

என்ற கவி வரிகள் இதனை மெய்ப்பித்து நிற்கின்றன.

கருத்துப்போக்கிற்கும் உணர்ச்சிப் போக்கிற்கும் இடையூறில்லாது சொற்கள் சேர்ந்துள்ள முறையிலே சிறப்பான ஓசைநயத்தோடு ஒலிக்கின்றன வாலிப வேதனை என்ற கவிதையில்,

**"காலங்கள் கூடவே**
**கோலங்கள் கரையுது**
**கோலங்கள் கண்டுமே**
**கோவணங்கள் கழருது."**

என வருகின்ற கவிதை வரிகள் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

"சுயசரிதை" என்ற கவிதை கவிஞரின் தனித்தன்மையைக் காட்டி நிற்கின்றது. தான் வாழ்ந்த விதம், வாழ்ந்த காலம், வளர்ந்த தேசம் பற்றிக் குறிப்பிடும் இவர்.

**"ஆயிரத்துத் தொள்ளாயிரத்து**
**எண்பதுகளில் நான்**
**கருவிலிருந்த போது**
**என்னப்பர் இல்லாமற் போனார்"**
**எனத் தொடர்ந்து.**
**என் மகனும் இப்படி யொரு கவிதை**
**எழுதக் கூடியதல்லவா?"**

என அக்கவிதையை நிறைக்கின்றார்.

"பாடை" என்ற உருவகக் கவிதை யில் பாடைக்குச் சொல்லப்பட்ட ஒவ்வொரு உருவகமும் நகைப்பாகவும் நையாண்டியாகவும் சமூகத்திற்குச் சொல்ல விளைகின்ற செய்தி அற்புதமானது. இதில்

**"வாழும்போது**
**கேட்டிராத வாழ்த்**
**தொலிகளுடன்**
**வீதியுலா வரும்**
**வசந்தமாளிகை"**

எனக் குறிப்பிடு கின்றார்.

குருட்டுக் கடவுள் என்ற கவிதை யில் வரும்,

**"சுற்றுலாக்கள்**
**சுடலைகளையும்**
**சுகமான நகரமாக**
**சுற்றிப்**
**பார்க்கிறது"**

வரிகளில் சொல்ல எத்தனிக்கின்ற ஆழ்ந்த பொருள் ஒன்று மட்டும் போதுமானது. அவரின் கவியினையும் ஆற்றலுக்கு யதார்த்தத்தைப் பிரதி பலித்துக் காட்டிச் சிந்திக்கவைக்கும் கவிஞரின் உத்தி பாராட்டுக்குரியதே.

ஒப்பனை நடிகர்களுக்கோர் மடல் என்ற கவிதையில்,

**"சிரிக்கத் தெரிந்த**
**மனிதர்கள் கூட**
**சிலவேளைகளில்**
**சிரிக்க மறக்கின்றனர்"**

என்று தொடர்ந்து,

**"கண்ட இடத்திலவனுக்கு**
**கைலாகு கொடுத்து**
**கட்டியணைப்போரே**
**நாதியற்று அனாதரவாய்**
**நடுத்தெருவில் அவன்**
**விழுந்து கிடக்கையில்**
**எழுந்து நடப்பதற்கோர் கை**
**வலிந்து கொடுக்கவில்லையே.."**

என வருகின்ற கவிதைகள் யதார்த்தத்தை பிரதிபலிப்பன.

இவ்விதமாக இருபத்தைந்து கவிதை களைக் கொண்ட "கடவுளிடம் சில கேள்விகள் என்ற கவிதை நூல் கவியுலகில் விழுதுவிடவேண்டும். வர்த்தக நோக்குக்கொண்ட உலகிலே சமூகத்தைப் பற்றிச் சிந்திக்கின்ற, எழுதுகின்ற வே.முல்லைத்தீபனைப் போன்ற இளம் எழுத்தாளர்கள் தோன்ற துணையாக இருப்பது நம் அனை வரினதும் தலையாய பணியே.

**- தம்பிப்பிள்ளை சுதன் -**
**அளவெட்டி.**

# மூட நம்பிக்கையில் மூச்சுவிடும் தமிழினம்

**பின்பு** மிருகபலி மீண்டும் அமுலுக்கு வந்தது. அவர்களும் (புலிகள்) கண்டும் காணாமல் விட்டிருந்தனர். இப்படியாகப் பல தடைகளையும் தாண்டி வேள்விகள் என்று சொல்லப்படும் மிருக பலியிடல் நிகழ்வுகள் நடந்தேறிய வண்ணமே உள்ளன.

வலி.வடக்கு பகுதி மக்களில் ஒரு பகுதி மக்கள் மீள்குடிய மராமல் இருந்த பகுதிக்குள் (இப்போது அப்பகுதி முற்றாக விடுவிக்கப்பட்டுள்ளது) வேள்விக்கு பெயர்போன ஆலயமொன்று இருந்தது! ஆலய நிர்வாகிகளின் அயராத உழைப்பினாலும் கடும் முயற்சியாலும், ஆலயத்தின் பெயரில் வேறிடமொன்றிலுள்ள வளவு ஒன்றில் வைத்து மிருக பலியிடல் நடந்தேறிவந்தது!

பல வருடங்களாக நடைபெற்ற இவ்வேள்வியிலே ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கிலான கடாக்கள் பலியிடப்பட்டு வந்தன! அந்த வைரவர் பெருமானின் நேர்த்திக்காக பொதுமக்கள் ஆடுகளை வளர்த்துப் பலியிட்டும் வருகின்றனர். இது அந்த ஆலயத்தின்மீது அடியவர்களின் பக்தி உணர்வையும், நம்பிக்கையினையும் எடுத்துக்காட்டுகின்றது!



இப்படியான நம்பிக்கை உணர்வுகளே மிருக பலியிடலை தடுக்கமுடியாத நிலைப் பாடுகளாகும். அதிகாரத்தில் உள்ளவர்கள் கூடத் தடுத்தும் மிருக பலியிடல் நடைபெற்று வருவதன்மூலம் இதனைக் கட்டுப்படுத்த முடியுமா, என்றொரு கேள்வியும் எழாமல் இல்லை.

ஆலய நேர்த்திக்காக கடாக்களை பலியிடும் முறை ஒருபுறமிருக்க, அதனை வளர்ப்பவர்களிடையே கடும் போட்டிகள் உண்டாகிவருகின்றது! வேள்விக்கு முதல் நாள் பெயர்பெற்ற ஆட்டுக்கடா வளர்ப் பாளர்கள் வீடுகளை அலங்கரித்து, மின் விளக்குளால் சோடனை செய்யப்பட்டு, இரவுநேரம் கடாக்களை மக்கள் பார்வைக்கு வெளியே கட்டிவைப்பார்கள். பெரும் செலவில் அன்றைய பொழுதைச் செலவளிப்பார்கள்.

யாருடைய கடா சிறந்தது என்ற போட்டியில் அடிபாடுகள், வெட்டுப்பாடுகள் என்பனவும் இடம்பெற்றுவரும். இந்தப் போட்டி மனப்பாங்கினால் ஒரு ஆடு வளர்ப்பாளி வருடந்தோறும் இலட்சக் கணக்கிலே நட்டமடைந்துவரும் நிலையும் உள்ளது!

எமது மக்களின் மூடநம்பிக்கையின் இன்னொரு வடிவமாக இளங்கொடி விடயம் அமைகிறது. ஆடு அல்லது மாடு குட்டி போட்டால் குட்டிகள் வெளியே வந்தபின் ஒருசில மணிநேரங்களின் பின் போடப்படும் ஒருவித சதையுடன் கூடிய நீளமான ஒன்றையே இளங்கொடி என்கின்றோம்.

இந்த இளங்கொடிகளை ஆலமரம் போன்ற பால் உள்ள மரங்களில் கட்டித் தொங்கவிடுவார்கள். காரணம் கேட்டால், பால் மரங்களில் இளங்கொடிகளைக் கட்டிவிட்டால் மட்டுமே ஆடு அல்லது மாடுகளில் அதிகமான பால் சுரக்கும் என்பது எம்மவர்களின் காலம் காலமான நம்பிக்கையாகும்! மேய்ச்சல் தரைகளில் கன்றுபோடும் மாடுகள் மற்றும் ஆடு களின் இளங்கொடிகளை நாய்கள் இழுத்துச்செல்லும். சிலதை போட்ட மிருகங்களே தின்றுவிடும். இப்படி நடக்கும் மிருகங்களிடம் பால் இருக்காதா? இதில் வேடிக்கை என்னவென்றால் பிரதான வீதிகளில் நிற்கின்ற ஆலமரங்களில் அதன் விழுதுகளில் இளங்கொடிகளை கட்டிவிடுவார்கள்.

இதனால் வீதியால் போகமுடியாத அளவுக்கு துர்நாற்றம் வீசும். பெரும் சுகாதாரப் பிரச்சினைகள் தோன்றும். இதையெல்லாம் இந்த மூட நம்பிக்கை யாளர்கள் ஒருபோதும் உணர்வதில்லை. பால் மரங்களில் இளங்கொடிகளை கட்டிவிட்டால் போதும் என்பதே இவர் களின் நிலைப்பாடாகும். இந்த இளங் கொடிகளை யாருக்கும் இடையூறு இன்றி நிலத்திலே வெட்டிப் புதைத்து விட்டால் போதும். இது நடக்குமா??

ஒவ்வொரு வீடுகளின் வாசற் படலை யில் பெரிய சோடாப் போத்தல்களில் பல வர்ணக் கலர்கொண்ட நீரினால் நிரப்பப்பட்டு சோடப் போத்தல்கள் கட்டி தொங்கவிட்டிருக்கின்றார்கள். படித்தவர் முதல் பாமர மக்கள்வரை இந்த விடயத்தை கடைப்பிடித்து வருகின்றனர்.

**அளவெட்டி ப.உதயகுமார்**




இப்பகுதிக்கு சிறுவர்கள்,
மாணவர்களிடம்
இருந்து தரமான ஆக்கங்கள்
எதிர்பார்க்கப்படுகின்றது.



# யமுனை நதி அழுவது ஏன்?

அக்பர் தமது மனைவியுடன் யமுனை நதிக்கரையில் அமர்ந்து யமுனையின் அழகினை ரசித்துக் கொண்டிருந்தார்.

பேகம்... யமுனை நதியின் நீரோட்டத்தின் சலசலப்பு உன்னை அழகி அழகி என்று கூறிக்கொண்டே செல்வதுபோல் தோன்றுகிறது, இல்லையா பேகம் என்றார் கொஞ்சும் குரலில்.

ஆனால் அரசியாரோ அக்பர் கூறியதை மறுத்து உங்களுக்கு அப்படித் தோன்றுகிறது. யமுனை நதியின் சலசலப்பு ஒரு பெண் அழுதுகொண்டிருப்பது போல தனது கண்களுக்கு தெரிகிறது. யமுனை அழுது கொண்டிருக்கிறது என்றுதான் கூறவேண்டும்... என்றார் அரசியார்.

அக்பருக்கோ அதிர்ச்சியாக இருந்தது. ஏன் பேகம் உன் அழகைக் கண்டு பொறாமைப்பட்டு அழுது கொண்டிருக்கிறதோ? என்றார் அரசர். அரசியாரின் முகம் வெட்கத்தால் சிவந்துபோனது.

அடுத்த நாள் அரச சபை கூடியதும் அமைச்சர்களிடம் தமது சந்தேகத்தை கேட்டார். யமுனை அழுது கொண்டிருப்பது போல் தோன்றுவதற்கு என்ன காரணம்? யாருக்கும் என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

பீர்பால் சபையில் மௌனமாக அமர்ந்திருந்தார். என்ன பீர்பால்... நீங்கள் கூறுங்கள் யமுனை ஏன் அழுது கொண்டிருக்கிறது? என்றார் அக்பர். தமது வழக்க்கமான புன்சிரிப்புடன் தமது இருக்கையை விட்டு எழுந்தார் பீர்பால்.

அரசே இமயமலைதான் யமுனையின் தாயகம். வங்க கடல் யமுனையின் புகுந்த வீடு எனக்கூறலாம். பிறந்த இடத்தைவிட்டு பிரிந்து புகுந்த இடமான வங்கக் கடலைநோக்கி போக வேண்டியுள்ளதே என வேதனைப்பட்டு அழுது கொண்டிருப்பதாக நான் நினைக்கிறேன் என்றார் பீர்பால். தனது கேள்விக்கு சரியான விளக்கத்தை அளித்த பீர்பாலை மனமுவந்து பாராட்டினார் அக்பர். சபையில் இருந்த அனைவரும் பீர்பாலின் சாதுரியமான பேச்சை கேட்டு ரசித்து தமது மகிழ்ச்சியினை வெளிப்படுத்தினார்கள்.

## வாரம் ஒரு திருக்குறள்

**ஊழ்**

**பேதைப் படுக்கும் இழவு ஊழ் அறிவு அகற்றும்**
**ஆகல் ஊழ் உற்றக் கடை.**




அறிவு பேதைப்படுக்கும் ஒருவனுக்கு எல்லா அறிவும் உளவாயினும் கைப்பொருள் இழத்தற்கு ஏதுவாகிய ஊழ் வந்துற்றவிடத்து அ்.து அதனைப் பேதையாக்கும். இனி அவன் அறிவு சுருங்கி இருப்பினும் கைப் பொருளாதற்கு ஏதுவாகிய ஊழ் வந்துற்றவிடத்து அ்.து அதனை விரிக்கும்.

குறள்:372

## ஆமைகள்

ஆமைகளின் பாலினத்தை அது எழுப்பும் ஒலியை வைத்து வித்தியாசப் படுத்தலாம்.



## கர்ஜிக்கும் பறவை



நெருப்புக் கோழியால் குதிரையை விட வேகமாக ஓட முடியும். ஆண் நெருப்புக் கோழியால் ஒரு சிங்கத்தை போல குரல் எழுப்பமுடியும்.

## கருநீல நாக்கு



ஒட்டகச்சிவிங்கியின் நாக்கு கரு நீல நிறத்தில் இருக்கும்.

## புலியின் கோடுகள்



புலிகளின் உரோமங்களில் இருக்கும் கோடுகள் போல அதன் தோலிலும் கோடுகள் இருக்கும். ஒரு புலிமீது இருக்கும் கோடுகள் போல வேறு எந்த புலிக்கும் இருக்காது. ஒவ்வொரு புலிக்கும் வெவ்வேறு அமைப்பில்தான் கோடுகள் இருக்கும்.

## முகரும் சக்தி




யானைகளால் 3 மைல்கள் தொலைவில் இருக்கும் தண்ணீரை முகரமுடியும்.

## நாயின் ரேகை



கைரேகைகளை வைத்து மனிதர்களை கண்டறிவதை போல, நாய்களின் மூக்கில் இருக்கும் ரேகைகளை வைத்து அவற்றை கண்டறியலாம்.

## குணாதிசயங்களைச் சொல்லும் கையெழுத்து




**1) கையெழுத்துப் போட்டு விட்டுக்கீழே சின்னக் கோடு போட்டால்...**

தைரிய பார்ட்டிகள்.
நல்லவர்தான். ஆனால், கொஞ்சம் சுயநலமாகச் சிந்திப்பீர்கள்.

**2) கையெழுத்தின் கீழ் இரண்டு புள்ளிகள் வைத்தால்...**

ரொமான்டிக் பார்ட்டி. உடை மாற்றுவதுபோலக் காதலன் அல்லது காதலியை மாற்றுவீர்கள். மற்றவர்களை கவர்ந்திழுக்கும் ஆற்றல் உங்களிடம் உண்டு.

**3) கையெழுத்துக்குக்கீழே ஒரே ஒரு புள்ளி வைத்தால்...**

கூல் பார்ட்டி. சாதாரணமானவராக இருப்பீர்கள். பிடிக்காதவர்களைத் திரும்பிக்கூடப் பார்க்கமாட்டீர்கள்.

**4) உங்கள் கையெழுத்தின் கீழ்ப்புள்ளியோ, கோடோ கிடையாதா?**

உங்கள் வாழ்க்கை உங்கள் கையில்தான். அடுத்தவர்கள் கருத்துச்சொன்னால் கண்டுகொள்ளவேமாட்டீர்கள்.

**5) பெயருக்கு சம்பந்தமே இல்லாமல் கையெழுத்துப் போட்டால்...**

கமுக்க பார்ட்டி. உங்களிடம் நம்பி இரகசியம் சொல்லலாம். கொஞ்சம் புத்திசாலியும்கூட.

**6) பெயருக்குத் தொடர்புள்ள ஆனால், கோழி கிண்டிய மாதிரி புரியாத கையெழுத்துப் போட்டால்...**

புத்திசாலி பார்ட்டிகள். ஆனால், யோசிக்காமல் முடிவெடுப்பீர்கள். ஒரு வரி பாராட்டுதலுக்கே மயங்கிவிடுவீர்கள்.

**7) முழுப்பெயரையும் பொறுமையாகக் கையெழுத்துப் போட்டால்...**

நல்லவர். ஆளுக்கும், சூழலுக்கும் தகுந்தமாதிரி சமாளித்துக்செய்வீர்கள். ஆனால், உங்கள் கருத்துக்களில் தெளிவாக இருப்பீர்கள்.


**8) வெறுமனே பெயரை எழுதிவைத்தால்...**

அம்மாஞ்சி. பாசமாகவும், உறவுக்கு உயிரையும் கொடுப்பீர்கள்.

**9) கையெழுத்துக்குக் கீழே திகதி, வருடம் போடுவீர்களா?**

வயதானவர்கள். பாரம்பரியக்கலை பிடிக்கும். முடிவெடுக்க நின்று நிதானமாக யோசிப்பீர்கள்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**
மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.
சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி: 12.05.2014

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 1042**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல:167, யாழ்ப்பாணம்.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1040**

**எம்.மயூரி, நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை.**

பரிசுக்குரியவர்: 1040

பாராட்டுக்குரியவர்கள்

01. ம.அபிலாஷ், அன்புவழிபுரம், திருகோணமலை.
02. அ.ஜனார்த்தனன், மட்டுவில், நுணாவில்.
03. தெ.கம்சா, உயரப்புலம், ஆனைக்கோட்டை.
04. அ.சாருமதி, ஜின்னாநகர், திருகோணமலை.
05. ஆர்.இஷந்திகா, பிரதான வீதி, மாத்தறை.
07. எவ்.எவ்.ஷபா, வாகரை, மட்டக்களப்பு.
08. மு.டிலக்ஷன், பூவரசங்குளம், வவுனியா.

> **இனி...**
> **‘என்ன அடிபோடி, நான் கஜானாவை நிரப்ப வழிதேடிக் கொண்டிருக்கிறேன், நீ .... நிரப்ப வழிதேடுகிறாயா? என்று இடையே பாவித்த கெட்ட வார்த்தை தனக்கு கேட்காதது போல வேறுபுறம் முகத்தைத் திருப்பிக் கொண்டார் சியம்பா.**

“மேலதிகமாக ஆட்கள் வேண்டும் முடிக்கலாம்!” என்றான். மேலதிகமாக பணமும் செலவானது.

மூன்று மாதங்களில் மாநாட்டு மண்டபமும், நைல் ஹோட்டலும் பிரமாண்டமாக கட்டி முடிக்கப்பட்டன. ஆனால் முன்னர் திட்டமிட்டதைவிட முந்நூறு மடங்கு பணம் செலவானது.



எடுத்துவருமாறு வங்கிக்கு ஆள் அனுப்பினான் இடிஅமீன்.

அன்று வங்கியில் பணம் இல்லை. வங்கி உயரதிகாரிகளுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

எப்படியோ அரும்பாடு பட்டு தைரியத்தை வரவழைத்து “இன்று பணம் வங்கியில் இல்லை!” என்று கூறினார்கள்.

அதிகாரிகள் கூறியதைச் சரியாக விளங்கிக்கொள்ளாத இடி அமீனின் முட்டாள் உதவியாளன் இன்று பணம் தரமுடியாதாம்! என்று அமீனிடம் போய்க்கூற அமீனுக்கு தலை, கால் தெரியாமல் கோபம் வந்து விட்டது.

“வங்கியை மூடிவிட்டு அந்த அதிகாரிகளைப்

மையத்தில் உதைத்த உதையில் சுருண்டுமடங்கி வலியின் அடர்த்தியால் மயங்கிப்போனான்.

வங்கி அதிகாரிகள் முகத்தில் தங்கள் வலியையும் மறந்து, சின்னதாக மகிழ்ச்சி ரேகைகள் எட்டிப் பார்த்தன.

அத்தனைபேரையும் விடுதலை செய்த அமீன், தன் அந்தரங்கச் செயலாளர் சியம்பாவை அழைத்து ஆலோசித்தான்.

கஜானாவை நிரப்ப என்ன செய்யலாம்...? உடனே ஏதாவது செய்தாகவேண்டும் யோசனை கூறும்?” என்றான்.

யோசனை கூறாவிட்டால் ஒரே போடாகப்போட்டுத் தள்ளிவிடுவானோ?” என்ற பயம் பிடித்துக்கொண்டது சியம்பாவை.

அந்த நேரம் பார்த்து தொலைபேசி அலற, அதனை எடுத்த அமீன், “என்ன அடிபோடி, நான் கஜானாவை நிரப்ப வழிதேடிக்கொண்டிருக்கிறேன், நீ .... நிரப்ப வழிதேடுகிறாயா? என்று இடையே பாவித்த கெட்ட வார்த்தை தனக்கு கேட்காதது போல வேறுபுறம் முகத்தைத் திருப்பிக் கொண்டார் சியம்பா.

“ஏன் உமக்கு சிரிப்பே வராதா? குற்றம் செய்தவர்கள் மாதிரி உம்மென்று இருக்கிறீரே?” என்றான்.

சியம்பாவுக்கு வாழ்க்கையே வெறுத்துவிட்டது. நாகரிகம் கருதி காதுகளை திருப்பிக்கொண்டதும் குற்றமாகிவிடுமோ என்று பயந்தவராக அசட்டுத்தனமான சிரிப்பொன்றை உதிர்த்தார்.

அற்புதன் எழுதிய

# இடி அமீன்

## உண்மைத் தொடர்...

**அதிர் இடி 36**

நினைத்தபடி கட்டடப் பணிகள் முடிவடைந்ததை நினைத்து இடி அமீன் சந்தோசப்பட்டான்.

அரச திறைசேரி விரைவாக காலியாகிக் கொண்டிப்பதை எண்ணி திறைசேரி அதிகாரிகளும், தலைமைக் கணக்கு தணிக்கையாளர்களும் முடியைப் பிய்த்துக்கொண்டனர்.

இன்னொரு குண்டைத் தூக்கிப் போட்டான் இடி அமீன்.

இவனுக்கு என்ன பைத்தியம் பிடித்துவிட்டதா? என்று திறைசேரி அதிகாரிகளுக்கு உண்மையாகவே சந்தேகம் வந்துவிட்டது.

கம்பலாவுக்கு 70 மைல் தொலைவில் இருப்பது நாகசொன்கோலா.

அங்கு விமானப் படைத் தளம் ஒன்றைக் கட்டுமாறு உத்தரவு பிறப்பித்தான் அமீன்.

விமானத்தளத்தின் பெயரும் குறிக்கப்பட்டது.

.'.பீல்ட் மார்ஷல் இடி அமீன் விமானப் படைத்தளம்.

“1967இல் நடைபெற்ற யுத்தத்தில் எகிப்தில் இருந்த விமான நிலையம் ஒன்று இஸ்ரேலால் தாக்கி அழிக்கப் பட்டது. நாம் கட்டப்போகும் விமானப் படைத்தளம் யாராலும் தாக்கமுடியாத தளமாக இருக்கவேண்டும். சுரங்க அமைப்புக்கள் இருக்கவேண்டும் என்று விளக்கினான் அமீன்.

“விமானங்களோ போதியளவு கிடையாது. இதற்கு விமானப் படைத்தளம் வேறு தேவையா தண்டம், தண்டம், அறியாச் செலவு? என்று மனதுக்குள் பொருமிய அதிகாரிகள் அமீன் முகமெதிரே மிக நல்ல திட்டம். நாங்கள்கூட யோசிக்கத் தவறிவிட்டோம்!” என்றனர்.

அரச நிதியை தன் இஷ்டப் படி அமீன் செலவு செய்த வேகத்திற்கு அரச கஜானா தாக்குப்பிடிக்காமல் காலியானது.

கஜானா காலியாகிக் கொண்டிருப்பதை இடி அமீனுக்கு தெரிவிக்கப் பயந்தனர் அதிகாரிகள்.

தனது செலவுக்குப் பணம்



பிடித்துவாங்கடா!” என்று கத்தினான்.

“பிடித்துவா” என்று அமீன் சொன்னதை அவனது உதவியாளர்கள் அடித்துவா என்று விளங்கிக் கொண்டோ என்னவோ, அதிகாரிகளை செமர்த்தியாக உதைத்து விட்டனர்.

முதலில் உதை. பின்னர் கதை என்பதால் தங்கள் நிலையை அதிகாரிகளும் விளக்கமுடியாமல் போய்விட்டது.

அமீன் முன்னால் மண்டியிட்டு இருக்க வைக்கப்பட்டனர். சிலருக்கு பற்கள் உடைந்திருந்தன.

மூச்சுப்பிடித்து தங்கள் தரப்பு விளக்கத்தை கெஞ்சும் பாவனை-யோடு அதிகாரி ஒருவர் கூறி முடித்தபோது தான் கொஞ்சம் அவசரப்பட்டுவிட்டேன் என்பது அமீனுக்கு உறைத்தது.

தகவல் கூறியதன் உதவியாளர்களில் ஒருத்தனை அழைத்தான்.

இவர்கள் உன்னிடம் என்ன சொன்னார்கள் என்று கேட்டான்.

அவன் முதலில் சொன்னதையும் பயத்தில் மறந்து இனி பணமே இல்லை என்று சொன்னார்கள் எனக்கூறிய போது அமீனின் கால் உயர்ந்து அவனது இடுப்பின் கீழ்

இது பரவாயில்லை என்று சிரிப்பை வரவேற்ற அமீன், “நான் லிபியாவுக்கு விஜயம் செய்யலாம் என்று இருக்கிறேன்” என்று சட்டென்று கூறவும், சியம்பாவின் புருவங்கள் ஆச்சரியத்தால் உயர்ந்தன.

லிபியா உட்பட அரபு நாடுகளின் பயங்கர விரோதியான இஸ்ரேலுடன் நட்பு வைத்திருப்பவன் இடி அமீன்.

அரபு நாடுகளில் இஸ்ரேல், அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு முற்றிலும் பிடிக்காத ஒருவர் கேணல் கடாபி.

விடுதலைக்காகப் போராடுவோர் விமானத்தைக் கடத்துவதிலும் தவறு கிடையாது என்று கூறியவர் கடாபி.

இஸ்ரேல் என்ற நாடு உலக வரை படத்தில் இருந்து உதிர்ந்தே தீர வேண்டும் என்பதில் அசைக்கமுடியாத உறுதிகொண்டவர்.

ஒரே நேரத்தில் இஸ்ரேலுடன் அதன் பயங்கர எதிரியான லிபியாவுடனும் எப்படி உறவு வைத்திருக்க முடியும்?

அதனால்தான் சியம்பாவின் புருவங்கள் அளவுக்குச் சற்று அதிகமாகவே உயர்ந்தன. அதனைப் புரிந்துகொண்டு அமீனே விளக்கத்தையும் கூறினான். இஸ்ரேல் நான் கேட்ட நிதி உதவியை செய்வதற்கு தயங்குகிறது.

**(தொடரும்)**

---

# முரசு
# குறுக்கெழுத்துப் போட்டி

**வாசக நெஞ்சங்களே!**
**உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

## குறுக்கெழுத்துப் போட்டி - 571

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | |
| 13 | 14 | 15 | | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | | 24 |
| 25 | | | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 12.05. 2014 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.

அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 571
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 569- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உ 1 | க 2 | ந் 3 | த 4 | ம 5 | லை 6 |
| த 7 | ச 8 | | மி 10 | ம் 11 | |
| ர 13 | ப் 14 | பு 15 | | நே 17 | ரு 18 |
| வி 19 | பு 20 | லை 21 | | | க 24 |
| தா 25 | | அ 27 | க 28 | வ 29 | ல் 30 |
| ன 31 | பு 32 | ப் 33 | சி 34 | | க 36 |

**இடமிருந்து வலம்**

01. மலையகத்திற்கே உரித்தான கலைகளில் ஒன்று.
07. வில்வித்தை வல்லான். (குழம்பியுள்ளது)
13. யூகிப்பு. விநாயகக் கடவுளது உபய சக்திகளுள் ஒருவர். (குழம்பியுள்ளது)
17. மகள். குமாரத்தி.
19. நீட்டுப் போக்கு. (குழம்பியுள்ளது)
28. தலை குழம்பிப் போய்விட்டது.
31. தாளம் இல்லாமல் விருத்தம் பாடுவது. (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

01. குயில். கோகிலம்.
02. தரும நூல். (குழம்பியுள்ளது)
03. அன்புடையோன் (திரும்பியுள்ளது)
04. ஆந்தை. வளைவு.
05. தள்ளுபடி (குழம்பியுள்ளது)
18. வாகனங்களை உற்பத்தி செய்யும் ஒரு கொம்பனி. (திரும்பியுள்ளது)
22. விவாகமான நிலை. (திரும்பியுள்ளது)
29. மாயவித்தை. கடைசி எழுத்து விடுபட்டுள்ளது.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 569 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி.**

எவ்.எம்.அப்துல்லா, ஜின்னாநகர், திருகோணமலை.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. கே.இராஜகோபால், கந்தசுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டை.
02. எம்.காளிமுத்து, பரந்தன், கிளிநொச்சி.
03. அ.பிரிந்தன், பிரதான வீதி, சாவகச்சேரி.
04. எஸ்.பாலசாரங்கன், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
05. ச.கானுஜன், அராலி தெற்கு, அராலி.
06. எம்.மலா, புன்னாலைக்கட்டுவன், யாழ்ப்பாணம்.
07. ப.சுரேன், கோவில் வீதி, வவுனியா.
08. பி.மேரி அன்ரனி, மடு, மன்னார்
09. இ.சாமந்தி, கொடிகாமம் வீதி, புலோலி.







தமிழில் 'தாம் தூம்' உட்பட சில படங்களில் நடித்தவர் கங்கனா ரணாவத். இப்போது இந்தியில் கவர்ச்சி கன்னி. தற்போது




# வைகாசியில் வருகிறது ஐ...!

ஷங்கர் இயக்கத்தில் விக்ரம் 'ஐ' படத்தில் நடித்துவருகிறார். அதிக பொருட்செலவில் உருவாகியுள்ள இப்படத்தின் படப்பிடிப்பு பெரும்பாலும் வெளிநாடுகளில் நடந்துள்ளது. இதில் விக்ரம் உடல் மெலிந்து ஒல்லியாக வித்தியாசமாக வருகிறார்.

இதில் நாயகியாக எமிஜாக்சன் நடிக்கிறார். சுரேஷ்கோபி, சந்தானம் ஆகியோரும் நடிக்கின்றனர். ஏ.ஆர். ரகுமான் இசையமைக்கிறார். பி.சி.ஸ்ரீராம் ஒளிப்பதிவு செய்கிறார். ஒஸ்கார் பிலிம்ஸ் தயாரிக்கிறது.

பாடல்களை கனடாவில் வெளியிட ஏற்பாடுகள் நடக்கின்றன. இதன் பாடல் வெளியீட்டு விழாவை கனடாவில் பிரமாண்டமாக நடத்த திட்டமிட்டு உள்ளனர். இந்த விழாவில் ஹொலிவூட் நடிகர், நடிகைகள் பங்கேற்கின்றனர். அர்னால்டு சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார்.

இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள இப்படம் ரிலீசுக்கு தயாராகி உள்ளது. ஹொலிவூட் படத்துக்கு இணையாக உள்ள இப்படத்தை மே மாதம் வெளியிட படக்குழுவினர் திட்டமிட்டு உள்ளனர்.

# உதட்டை கடித்த கங்கனா ரணாவத்!

அவர் ரிவால்வார் ராணி என்ற படத்தில் நடித்துவருகிறார். சம்பல் பள்ளத்தாக்கு கொள்ளைக்கார ராணியாக நடித்து வருகிறார். படத்தில் கங்கனா நடித்துள்ள முத்தக்காட்சிதான் இப்போது பொலிவூட்டில் ஹொட் டொபிக். முத்தக்காட்சி இப்போ சர்வசாதரணம்தான் என்றாலும் இது கொஞ்சம் ஸ்பெஷல். இந்த முத்தக்காட்சியில் நடித்தபோது ஹீரோ வீர்தாசின் உதட்டை கடித்து கங்கனா இரத்தக்காயமாக்கியதுதான் அந்த சிறப்பு.

சில நாட்களுக்கு முன்பு மும்பை ஸ்டூடியோ ஒன்றில் இந்த முத்தக்காட்சியை எடுத்தார்கள். ஹீரோ வீர்தாசுக்கு முத்தக்காட்சி புதுசு. அதனால் தயக்கத்துடன் நடித்தார். இதனால் பல டேக்குகள் போனது. எரிச்சலுற்ற கங்கனா, ஒரு டேக்கில் வீர்தாசின் உதட்டை இழுத்து வைத்து கடித்துவிட, வீர்தாஸ் உதட்டில் இரத்தம் கசிந்தது. கங்கனா ஷூட்டிங் ஸ்பொட்டை விட்டு வெளியேறிவிட்டார்.

பின்னர் ஒரு வாரத்துக்குப் பிறகு வீர்தாசுக்கு பயிற்சி கொடுத்து கங்கனாவை சமாதானப்படுத்தி நடிக்க வைத்திருக்கிறார்கள். இந்த இரத்த முத்தக்காட்சியை மேக்கிங் வீடியோவில் வெளியிட்டு படத்துக்கு பரபரப்பு பப்ளிசிட்டியை உருவாக்க திட்டமிட்டிருக்கிறார்கள்.

ஷாருக்
இடைபே
ஆரம்ப
போட்
கொடு



# வில்லியாகிறார் பிரியாமணி

வில்லி வேடத்தில் நடிக்க முடிவு செய்துள்ளார் பிரியாமணி. தமிழ், தெலுங்கு, மலையாள படங்களில் ஹீரோயினாக நடித்துவந்தார் பிரியாமணி. இளம் ஹீரோயின்களின் வரவால் அவருக்கு வாய்ப்பு குறைந்தது. கடந்த ஆண்டு தமிழில் நடிக்கவந்த வாய்ப்புகளை அவர் ஏற்க மறுத்துவிட்டார். இதற்கிடையில் இந்தி மோகம் ஏற்பட்டது. அதற்கான வாய்ப்புக்காக காத்திருந்தார். ஷாருக்கான் நடித்த சென்னை எக்ஸ்பிரஸ் படத்தில் குத்தாட்டமாட மட்டுமே வாய்ப்பு வந்தது அதை ஏற்றார். படவாய்ப்புகள் டல்லடிக்க தொடங்கியதால் விரக்தி அடைந்தார். இதையடுத்து ஹீரோயினாக மட்டுமே நடிப்பது என்று பிடிவாதமாக இருந்த பிரியாமணி திடீரென்று பொலிசியை மாற்றிக்கொண்டிருக்கிறார்.

வில்லி வேடம் வந்தாலும் நடிக்கத் தயார் என்றுகூறி இருக்கிறார். இதுபற்றி அவர் கூறும்போது, நடிப்பில் பலவிதமான பரிமாணங்களை ஏற்று பரிசோதனை செய்துபார்க்க விரும்புகிறேன். பிரபல ஹீரோவுக்கு வில்லியாகவும் நடிக்கவிரும்புகிறேன் என்றார்.




# ஷங்கரின் உதவியாளர் இயக்கும் கப்பல்

இயக்குனர் ஷங்கரின் உதவியாளர்கள் திரையுலகில் தற்போது ஆதிக்கம் செலுத்திவருகின்றனர். அவரது பாசறையில் இருந்து மற்றொரு உதவியாளர் இயக்குனராக அறிமுகமாகிறார். அவரின் பெயர் கார்த்திக் ஜி.கிரிஷ். ஷங்கரிடம் 'சிவாஜி', 'எந்திரன்' ஆகிய படங்களில் உதவியாளராக பணிபுரிந்துள்ளார். இவர் இப்போது கப்பல் என்ற படத்தை இயக்குகிறார். இன்று இப்படத்தின் லோகோவை அறிமுகப்படுத்திய அவர், அதில் தெரியும் வண்ணக்கலவை படத்தில்வரும் எண்ணற்ற உணர்ச்சிகளை படம்பிடித்துக் காட்டுவதாக இருக்கும் என்றார்.

மேலும் படத்தின் தலைப்பான 'கப்பல்' கதையின் போக்கையும், கதையில் வரும் கதாபாத்திரங்களின் பயணத்தையும் எதிரொலிக்கும் என்றார்.

இப்படத்தை ஸ்ரூடியோஸ் என்னும் புதிய நிறுவனம் தயாரிக்கிறது. தினேஷ் கிருஷ்ணன் ஒளிப்பதிவு செய்கிறார். நடராஜன் சங்கரன் என்பவர் இசையமைக்கிறார். இப்படத்தின் நடிகர், நடிகைகள் உள்ளிட்ட விபரங்கள் விரைவில் வெளியிட இருக்கிறார்கள்.





அழகு குட்டி செல்லம்



## அஜீத் வேடத்தில் நடிக்க போட்டி

அஜீத் நடித்த வேடத்தில் நடிக்க பொலிவூட் ஹீரோக் களிடையே போட்டி எழுந்துள்ளது. தமிழ் மற்றும் தெலுங்கு படங்கள் இந்தியில் ரீமேக் செய்யப் படுகிறது. அந்தவரிசையில் அஜீத் நடிக்க விஷ்ணுவர்தன் இயக்கிய ஆரம்பம் இந்தியில் ரீமேக் செய்யப்படுகிறது.

இப்படத்தில் அஜீத் வேடத்தை சல்மான் கான் ஏற்பதாக பொலிவூட்டில் தகவல் வெளியானது. தற்போது அந்த வேடத்துக்கு போட்டி எழுந்துள்ளது. படம் ரிலீசானதுமே அதை ஷாருக்கான் துபாயில் இருந்தபடியே பார்த்தார். விஷ்ணுவர்தனை அவர் பாராட்டினார். அப்பட ரீமேக்கில் நடிக்கவும் விருப்பம் தெரிவித்தார். வேறு படத்தில் அவர் பிசியாக இருந்ததால் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடைபெறவில்லை. மற்றொரு பொலிவூட் ஹீரோ அக்ஷய் குமார், அஜீத் வேடத்தில் நான்தான் நடிப்பேன், என்று கோதாவில் இறங்கி இருக்கிறார்.

இவர்தான் ஆரம்பம் படத்தின் ரீமேக் உரிமை வாங்கிவைத்திருக்கிறாராம். ஷாருக்கான் இந்த போட்டியிலிருந்து விலகிவிட்ட நிலையில் சல்மான்கான், அக்ஷய்குமார் இடையேதான் ஆரம்பம் ரீமேக்கில் நடிக்க போட்டி நிலவுகிறது. அக்ஷய் குமாரிடமிருந்து ஆரம்பம் உரிமையை வாங்குமாறு பிரபல தயாரிப்பாளருக்கு சல்மான் உத்தரவு போட்டுள்ளாராம். பெரிய தொகை கொடுத்தால் உரிமையை அக்ஷய் விட்டுக் கொடுக்கலாம் எனக் கூறப்படுகிறது. இந்த போட்டியில் வேறு யார் வருவார்கள், ஆரம்பம் படத்தில் அஜீத்துடன் நடித்த ஆர்யா வேடத்தில் நடிக்கப்போவது யார் என்ற விவரமும் இதுவரை முடிவாகவில்லையாம்.

## பாடகி சின்மயின் விருப்பம்!

பின்னணி பாடகி சின்மயி, மற்ற பாடகிகளில் இருந்து சற்று வேறுபட்டவர். சமூக வலைத்தளங் களில் எல்லா விஷயங்களிலும் கருத்துச்சொல்லும் துணிச்சல் மிக்கவர். சின்மயிக்கும் நடிகர் ராகுல் ரவீந்திரனுக்கும் வருகிற மே 6ஆம் திகதி திருமணம் நடக்கிறது. ராகுல் ரவீந்தர் மாஸ்கோவின் காவேரி, விண்மீன்கள், வணக்கம் சென்னை படத்தில் நடித்துள்ளார். தெலுங்கில் பிசியான நடிகர். சின்மயியும், ராகுலும் பேஸ்புக்கில் அறிமுகமாகி நீண்டநாட்களாக காதலித்து வந்தனர். இப்போது திருமணம் செய்துகொள்ள இருக்கிறார்கள்.

தற்போது சின்மயி திருமண அழைப்பிதழ்களை நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் வழங்கி வருகிறார். அந்த அழைப்பிதழில் உறவினர்கள் நண்பர்களுக்கு ஒரு வேண்டுகோள் வைத்திருக்கிறார். "என் திருமணத்திற்கு உங்கள் அன்பான வாழ்த்துக்களும், ஆசியும் மட்டும்போதும். அன்பளிப்புக்களோ, பூச்செண்டுகளோ கொண்டு வரவேண்டாம். கட்டாயம் அன்பளிப்பு கொடுத்துதான் ஆகவேண்டும் என்று நினைக்கிறவர்கள். அந்த பரிசை பணமாகவோ, காசோலையாகவோ லடாக்கில் உள்ள மலை வாழ் மக்களின் தொண்டு நிறுவனத்துக்கு வழங்கவும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இதுகுறித்து சின்மயின் அம்மா கூறும்போது: இன்றைய விலைவாசி நிலவரப்படி ஒரு மலர்க்கொத்தின் குறைந்தபட்ச விலை 500 ரூபாய். திருமணம் முடிந்த அன்று மாலையே அது மூலையில் கிடக்கும். அதற்கு ஏன் இவ்வளவு செலவு செய்யவேண்டும். அது வீண் ஆடம்பரம்தானே. அந்த பணத்தை கஷ்டப்படும் ஏழைகளுக்கு தரலாமே என்றுதான் இந்த முடிவு. நல்லவர்களின் ஆசியும், வாழ்த்தும் மட்டுமே எங்களுக்குப்போதும் என்கிறார்.

## அஜீத்தின் புதிய படம்

வீரம் படத்திற்கு பிறகு, அஜீத் கௌதம் மேனன் இயக்கத்தில் அடுத்த படத்தில் நடிக்கிறார். இதனை ஸ்ரீசத்ய சாய் மூவீஸ் சார்பில் ஏ.எம்.ரத்தினம் தயாரிக்கிறார். பெரும் கடனில் சிக்கி இருக்கும் இயக்குனர் கௌதம் வாசுதேவனுக்கும், தயாரிப்பாளர் ஏ.எம்.ரத்தினத்திற்கும் உதவுவதற்காக அஜீத் நடித்துக் கொடுக்கும் படம். படம் பற்றிய அதிகாரபூர்வமான முதல் தகவல் அறிக்கை வெளியாகியுள்ளது.

அதன்படி, படத்திற்கு இன்னும் தலைப்பு வைக்கவில்லை. அஜீத்தின் கேரக்டர் பெயரே தலைப்பாக வரப்போகிறது. ஆயிரம் தோட்டாக்கள், துடிக்குது புஜம் போன்ற தலைப்புகளும் பரிசீலனையில் இருக்கிறது. 50 சதவிகித படப்பிடிப்பு முடிந்த பிறகு தான் படத்தின் டைட்டில் தீர்மானிக்கப்படும்.

பெண்களை கவரும் வகையிலான உணர்ச்சி பூர்வமான கதை. பொதுவாக கௌதம் மேனன் படங்களில் பெண்களை கவரும் விஷயங்கள் குறைவாக இருக்கும். ஆனால் இந்தப் படத்தில் பெண்களை கவரும் விஷயங்கள் அதிகம் இருக்கும். எமோஷ லான அக்ஷன் படமாக உருவா- கிறது. இசை அமைக் கிறார் ஹாரிஸ் ஜெயராஜ். இவரும் கௌதம்மேனனும் இணைந்து பணியாற்றிய அத்தனை படங்களின் பாடல்களும் ஹிட். சின்ன கருத்து வேறுபாட்டில் பிரிந்திருந்தவர்கள் இதில் மீண்டும் இணைந்திருக்கிறார்கள். படத்தில் நிறைய பன்ஞ் டயலொக்குகள் இருக்கிறது. அதனை கௌதம்மேனனே எழுதியிருக்கிறார். "உலகத்துலயே ரொம்ப அழகான ஒருத்தன்" என்ற பன்ஞ் டயலொக்கை மற்றவர்கள் அஜீத்தை பற்றி குறிப்பிடும்போது சொல்வார்கள். "நாலு நாள்ல ஊரே கிறிஸ்துமஸ் கொண்டாடப்போகுது. எனக்கு மட்டும் அன்னைக்கு தீபாவளிடா" இது அஜீத் வில்லனை பற்றி சொல்லும் பன்ஞ் டயலொக். இது மாதிரி இன்னும் நிறைய இருக்கு.



## கோடையில் சூடேற்றும் இலியானா!

பொலிவூட், கொலிவூட், டொலிவூட் என எல்லா வீட்டுகளிலும் இப்போது இலியானாதான் கவர்ச்சிவுட். வருண் தவா- னுடன் லிக் லாக் கிஸ்சில் தொடங்கி தனக்கு வருண் தவான் மாதிரி குணங்கள் கொண்ட மாப்பிள்ளைதான் வேண்டும் என்று பரபரப்பை கிளப்புவதுவரை இலியானாதான் இப்போது பரபரப்பான நடிகை. இப்போது அடுத்த அதிரடி. ஆண்களுக்கான ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு கோடை காலத்துக்கேற்ற உடை என்ற பகு தியில் இலியானா கொடுத்திருக்கும் கவர்ச்சிதான் இணையங்களில் பொங்கிவழிந்து கொண்டிருக்கிறது. இதற்காக இலியானா பெரும் தொகையை சம்பளமாக பெற்றிருக் கிறார். தமிழ்ப்பட மான நண்பனில் இடுப்பை மட்டும் வெட்டி வெட்டி ஆட்டியவர் இப்போது துட்டுக்காக உரிச்ச கோழியாக வும் தயாராகி விட்டார் என் கிறார் கள்.



பூஜை

# தேன் கிண்ணம்

## காத்திருப்பேன்

என் அன்பே...
உன்னை பார்த்தபோது
இமைக்க மறந்தேன்
நிலவு எனும் மனக்கடலில்
நித்தமும் உன் ஞாபகங்கள்
உன்னையே நினைத்து என் உள்ளம்
உணர்வற்று புரள்கிறது
நீ வரும் வரை காத்திருப்பேன்
கடற்கரை யோரத்தில் பெண்ணே...

தோ.சமீதரன், நயினாதீவு.



## விளக்குமாறு



விளக்குமாறு என்பது
விலக்கி வைத்திடும்
வேண்டாப் பொருளன்று
விளக்கம் பலவுரைக்கும்
விசயமுள்ளது அது.

தன்னையே அசுத்தமாக்கி
பிறர் மனையை
அழகு ஆக்கிடும்
அற்புத மனசு இதற்கு.

நித்தமும் செத்துக்
கொண்டிருந்தாலும்
உன் வீட்டினை
உயிர்பெற வைக்கிறதே.

ஒவ்வொரு விளக்குமாறும்
ஒதுங்கி இருப்பது
உங்களுக்கு பயந்தல்ல.
அடுத்தவருக்காய் உழைத்தும்
ஆணவம் கொள்ளாதிரு
அதை உணர்த்தவே.

- யோ.புரட்சி -

## தாயன்பு



இடுப்பு நோகுதம்மா என்று
இயல்பாய்ச் சொன்ன போதும்,
துடித்துப் பதறித்
தொடுக்கிறாள், தொடர்
கேள்விக் கணைகளை!

வலிகளைத் தரம் பிரித்துச்
சொல்லி,
வந்த வலி எந்த வலி என்கிறாள்;
பொய்யோ மெய்யோ வென்று
அறிய
பெருஞ்சீரகக் கஷாயம் தந்து,
பெரியதொரு ஆராய்ச்சி
செய்கிறாள்!
மெய்யென்றறிந்த பின்னே....
செய்வதறியாது
கைபிசைந்து நிற்கிறாள்!
விண்ணென்று தெறிக்கும்
வேதனையை,
விளக்கிச் சொல்ல இயலாது,
அம்மா, அம்மாவென
அரற்றும் என்னை
ஆதரவாய்த் தழுவிக்
கொள்கிறாள்!

கூந்தல் அலசவும்
அது நாள் வரை
குளியலறைக்குள்
அனுமதித்திராத அவளை,
கூடவே இருக்கச் சொல்லி,
கரம் பற்றிக்கொண்டபோது,
காணச் சகியாமல்
கண்ணீரை உகுக்கிறாள்!

அன்றொரு நாள்
அவளுற்றதும்
இதே துயரம்
என்றறிந்த போதும்,
இன்றெனக்குற்ற வலி
பொறுக்காது,

முந்தானையால்
முகம் பொத்திக்
குலுங்குகிறாள்!
சுகமாய்ப் பிரசவிக்க
வேண்டுமென்று,
குலதெய்வத்தை
வேண்டுகிறாள்;
போதா தென்று கூடவே
அழைக்கிறாள் அவள்
பார்த்தேயிராத பல
தெய்வங்களை!

அப்பாவின் செல்ல மென்று
இருந்தவள்
அம்மாவின்
பெண்ணானேன்
அழகிய என் தேவதை
அவதரித்த கணம்
முதலாய்!

என்னிலும் பன்மடங்கு
தவித்து,
வேதனையில் வியர்த்து
நின்ற
என் அம்மாவின்
ஆர்ப்பாட்டம் கண்டு
பரிகசிப்பது போல்
சின்ன இதழ் கோணி,
கன்னத்தில் குழிவிழ,
புன்னகைக்கும்
மென்பூவைக்
கையிலேந்தி,
என்ன பாடு
படுத்தி விட்டாயடி
என் பெண்ணை? என்று
செல்லமாய்க் கடிக்கிறாள்!

என்னவோ புரிந்தது போல்
அழுகைக்கும் ஆயத்தாய்
உதடு பிதுங்கும் மகளின்
துன்பம் காணப் பொறுக்காமல்
முகம் திருப்பிக் கொள்கிறேன்
நான்!

சோ.சரண்ஜா,
நயினாதீவு.

## ஒரு நல்லவனாய் இரு..!

ஒரு நன்மைக்காக
ஒரு நல்ல மனிதனை கொல்லாதே!
அந்த நல்லவனுக்காக
ஒரு நன்மையை விட்டுவிடு
அவனால் உனக்கு – பல
நன்மைகள் உண்டாகும்.

வார்த்தைகளைப் பேசுவதற்கு மட்டும்
வாய் வேண்டுமென்றால்
உண்ணவும் முடியாது
ஒரு உயிர் இறப்பது
உறுதி என்றால் – அது
மறுபிறப் பெடுக்கவுமியலாதா?

பூமியில் புழுவும் பிறக்கின்றது
புதுவித மனிதனும் பிறக்கிறான்
புழுவால் இறந்த மனிதனுண்டு
மனிதனால் இறந்த புழுவுண்டு
மரணம் வரு மென்றால்
மண்ணில் வண்ணாத்தி பூச்சி
வாழ்வை மறந்திருக்கும்.

நீ சிந்தித்துக் கொண்டிருக்கிறாய்
ஆனால் சித்திரமாக முடியாது
நீதிகளைக் கொன்றுவிட்டு
நிரபராதிகளைச் சிறையிலிட்டு
குற்றவாளிகளை விடுதலை
செய்யும் குறுகிய காலமிது.

காமத்தின் பிரதிபலிப்பு
காதல் என்றால்
கண்ணகிக்கு வழக்கு தொடரும்
கண்ணகிதான் வாழ்வு என்றால்
சீதையும் தீக்குளிக்கலாம்.




உண்மைக்கும்
பொய்மைக்கும் – உறுதிகள்
ஊமையாகிப் போவதால்
உயிர்கள் பல
ஊனமாகிப் போயின.

உன் காலில் செருப்பு
இல்லாத வேளைதான்
முள்ளின் வலி உனக்கு
தெரியும் – நல்ல
மனிதனை கெடுப்பதும்
வதைப்பதும் – உன்
தாய்க்கு நீயே!
நஞ்சூட்டுவது போன்றது!

பளையூர் அசோக்

## ஈழத்து எழுத்தாளர்கள்

### த.லெ.ஜவ்பர்கான்



இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் காத்தான்குடி- 04 இல் வசித்துவரும் ஜவ்பர்கான் ஓர் எழுத்தாளரும், கவிஞரும், சுதந்திர ஊடகவியலாளரும் ஆவார்.

காத்தான்குடியில் தம்பிலெப்பை, செய்னம்பு தம்பதியினரின் புதல்வராகப் பிறந்த இவர் காத்தான்குடி அந்- நாசார் மகா வித்தியாலயம், காத்தான்குடி தேசிய பாடசாலை, ஏறாவூர் தேசிய பாடசாலை, பொல்கொல்லை தும்பரை வளாகம் ஆகியவற்றின் பழைய மாணவராவார். இவரின் மனைவி பாத்திமா ஜவ்பர்கான். இத்தம்பதியினருக்கு அஹமட் ஜுறைஸ் ஜவ்பர்கான், அஹமட் ஜுமைல் ஜவ்பர்கான் ஆகிய இரண்டு புதல்வர்கள் உளர்.

இவரின் முதல் படைப்பு 1982இல் தினகரனில் ஒரு கவிதையாக இடம்பெற்றது. இதிலிருந்து இன்றுவரை இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட கவிதைகள், சிறுகதைகள், காவியங்கள், கட்டுரைகள் போன்றவற்றை எழுதியுள்ளார். இவரின் இத்தகைய ஆக்கங்கள் இலங்கையின் தேசிய பத்திரிகைகளிலும், இதழ்களிலும், இந்தியப் பத்திரிகைகளிலும், இதழ்களிலும் பிரசுரமாகியுள்ளன.

இவர் ஊடகத்துறை டிப்ளோமா பட்டதாரியாவார்.

#### வெளியிட்டுள்ள நூல்கள்

மணிமலர்கள் (மரபுக்கவிதை-1986), ரணங்கள் (புதுக்கவிதை-1993), மௌனதேசம் (மரபுக்கவிதை-2000, தேசிய சாகித்திய மண்டல விருது பெற்றது), சுனாமி காவியம் (காவியம்-2007)

#### பெற்ற விருதுகள்

1993- தேசிய இளைஞர் சேவைகள் மன்ற ஜனாதிபதி விருது,
2001 - தேசிய சாகித்திய மண்டல விருது,
2002 - உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டு விருது,
2002 - யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் திருமறை கலா மன்றம் பொன்னாடை போர்த்தி வழங்கிய விருது,
2002- பாவலர் பண்ணை விருது, 2003 - மனித உரிமை விருது, 2004 - தினச்சுடர் விருது, 2006 - பிரதேச சாஹித்ய விருது, 2007 - அனர்த்த முகாமைத்துவ அமைச்சு விசேட விருது, 2007 - மட்டக்களப்பு மாவட்ட செயலக விருது,
2007- மாருதம் விருது,
2008- ரிஸாலா சமூக வானொலி விருது உட்பட 22 விருதுகள்.

#### பெற்ற பட்டங்கள்

சாஹித்யசூரி, கவிச்சுடர், கவிமுரசு, கவித்தாரகை, இலக்கியதீபம், சாதனைச்சிகரம், ஊடகச்சுடர் உட்பட மேலும் சில பட்டங்கள்.

#### பெற்ற பரிசில்கள்

1990 - வீரகேசரி கவிதைப்போட்டியில் முதலாமிடம், 1990 - ஈரான் தூதரக கவிதைப்போட்டியில் தேசிய மட்டம் இரண்டாமிடம், 1991 - தேசிய அஸ்ஸஹீட் அஹமட்லெப்பை கவிதைப்போட்டியில் தேசிய மட்டம் மூன்றாமிடம், 1992 - தேசிய இளைஞர் சேவைகள் மன்ற தேசிய கவிதைப் போட்டியில் 2ம் இடம், 1993 - இந்து கலாசார அமைச்சு வீரகேசரியுடன் நடாத்திய தேசிய கவிதை போட்டியில் முதலிடம், 2001 - தேசிய சாகித்திய மண்டலம், 2003 - அரச சேவையாளருக்கான நிருமாண போட்டியில் தேசிய கவிதையில் சிறப்பு பரிசு, 2004 மாவட்ட செயலக கவிதைப் போட்டி முதலிடம், 2008 - 'அகிலம்' அறிவியற் சஞ்சிகை கவிதைப்போட்டி விசேட பரிசு, 2009 - பிரான்ஸ் திறந்த உலக சிறுகதைப்போட்டியில் ஆறாமிடம் உட்பட பல பரிசில்கள்.




ஜோசெப் கிருஷ்ணா

# எங்கிருந்தோ வந்தான்



"அவர் அணி உரிமையாளர்களைப் பரவசப்படுத்துகிறார். சக துடுப்பாட்ட வீரரை எதிர்முனையில் வெறும் பார்வையாளராக வைத்திருக்கிறார். பந்துகளை மட்டும் எல்லைக்கோட்டுக்கு வெளியே அனுப்பிக்கொண்டிருக்கிறார். ஆர்வமூட்டும் நடன மங்கையரை ஓய்வாக இருக்கவிடுகிறார் இல்லை. இவரை ரசிக்காத ஒரு பகுதியினர் என்றால் அது இவருக்குப் பந்து வீசுபவர்கள்தான்" என்று ஒரு ஊடகவியலாளர் இலக்கியச் சுவையுடன் எழுதிச்செல்கிறார். எழுதப்படுபவர் யாராக இருப்பார் என்று கிரிக்கெட் ரசிகர்களிடம் (IPL) கேட்கத் தேவையில்லை.

கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் அதிரடி வீரர் கிளென் மெக்ஸ்வெல் தான் அவர் என்று சுலபமாகக் கூறிவிடுவார்கள். கடந்த வருடம் மும்பாய் இந்தியன்ஸ் அணியால் வாங்கப்பட்டிருந்த இவர், இம்முறை அவர்களால் கழட்டிவிடப்பட்டிருந்தார்.

மேலும் கடந்த வருடம் மூன்றே மூன்று ஆட்டங்கள்தான் விளையாடி தெரிவுசெய்யப்பட்டிருந்தார். இப்போது 2014-ல் இவரைத் தவறவிட்டுவிட்டோமே என்று மும்பை இந்தியன்ஸ் மிக மனம் வருந்தி இருக்கக்கூடும்.

ஏனெனில் மெக்ஸ்வெல் ஒரு புதிய வர்ணத்தை ஐ.பி.எல் சுற்றுப் போட்டிக்குக் கொடுத்துவிட்டார். தனிமனிதனாக இன்று வெற்றிக்கு அணியைக் கொண்டுபோய் உள்ளார். அதுவும் சூறாவளியாக. இவரது றிவேஸ் சொட், மற்றும் சுவிட்ச் ஹிட்கள் அவ்வளவு சக்திவாய்ந்தவையாக இருக்கின்றன. மேலும் றோயல் செலெஞ்சர்ஸ் பெங்களூர் அணியில் கிறிஸ் கெய்லைக் காணவில்லை.


ஆனால், இன்னொருபுறத்தில் இருந்து கிளென் மெக்ஸ் வெல் புறப்பட்டிருக்கிறார். எதிரணியைத் துவம்சம் செய்த எத்தனையோ துடுப்பாட்ட வீரர்களைப் பார்த்திருப்போம். ஆனால் கிளென் மெக்ஸ் வெல் போன்ற வீரரை இதுவரை கண்டதில்லை. இன்னும் பல ஆட்டங்கள் மீதமிருக்கும் நிலையில் என்னென்ன அதிரடிகளைக் காட்டப் போகிறாரோ தெரியவில்லை. பல்வேறு அணிகளில் பேசப்பட்ட பல்வேறு நட்சத்திரங்கள் மெக்ஸ் வெல் சூரியனின் முன்னால் காணாமல் போய்விட்டன என்பது உண்மை.

**எதிர்: ராஜஸ்தான் றோயல்ஸ்**
89 ஓட்டங்கள் - 45 பந்து. 8X4 - 6X6

**எதிர் : சென்னை சுப்பர் கிங்ஸ்**
95 ஓட்டங்கள் - 43 பந்து. 15x4 - 2x6

**எதிர்: சண்றைசர்ஸ்**
95 ஓட்டங்கள் 43 பந்து. 5x4 - 9x6

# அதிர்ந்தது ஐ.பி.எல்



கிரிஸ் லின் எடுத்த பிடி.


# நிதானித்திருக்கலாம்



இயல்பாகக் கனியக்கூடிய பழமொன்றைத் தட்டிப் பழுக்க வைக்க முனைகிறார்கள் என்று சந்திமால் அணித் தலைவராக்கப்பட்ட போது அனைவரும் கருத்துத் தெரிவித்தார்கள்.

இப்பொழுது இயல்பாக நடைபெற்ற தோற்றத்தில் சந்திமால் அணித் தலைமையில் இருந்து விடுக்கப்பட்டுள்ளார். லசித் மலிங்க இருபதுக்கு இருபது அணித் தலைவர் ஆகியுள்ளார்.

இந்தத் தலைமை லசித்துக்கு யாரையும் நோகடிக்காமல் கிடைத்த வரம் - மறுபுறம் ஒருநாள் மற்றும் டெஸ்ட் உதவித் தலைவர் பதவிகளையும் சந்திமால் இழந்திருக்கிறார். இந்த மூன்று இடங்களுக்கும் பொருத்தமாகவே லாஹிரு திரிமான்ன நியமிக்கப் பட்டுள்ளார்.



சந்திமால் தானாக அணித் தலைமையை கேட்கவும் இல்லை. தானாக விட்டு விட்டுப் போகவும் இல்லை என்று கருதப்படுகின்றது. ஆனால் குருவி தலையில் பனங்காயாகப் போனமை அவரது துரதிர்ஷ்டம்தான்.

இதன்காரணமாக தன் ஆட்டத் திறனைக் கணிசமாக இழந்து விட்டார்.

குறிப்பாக ஒருநாள் போட்டிகள் பொறுத்து 30 போட்டிகளில் இரண்டு அரைச் சதம் மட்டுமே பெற்றிருந்தார். இருபதுக்கு இருபது போட்டிகளில் இறுதி 13 போட்டிகளில் அதிகூடிய எண்ணிக்கையாக 22 மட்டுமே பெற்றிருந்தார்.

இத்தகைய காரணங்கள் எல்லாம் இவரது நீக்கத்துக்குக் காரணமாக இருக்கலாம். ஆனால் இவர் மிகவும் இளையவர். நிறைந்த திறமை கொண்டவர். இவரது தேசிய அணி இடத்துக்கு எந்தப் பங்கமும் இல்லை.

எதிர்பார்ப்பது போலவே எதிர்வரும் காலங்களில் நிச்சயமாக முத்திரை பதிப்பார் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

# கண்ணீர்க் காணிக்கை




கடந்த வருடம் பொஸ்டன் மரதன் போட்டிகள் முடிவடையும் தறுவாயில் இரண்டு குண்டுகள் வெடித்தன. மூன்று போர் உயிரிழந்தனர். இருநூற்றைம்பது பேருக்கு மேல் காயமடைந்தனர்.

இம்முறை பொஸ்ரன் மரதன் நடைபெற்ற வேளையில் சகலரின் மனதிலும் அந்த துன்ப உணர்வுகள் இழை-யோடிக் கொண்டிருந்தன. அதனால்தான் ஆண்கள் பிரிவில் முதலிடம் வென்ற மெப் கெப்லிசிகாய் தன் வெற்றியை அந்த வீரரின் உயிரிழப்புக்காக அர்ப்பணம் செய்தார்.

இவர் எரித்திரியாவில் பிறந்து அமெரிக்கப் பிரஜையாகியவர். 1983இன் பின்னர் பொஸ்டன் கிண்ணம்வெல்லும் முதல் அமெரிக்கர் இவர்தான்.

இன்னொருபுறம் 1991 இக்குப் பின்னர் கென்யரோ அல்லது எத்தியோப்பியாரோ முதல் இடம்பெறமுடியாமல் போனதும் இம்முறைதான். கெப்லி சிகாய் 2009 நியூயோர்க் மரதன் வென்றவர்.

மறுபுறம் மகளிர் மரதன் பிரிவில் கென்ய நாட்டின் றீட்டா ஜெப்டோ முதலிடம் பெற்றுள்ளார். கடந்த வருடமும் இவரே பொஸ்ரன் கிண்ணம் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. முன்னதாக 2006 இலும் இவரே பொஸ்டன் மரதன் வென்றவர்.

மேலும் இம்முறை இவர் எடுத்துக்கொண்டநேரம் 2 மணி 18 நிமிடம் 57 செக்கன்களாகும். இது பொஸ்டன் சாதனை நேரமாகப் பதிவாகிறது. சில தரவுகளின்படி கென்யாவில் கத்தரின் நெடெர்பா நான்கு முறை பொஸ்டன் மரதன் வென்றிருக்கிறார். அவரைத்தவிர்த்து ஆறு பெண்கள் மூன்று முறை பொஸ்ரன் மரதன் வென்றிருக்கிறார்கள். அவர்களுடன் றீட்டாவும் ஒருவர் இவர் முப்பத்து மூன்று வயதானவர்.

இந்த மரதன் போட்டியில் கலந்து கொண்ட போட்டியாளர்கள் 95 நாடுகளைச் சேர்ந்தவர்கள். மொத்தம் 35000 பேர் இதில் பங்கு பற்றினார்கள்.





பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

லேடிஸ் ஸ்பெஷல்

# கல்யாணத்தை தள்ளிப்போடாதீர்கள்



"சாதித்த பிறகே திருமணம்" என்பது இப்போதைய இளைஞர்களின் தாரக மந்திரமாகி வருகிறது. இப்படி கூறியே பலர் முப்பது, முப்பத்தைந்து வயது வரை திருமணம்செய்து கொள்ளாமல் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். படிப்பு, நல்ல வேலை, பதவி உயர்வு, நல்ல சம்பளம் என்பதையே வாழ்வின் குறிக்கோளாக வைத்து ஓடிக் கொண்டிருக்கிறோம்.

இலக்கை அடைந்து திரும்பிப் பார்க்கையில் நம் கையில் அனைத்தும் இருக்கும், இளமையைத் தவிர! 15 வயதிற்குள்ளாகவே, இளமைப் பருவத்தில் அடியெடுத்து வைத்துவிடுகிறோம். ஆனால் 30, 35 வயதுவரை வாழ்க்கை வசதிக்காக உடல்தேவையை பூர்த்திசெய்யாமல் இயற்கைக்கு எதிராக வாழ முற்படுகிறோம்.

நம் நாட்டில் 'செக்ஸ்' என்பது கெட்ட வார்த்தையாக பார்க்கப்படுகிறது. உடலுறவு பற்றிப்பேசுவது அசிங்கம். திருமணத்திற்கு முன்பு ஆணும், பெண்ணும் இணைவது கலாசார சீர்கேடு என சுழற்றும் சமூகச்சாட்டைக்கு பயந்து நமது உடலியக்கு தேவைகளை உள்ளுக்குள் புதைத்துக்கொண்டு வாழ்கிறோம்.

தாமதமான திருமணம் உடல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும்கூட பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது. தாமதமாக திருமணம் செய்துகொள்ளும் பெண்களுக்கு குழந்தை பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகிறது.

கருத்தரிக்க தாமதம். அப்படியே கருத்தரித்தாலும் சுகப்பிரசவம் கேள்விக்குறி என்ற நிலை. காலதாமதமாக திருமணமானவர்களுக்கே அதிகமாக சிசேரியன் பிரசவம் நடக்கிறது. பாட்டி காலத்திலும் அதற்கு முன்பும் வாழ்ந்தவர்கள் அறுவைச் சிகிச்சையை அறிந்ததில்லை. அவர்கள் ஆரோக்கியமான வயதில் திருமணம் செய்து கர்ப்பமடைந்தனர்.

எளிதாக குழந்தை பெற்றுக் கொண்டனர். அதிகமாக சுகப் பிரசவங்களே நடந்தன. இன்று, இயந்திரங்கள் வேலைகளைச் செய்வதால் இளைய தலை முறையினர் உடலுழைப்பை உணர வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது. படிப்பு, வேலை, சொந்தக்காலில் நின்ற பிறகே இல்லறம் என்றெல்லாம் கூறி திருமணத்தை தாமதமாகச் செய்து கொள்கிறார்கள்.

வயது முதிர்வடையும்போது உடல்வளைந்து கொடுக்கும் தன்மையை இழக்கிறது. இடுப்பெலும்பு வளைந்து கொடுக்கும் வயதைத்தாண்டி திருமணம் செய்து கொள்ளும்போது அநேக பெண்களுக்கு 'சிசேரியன்' அவசியமாகி விடுகிறது.

ஆண்கள், தாமதமாக திருமணம் செய்யவேண்டிய நிர்ப்பந்தத்தால் தவறான பழக்கம் உடையவர்கள் ஆகிறார்கள். அதனால் திருமண சமயத்தில் வீரியம் குறைந்து தந்தையாகும் தகுதியை பலர் இழக்கின்றனர். இயற்கை இச்சைகளை தீர்ப்பதற்காக செக்ஸ் புத்தகம், பலான படங்கள், இணையத்தள தேடல் என மாற்று வழிகளில் இன்றைய இளைஞர்கள் பயணப்படும் பின்னணியில், தள்ளிப்போடப்படும் அவர்கள் திருமணம் இருக்கிறது.

இதனால் தற்காலிக உணர்வுத் தேவைகளை முறைகேடாக அணுகப்போய், அதனால் எயிட்ஸ் அதிகரிப்பு, கள்ளக்காதல் போன்ற கலாசார சீரழிவும் தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. அதற்காக இன்றைய காலத்தில் மீண்டும் 15 வயதிற்குள் பால்ய விவாகம் செய்வது சாத்தியமில்லை.

ஆனால், இளம் பருவத்தில் திருமணம் செய்துவைக்கும் வழக்கத்திற்கு மாற முயற்சிக்கலாம். படிப்புக்கேற்ற வேலை கிடைத்ததும் அதற்கு மேலும் தள்ளிப்போடாமல் தாமதமின்றி திருமணம்செய்து கொள்வது அவசியம். இளம்வயதில் திருமணம் செய்துகொள்ளும் தம்பதிகளின் பெற்றோர் நல்ல ஆரோக்கியமாக இருப்பார்கள்.

அதனால் பிறக்கப்போகும் தங்கள் பேரன், பேத்திகளை அவர்கள் தங்கள் பொறுப்பில் பார்த்துக்கொள்வார்கள். இதனால் தலையாய பிரச்சினையான குழந்தை வளர்ப்பதுகூட தம்பதிகளுக்கு சாதாரண விஷயமாகி விடுகிறது.

இந்த யதார்த்தம் புரிந்தால் இளம்வயதில் இல்லறமே நல்லறம் என்பது ஆணியடித்த மாதிரி மனதில் பதிவாகிவிடும்.

# மன அழுத்தத்தை போக்கும் தியானம்



தியானம் என்றால் அமைதி என்று பொருள். தியானம் அமைதியை மீட்டுத் தரும் அருமருந்தாக உள்ளது. தினமும் 30 நிமிடங்கள் தியான நிலையில் மனதை வைத்திருந்தால் கிடைக்கும் பலன்கள் எண்ணிலடங்காதவை. இத்தகைய தியானத்தை முறையாகப் பயிலவும், பின்பற்றவும் செய்தால் வாழ்க்கை ஒரு அமைதியான பயணமாகவே இருக்கும்.

அந்த தியானம் செய்வதன் காரணமாக நமக்கு கிடைக்கும் உடல் மற்றும் உள்ளம் சார்ந்த பலன்களைப் பற்றி பார்க்கலாம். தியானத்தால் மனதை நிறைவாக வைத்திருப்பது குறைவான மன அழுத்த உணர்வைத் தருவதோடு மட்டுமல்லாமல், மன அழுத்தத்தை தூண்டும் கார்டிசோல் ஹோர்மோன் குறைவாக சுரப்பதுடனும் தொடர்புகொண்டுள்ளது.

தியானத்தால் நெறிமுறைகளுடன் இருக்கும்போது, நம்மால் ஒரு விஷயத்தை நேரடியாகப் பார்ப்பதைவிடவும், ஆழமாகப் பார்த்து அலசமுடியும். சாதாரணமாக இருக்கும் 'பிளைன்ட் ஸ்பொட்ஸ்' எனப்படும் மனதின் இருண்ட பகுதிகளை வெற்றி கொள்ள நெறிமுறைகள் உதவும் என்று ஜர்னல் ஓ∴ப் சைக்காலஜிக்கல் சயின்ஸின் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இதன்மூலம் நிதர்சனத்தைத் தாண்டி, நாம் செய்யும் தவறுகளை அவை வெளிப்படுத்தவும் அல்லது குறைக்கவும் செய்கின்றன. தியான நெறிமுறைகளுக்கான பயிற்சியின்மூலம் நாட்பட்ட மூட்டுவலியால் பாதிக்கப்பட்டவர்களின் வலிகுறையாவிட்டாலும், அவர்களுக்குவரும் மன அழுத்தம் மற்றும் களைப்பை குறைக்கமுடிகிறது என்று சொல்கிறது.

தியான வழிமுறையில், உடல் - மனம் ஆகியவற்றிற்கு ஒருங்கிணைந்த பயிற்சியளிப்பதன் மூலம் மனரீதியான நோய்கள் வராமல் மூளையைப் பாதுகாக்க முடியும். தியானப் பயிற்சிகள் செய்வதன்மூலம் மூளைக்கு அக்ஸோனல் டென்சிட்டி (axonal density) என்ற சிக்னல் தொடர்புகள் செல்வது அதிகரிக்கிறது.

அதேபோல சின்குலேட் மூளைப் பகுதியின் முன்னால் உள்ள ஒக்ஸன்களைச் சுற்றிலும் மையிலின் என்ற பாதுகாக்கும் தசையின் அளவும் அதிகரிக்கிறது. மனம் நிறைந்த தியானமானது, உடலின் விழிப்புணர்வு, சுய-விழிப்புணர்வு, உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் கவனத்தைக் கட்டுப்படுத்துதல் போன்ற நான்கு மூலக்கூறுகளை தூண்டி நமக்கு உதவுகிறது.

மனம் நிறைந்த தியானத்தை எப்படிச் செய்யவேண்டும் என்று பள்ளியின் திட்டங்கள் வழியாக டீன்-ஏஜ் சிறுவர்-சிறுமியருக்கு சொல்லிக் கொடுப்பதன்மூலம், அவர்களுடைய மன அழுத்தம், பயம் மற்றும் அச்சத்தைத் தவிர்க்கமுடியும்.

## ரவாவிலிக்காய்



### தேவையான பொருட்கள்

ரவை - 1 1/2 கப், தேங்காய்த் துருவல் - 1/2 கப், சீனி - ஒரு சிட்டிகை, சமையல் சோடா - 1/2 கரண்டி, பொடித்த முந்திரி, திராட்சை, பாதாம் - தலா ஒரு மேசைக்கரண்டி, உப்பு - ஒரு சிட்டிகை, தேங்காய்ப் பால் - 1 கப் (கலக்க), கரகரப்பாக உடைத்த மிளகு, சீரகம் - தலா 1 மேசைக்கரண்டி, வெண்ணெய் - 1/2 கப், எண்ணெய் - 1/4 கப், பேக்கிங் பவுடர் - 1/2 கரண்டி

### டாட் செய்வதற்கு...

அதாவது, கலவையை செட் செய்தபின் துளித் துளியாக வைப்பதற்கு - வெண்ணெய் மற்றும் பொடியாக நறுக்கிய நட்ஸ் தேவையான அளவு.

### செய்முறை:

ரவையை வறுத்துக் கொள்ளவும். ஆறவிட்டு ரவையுடன் உப்பு, தேங்காய்த் துருவல், பொடித்த நட்ஸ், மிளகு, சீரகம், சீனி, பேக்கிங் பவுடர், சமையல் சோடா எல்லாவற்றையும் கலக்கவும். இத்துடன் வெண்ணெய், எண்ணெய், தேங்காய்ப் பால் சேர்த்து கலந்து ஒரு கேக் டிரேயில் ஊற்றவும். (இட்லி மா பதத்துக்கு இருக்கவேண்டும்).

அதை அப்படியே 10 நிமிடங்களுக்கு வைத்திருக்கவும். பிறகு, அதற்கு மேல் டாட் செய்யவும். (நடுவில் வெண்ணெய் வைத்து பொடித்த நட்ஸ் தூவவும்). மைக்ரோவேவ் அவனில் பேக் செய்யவும். அல்லது குக்கரில் வெயிட் வைக்காமல், குக்கரின் அடியில் மணல் போட்டுவைக்கவும். கேக் டிரேயை எடுக்கும்போது கவனமாக மணல் ஒட்டாமல் எடுக்கவும்.


## 250/= வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

பரிசுப் போட்டி இல :-417

கேள்வி: டீன் - ஏஜ் பருவத்தினர் தியானம் செய்வதால் எவற்றைத் தவிர்த்துக் கொள்ளமுடியும்?

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 12. 05. 2014

விடையைக் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பிவைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 417
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 415 இற்கான விடை :- பண்டிற், விஜயலக்சுமி.
பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :- ஜெ.விஜயலக்சுமி, பண்டாரிக்குளம், வவுனியா.

417

பெயர் : ..................................
முகவரி : ..................................
..................................
தே.அ. அட்டை இல : ..................................
விடை : ..................................
..................................
கையொப்பம் : ..................................


# மருத்துவக் குறிப்புகள்



✢ கர்ப்பிணிகள், நாவல்பழம் சாப்பிட்டால் வயிற்றில் உள்ள குழந்தை கறுப்பாகப் பிறக்கும் என்பதும், குங்குமப்பூ சாப்பிட்டால் சிவப்பாகப் பிறக்கும் என்பதும் மூடநம்பிக்கையே. தோலின் நிறத்தை நிர்ணயிப்பவை 'மெலனின்' எனப்படும் நிறமிகளே!

✢ கர்ப்பிணிகள், இரும்புச் சத்து மாத்திரை சாப்பிட்டால், உடல் லேசாக கறுத்து, பிறகு பழைய நிறத்துக்கு வந்துவிடும். இதை வைத்தே, குழந்தையும் கறுப்பாக பிறக்கும் என்று சிலர் பயப்படுவார்கள். அது தேவையற்றது. கர்ப்பிணி பெண்கள், காலையில் சீக்கிரம் சாப்பிடவேண்டும். இதனால் இரத்தத்தில் உள்ள சீனியின் அளவு குறையாமலிருக்கும். அடிக்கடி மயக்கமும் வராது.

✢ வயிற்றில் குழந்தை வளரவளர, குடல் ஒரு பக்கம் தள்ளும். அப்போது அதிகமாக சாப்பிடமுடியாது. சீக்கிரமும் பசிக்காது. அந்த நேரங்களில் ஜூஸ், முளைகட்டிய தானியங்கள் போன்றவற்றை, பல வேளைகளாகப் பிரித்துச் சாப்பிடவேண்டும்.

✢ கர்ப்ப காலத்தில் சிலருக்கு கால்கள் வீங்குவது வழக்கமான ஒன்று. அதிகமாக தண்ணீர் குடிப்பதால்தான் இப்படி என்று சொல்வது தவறு.

✢ கர்ப்ப காலத்தில் மலச்சிக்கல் பிரச்சினை வரும். அதைத் தவிர்க்க அதிகமாக தண்ணீர் குடிக்கவேண்டும். பிரசவம் முடிந்த சில நாட்களில், வயிறு சுருங்கவேண்டும் என்பதற்காக பெரிய துணியை வயிற்றில் கட்டிவிடுவார்கள். அது தவறு. இதனால் கருப்பை கீழிறங்கிட வாய்ப்புண்டு. இருமல் அல்லது தும்மலின் போது சிலருக்கு சிறுநீர் வெளியாவதற்கு காரணம் இதுதான். பிரசவம் முடிந்து ஆறு வாரம் கழித்து, அதற்கான பெல்ட்டை அணியலாம்.

✢ தைரோய்ட், சுகர் போன்ற பிரச்சினைகள் உள்ள பெண்கள், கர்ப்ப காலத்தில் அதற்கான மருந்துகளைக் கட்டாயம் எடுத்துக்கொள்ள வேண்டும். அது, குழந்தையைப் பாதிக்காது.

இருப்பை ஏற்றுக்கொண்டு பயங்கரவாத செயற்பாடுகள் மற்றும் வன்முறைகளை விட்டு, அதன் விருப்பமாகிய இஸ்ரேலின் அழிவு என்ற கொள்கையை கைவிட்டது.

1995இல் ஒஸ்லோ 2 என்ற உடன்படிக்கை கைச்சாத்திட்டப்பட்டது. இதன்படி மேற்குக் கரையில் அ, ஆ, இ என்ற பிரிவுகள் காணப் பட்டன. பிரிவு அ பலஸ்தீனத்தின் முழு சிவில் கட்டுப்பாட்டில் இருக்கும், அதன் உள்ளக பாதுகாப்பிற்கு பலஸ்தீனியர்களே பொறுப்பானவர்கள்.

## 2000 - 2009

இரண்டாவது இன்டிபாடா பலஸ்தீனத் துடனான அரசியல் உறவு பற்றி இஸ்ரேலை மீளயோசிக்க வைத்தது. தொடர்ச்சியான தற்கொலைத் தாக்குதல்களைத் தொடர்ந்து, இஸ்ரேல் இராணுவம் ஆறு நாள் போரின்பின் பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டது.

இஸ்ரேல் மேற்குக்கரையின் பல பகுதிகளை மீளவும் கைப்பற்றிக்கொண்டது. இருந்த போதிலும், 2008இல் மெதுவாக அதிகாரத்தினை பாலத்தீன அதிகார சபைக்குக் கையளித்தது.

இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் சரோன் 2003இல் காஸாவிலிருந்து பின்வாங்குதல் என்ற முடிவை ஒருதலைப்பட்சமாக எடுத்தார். இது 2005இல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

ஜூன் 2006இல் ஹமாஸ் இஸ்ரேலிய படைவீரர் கிலாத் ஷாலித்தை கடத்தியது அச்சந்தர்ப்பத்தில் இரு படைவீரர்கள் கொல்லப்பட்டனர். கடத்தப் பட்ட படைவீரைத் தேடி இஸ்ரவேல் படையினர் இராணுவ நடவடிக்கையினை மேற்கொண்டனர். 2011இல் அப்படைவீரர் 1027 பலஸ்தீன கைதிகள் பறிமாற்றத்தின்போது விடுதலை செய்யப்பட்டார்.

ஜூலை 2006இல் ஹிஸ்புல்லா லெபனானைக் கடந்து தாக்கியதில் 8 இஸ்ரவேலிய படையினர் கொல்லப்பட்டும் இருவர் கடத்தப்பட்டனர். இது 2006 லெபனான் போருக்கு வித்திட்டு, லெபனானில் பெரும் அழிவு ஏற்பட்டது. ஐ.நா. அனுசரனை யுடன் ஆகஸ்ட் 2006இல் போர் நிறுத்தம் ஏற்பட்டது. இதில் பெருமளவு லெபனானிய பொதுமக்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். லெபனானின் உட்கட்டமைப்பு பாரதூரமாக சேதத்திற்குள்ளானது. ஏறக்குறைய ஒரு மில்லியன் லெபனானிய பொதுமக்களும் 300,000 – 500,000 இஸ்ரேலிய பொதுமக்களும் இடம் பெயர்ந்தனர்.

காஸா உள்ளூர் போரின்பின், ஃபதஹ் விடமிருந்து ஹமாஸ் காசாவை கைப்பற்றியது. இதனால் எல்லையில் இஸ்ரேல் கட்டுப்பாடுகளை விதித்தது. 2007இல் இருந்து இஸ்ரேலும் எகிப்தும் அங்கு பொருளாதாரத் தடையினை ஏற்படுத்தின.

2007இல் இஸ்ரேல் இராணுவ நடவடிக்கை மூலம் வடகொரியாவின் உதவியுடன் சிரியாவில் கட்டப்பட்டுக் கொண்டிருந்த அணு ஆலையை தாக்கியழித்தது. 2003 இலும் சிரியாவிலிருந்த ஆயுதக்குழுவின் தளத்தை தாக்கியமை குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேல் -ஹமாசுக்கிடையிலான உடன்படிக்கை 2008 டிசம்பரில் முடிவுற்றது. இதற்கு இருதரப் பினருமே காரணம். இதைத் தொடர்ந்து இஸ்ரேல் கடத்தல் சுரங்கங்கள்மீது தாக்குதல் நடத்தியது. பதிலாக ஹமாஸ் 60க்கு மேற்பட்ட ஏவுகணை களால் இஸ்ரேலிய நகரங்களைத் தாக்கியது. விளைவு இஸ்ரேல் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள வைத்தது. மனித உரிமை அமைப்புக்கள் இருதரப்பும் போர்க் குற்றம் புரிந்ததாக குற்றஞ்சாட்டின.

இஸ்ரேல் படையினருக்கும் காசாவுக்கு உதவிசெய்ய முனைந்த ஆர்வலர்களுக்கும் இடையே கலவரம் ஏற்பட்டு, 9 ஆர்வலர்கள் கொல்லப்பட்டும் 7 படைவீரர்கள் காயம் அடைந்தனர்.

பலஸ்தீன் பிரச்சினை சமகாலத்தின் மாபெரும் தார்மீகப் பிரச்சினை என்றார் நெல்சன் மண்டேலா. பல தசாப்தங்கள் உலகில் மாற்றமடையாமல் இருக்கும் ஒரே தலைப்பு "மத்திய கிழக்கின் தற்போதைய நெருக்கடி" என்றார் நோம் சொம்ஸ்கி. பலஸ்தீன் மக்களுக்கு இழைக்கப் பட்டிருக்கும் அநீதியை அடையாளப்படுத்த இதனைத் தவிர வேறு ஒரு வார்த்தைகள் அவசியமில்லை.

2009இல் காஸா மீதான இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு யுத்தத்தில் சுமார் 15 இலட்சம் மக்கள் அடிப்படை வசதிகள் முற்றாக மறுக்கப்பட்டு ஒரு திறந்தவெளி சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்கள். உணவு, மருந்து, தண்ணீர், மின்சாரம், கல்வி போன்ற அடிப்படை தேவைகள் அத்தனையும் மறுக்கப்பட்டு அந்த மக்கள் கடந்த பல ஆண்டுகளாக முட்க்கி வைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

2006ஆம் ஆண்டு பலஸ்தீன் அதிகார சபைக் கான தேர்தலில் ஹமாஸ் இயக்கம் போட்டி யிட்டு வெற்றியீட்டியதைத் தொடர்ந்து மேற்குலகம் கடுமையான தடைகளையும் நெருக்குதல்களையும் கொடுத்து ஹமாஸ் அரசை செயலிழக்கச் செய்தது. ஹமாஸ் பாராளுமன்ற அமைச்சர்கள், அங்கத்தவர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள். மக்களின் பிரதி நிதிகளாக தெரிவுசெய்யப்பட்டவர்கள் இன்றும் சிறையில் வாடுகிறார்கள். ஜனநாயகத்திற்காக குரல் கொடுப்பவர்கள், மனித உரிமைக்காக குரல் கொடுப்பவர்கள் யாரும் இதற்காக ஒரு வார்த்தையும் பேசாமல் மௌனிகளாக இருக்கின்றார்கள். அடிப்படை வசதிகளும், அத்தியாவசியப் பொருட்களும் முற்றாக நிராகரிக்கப்பட்ட நிலையில் பலஸ்தீன் உலகிலிருந்து ஒதுக்கப்பட்டிருக்கிறது. தனிமைப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஹமாஸ் மீதான மேற்குலகின் இந்த நெருக்குதல்களுக்கு பின்னணியில் மத்திய கிழக்கின் அரசியல் மறைந்திருக்கின்றது. பலஸ்தீனில் இஸ்லாமிய ஆட்சியமைப்பைக் கொண்ட ஜனநாயக ரீதியாக ஏற்படும் பாராளுமன்ற அரசியல் கட்டமைப்பு தமது மன்னராட்சியின் மகுடங்களுக்கு அச்சுறுத்தலாக அமையும் என்பதை அரபு நாடுகள் நன்கு உணர்ந்தே இருக்கின்றன. பலஸ்தீனில் உருவாகும் பாராளுமன்ற அரசியலின் கவர்ச்சி தனது நாட்டு மக்களின் சிந்தனையில் மாற்றத்தை உருவாக்கும் என்ற அச்சம் அரபு நாடுகளுக்கு இருக்கவே செய்கின்றது.

பலஸ்தீனில் உருவாகும் இஸ்லாமிய அடிப்படையிலான பாராளுமன்ற கட்டமைப்பு அமெரிக்க இஸ்ரேல் நாடுகளுக்கு எப்படி அச்சுறுத்தலோ அதேபோன்று அந்த பிராந்தியத்திலுள்ள அரபு நாடுகளுக்கும் அச்சுறுத்தலாகும். இந்த ஜனநாயக அரசியல் கட்டமைப்பை விரும்பாத அரபு நாடுகள் தமது மன்னர் ஆட்சி கட்டமைப்பைக் காத்துக் கொள்வதற்காக வேண்டி, பலஸ்தீன்மீது அமெரிக்கா, இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகள் திணித்த பொருளாதார தடைகளை மௌனமாக இருந்தது அங்கீகரித்து வருகின்றன.

யூதர்களின் சனத்தொகை வெறுமனே ஒன்றரைக் கோடிதான். உலக முஸ்லிம் சனத்தொகையோடு ஒப்பிடும்போது யூதர்களின் சனத்தொகை நூற்றுக்கு ஒரு வீதமே இந்த ஒரு வீத சமூகம் முழு முஸ்லிம் உம்மத்தையும் ஆட்டிப்படைக்கின்ற அவலமான நிலைக்கு உலக அரசியல் ஆதிக்கம் மாற்றியிருக்கிறது.

பலஸ்தீன்மீது திணிக்கப்பட்டுள்ள தடைகள் அப்பட்டமான மனித உரிமை மீறலாகும். தட்டிக்கேட்க தலைமைத்துவம் ஒன்று இல்லாமல் அந்த மக்கள் இன்று அனாதைகள் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள். ஏகாதிபத்திய காலனித்துவ சக்திகளின் இந்த கொடூரமான அடக்குமுறையை ஊடகங்கள் இன்றுவரை மூடிமறைத்தும் வருகின்றன. ஸியோனிஸவாதி களால் நசுக்கப்பட்டிருக்கும் அந்த தேசத்தின் குரலை செவியேற்காத செவிடர்களாய் அரபு நாடுகள் உட்பட முழு முஸ்லிம் சமுதாயமும் மாறியிருக்கிறது. ஆழ்ந்த உறக்கத்தில் மூழ்கியிருக்கிறது. 2005இல் இஸ்ரேலும் பலஸ்தீனும் செய்துகொண்ட ஒப்பந்தம் ஒன்றின்படி தாக்குதல்களை முடிவுக்குக் கொண்டுவருவதும், எல்லைகள் திறக்கப்பட்டு காஸா, மேற்குக் கரைக்கு இடையில் போக்குவரத்திற்காக பாதைகளை திறந்து பாதகாப்பை உத்தரவாதப்படுத்துவதும் முக்கியமாக கொள்ளப்பட்டிருந்தது.

2006ல் ஹமாஸ் ஆட்சியைக் கைப்பற்றி யதும், அல் பத்தாஹ் தோல்வியடைந்ததும் அரபு நாடுகளுக்கும், அமெரிக்காவிற்கும், இஸ்ரேலுக்கும் பேரதிர்ச்சியைக் கொடுத்தது. உடனடியாக இஸ்ரேல் ஒப்பந்தத்தை ரத்துச் செய்தது. தேர்தலுக்கு முன்னேயே ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு ஹமாஸ் தனது அமைதிவழியை உலகிற்கு ஒப்புவித்திருந்தது.

காஸாமீது இஸ்ரேல் விதித்திருக்கும் தடையால் பதினைந்து இலட்சம் பலஸ்தீனர்கள் அல்லற்பட்டுக்கொண்டிருக் கின்றார்கள். காஸா எகிப்திற்கான பாதை இஸ்ரேல், அமெரிக்கா அழுத்தத்தின் காரணமாக மூடப்பட்டிருக்கிறது. சுரங்கப் பாதைகள் ஊடாக எகிப்திற்குள் நுழையும் பல்ஸ்தீனர்கள் இந்தப் பொருளாதார தடைக்கு வேறுவிதமாக முகங்கொடுத்து வருவதை உணர்ந்த இஸ்ரேல் அமெரிக்காவின் ஆலோசனையின்பேரில் காஸா, எகிப்து எல்லையில் இரும்புச் சுவர் ஒன்றை அமைக்கும் பணியில் இறங்கியிருக்கிறது. இந்த அட்டூழிய செயற்பாட்டிற்கு இஸ்ரேலும் எகிப்தும் கைகோர்த்துக்கொண்டு களமிறங்கியிருந்தன. காஸாவின் வான்வழி மற்றும் கடல்வழி போக்குவரத்துகள் மற்றாக இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. மனித உரிமைகளை மீறும் எதிரிகளின் இந்த முற்றுகை உலக வரலாற்றில் இடம்பெற்ற இடம்பெற்றுக் கொண்டிருக்கும் மோசமான நிகழ்வுகளில் முன்னணியில் நிற்கிறது.

இந்த அடக்குமுறைக்குள் அவதியுறும் சகோதர சமூகத்தையும், முஸ்லிம்களின் முதல் கிப்லாவையும் மீட்டெடுக்க முடியாதளவு அரபுலகின் பிராந்திய அரசிய லால் இந்தப் போராட்டம் நாளுக்கு நாள் பின்னடைந்துவருகிறது. அரபு நாடுகளோடு சிறந்த நண்பனாக ஒட்டி உறவாடும் அமெரிக்கா இஸ்ரேலுக்கு இராணுவ நிதி உதவிகளை அளித்துவருகிறது.

அமெரிக்காவின் அதிகபட்ச நிதியுதவியை பெறும் நாடுகளில் இஸ்ரேல் முதலிடம் வகிக்கின்றது. காஸாவிலும் மேற்குக் கரையி லும் யூதக் குடியிருப்புகளை அமைப்பதற்கு அமெரிக்க நிதியே பயன்படுகிறது. இது விடயத்தில் எவ்வித எதிர்ப்பையும் காட்டாத அரபு நாடுகள் போலியாக பலஸ்தீன் விடுதலை தொடர்பாக மறுபக்கம் பேசிக் கொண்டும் இருக்கின்றன. அல்லது தனது பணத்தினால் போஷிக்கப்படும் பிறநாடுகளில் இயங்கும் தமது இயக்கங்களை வைத்து பேச வைக்கின்றன. அரபுலகத்திற்கு உண்மையான ஒரு தேவையிருந்தால் காஸாவிற்கு எதிரான இந்த அடக்குமுறையை இலகுவாக தீர்க்கலாம். இஸ்ரேலின் நண்பனாகவும் பாதுகாவலனாகவும் அமெரிக்கா இருக்கிறது. அமெரிக்காவின் நண்பர்களாக அரபுநாடுகள் இருக்கின்றன.

## 2010 - தற்போதுவரை

ஹமாஸ் தலைமையிலான 13 ஆயுதக் குழுக்களின் பயங்கரவாத செயற்பாடுகள் பேச்சுவார்த்தையை குழப்பிவிட்டன. இஸ்ரேலியர்கள் மீதான தாக்குதல்கள் 2010க்குப் பின்னர் அதிகரித்துக் காணப்பட்டது. இதில் ஹமாசின் ஏவுகணைத் தாக்குதல்கள் குறிப்பிடத்தக்கவை.

**காஸா பகுதியை கைப்பற்றுவோம்: இஸ்ரேல்**

பலஸ்தீன தீவிரவாதிகள் தொடர்ந்து ரொக்கெட் வீசி தாக்குதல் நடத்துவதற்கு பதில் அளிக்கும் வகையில், காஸா பகுதியை திரும்ப கைப்பற்றுவோம் என்று March 2014இல் இஸ்ரேல் சவால் விடுத்துள்ளது.



இதுதொடர்பாக 'சனல் -2' தொலைக் காட்சிக்கு இஸ்ரேல் வெளியுறவுத்துறை அமைச்சர் அவிக்டர் லிபர்மென் அளித்துள்ள பேட்டியில் கூறியிருப்பதாவது:

இஸ்ரேலிய பகுதிகள்மீது பலஸ்தீன தீவிரவாதிகள் தொடர்ந்து ரொக்கெட்டுகளை வீசி தாக்குதல் நடத்திவருகின்றனர். 50 ரொக்கெட்டுகள்வரை அவர்கள் வீசியுள்ளனர். இந்த சூழ்நிலையில் காஸா பகுதியை திரும்ப கைப்பற்றுவதை தவிர எங்களுக்கு வேறு வழி தெரியவில்லை.

காஸா பகுதியில் ஏராளமான தீவிரவாத முகாம்கள் உள்ளன. நாள்தோறும் அப்பகுதியில் ஆயுதக் கடத்தல் அதிகரித்து வருகிறது.

வெடிகுண்டுகள் தயாரிப்பதும் அதிகரித் துள்ளது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்க இஸ்ரேல் விரும்புகிறது என்று அவிக்டர் லிபர்மென் கூறினார்.

இஸ்லாமிக் ஜிஹாத் அமைப்பு பொறுப்பேற்பு: இதனிடையே, இஸ்ரேல் பகுதியில் நடத்தப்பட்டு வரும் ரொக்கெட் தாக்குதலுக்கு இஸ்லாமிக் ஜிஹாத் என்னும் தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளதாக கூறப்படுகிறது.

இதுதொடர்பாக அந்த அமைப்பு வெளி யிட்டுள்ளதாக கூறப்படும் அறிக்கையில், இஸ்ரேல் விமானப்படை தாக்குதலில் தீவிர வாதிகள் பலியானதற்கு பழிவாங்குவதற்காக ரொக்கெட்டுகளை வீசி தாக்குதல் நடத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டன் பிரதமர் வருகை: இந்நிலையில் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன், இஸ்ரேல் நாட்டுக்கு சுற்றுப்பயணமாக March 2014இல் வந்தார். அப்போது இஸ்ரேல் அதிபர் ஷிமன் பெரிஸ்சுடன் இணைந்து செய்தியாளர்களிடம் பேசிய கமரூன், காஸா பகுதியில் இருந்து நடத்தப்பட்டு வரும் தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவித்தார்.

இஸ்ரேல் - பலஸ்தீனம் இடையே அமைதியை ஏற்படுத்துவது தொடர்பாக 2005ஆம் ஆண்டு பல்வேறு கட்ட பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. அந்த பேச்சு வார்த்தையின் முடிவில், காஸா பகுதியில் இருந்து இஸ்ரேல் தனது படைகளை முழுவதும் விலக்கிக்கொண்டது.

## பலஸ்தீன சகோதர போராட்ட அமைப்புகளின் முன்னைய நல்லிணக்க ஒப்பந்தம்

பலஸ்தீன போராளிகள் அமைப்புகள் மத்தியில் நல்லிணக்க ஒப்பந்தம் ஒன்று 2011இல் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் எகிப்தின் மத்தியஸ்தத்தில் இடம்பெற்றது. அந்த நல்லிணக்க ஒப்பந்தத்தில் ஹமாஸ், அப்பாசின் பி.எல்.ஓ மற்றும் இஸ்லாமிய ஜிஹாத், பலஸ்தீன் போராட்ட முன்னனி ஆகிய அமைப்புக்கள் கைச்சாத்திட்டன.

ஒரு ஆண்டுக்குள் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற தேர்தல்களை நடத்துவதற்கு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தின்படி மூன்று குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றில் முக்கியமாக தேர்தல் திட்டமிடல், பி.எல்.ஓ சீர்திருத்தம், காஸாவிலும், மேற்குகரையிலும் பாதுகாப்பு விவகாரங்களில் பரஸ்பர ஒத்துழைப்பு ஆகியன இக்குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள முக்கிய பொறுப்புகளாகும்.

இந்த ஒப்பந்தத்தின் பின்னர் எகிப்து புலனாய்வு பிரிவின் தலைமையகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாடிய ஹமாஸ் அரசியல் துறை பொறுப்பாளர் காலித் மிஷ்எல் புதிய அரபுலகின் யுகம் பிறந்து விட்டது என்று இந்த ஒப்பந்தத்தை வர்ணித்துள்ளார். பலஸ்தீன் மக்களின் தீர்மானத்தை உலகம் மதிப்புடன் கண்காணிக்க வேண்டும் எனவும் தங்களின் பொது எதிரி இஸ்ரேல் எனவும் காலித் மிஷ்எல் தெரிவித்துள்ளார். இந்த ஒப்பந்தத்தை இஸ்ரேல் கடுமையாக விமர்சித்துள்ளது.

## பலஸ்தீன விடுதலை அமைப்பு - ஹமாஸ் பேச்சுவார்த்தை

பலஸ்தீனிய ஜனாதிபதி மஹ்மூட் அப்பாசுடன் பேச்சுவார்தைகள் இடம் பெறுவதாக ஹமாஸ் தலைவர் காலிட் மேசால் 2013 பெப்ரவரி முதல் வாரத்தில் தெரிவித்துள்ளார். சர்வதேச ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

இதுதவிர, ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற தேர்தல்களுக்கான ஆயத்தங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஹமாஸ் மற்றும் அப்பாசின் பட்டா கட்சிகளுக்கிடையே ஏற்பட்ட பிளவை அடுத்து பாலஸ்தீனிய தேர்தல்கள் பல வருடங்களாக பிற்போடப்பட்டு வந்திருந்தன. இதன்காரணமாக, ஹமாஸ் காசா பிரதேசத்தையும் பட்டா மேற்கு கரையோரத்தையும் தமது கட்டுப்பாட்டின் கீழ்வைத்துள்ளன. கடந்த 2011ஆம் ஆண்டு மே மாதம் இருதரப்பினருக்கிடையே சமாதான ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்ட போதிலும், அது அமுல்படுத்தப்படாத நிலையில் உள்ளது.

எப்படியிருப்பினும், கடந்த சில மாதங்களாக இருதரப்பினருக்கும் இடையே சுமூகமான நிலை தற்போது தோன்றியுள்ளது. இந்தநிலையில், ஹமாஸ் தலைவர் காலிட் மேசால், தேசிய அரசாங்கம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பலஸ்தீனக் குழுக்கள் இடையே நல்லிணக்க உடன்பாடு

காஸாவில் நடந்த பேச்சுவார்த்தைகளை அடுத்து, பலஸ்தீன போட்டிக்குழுக்களான அல்லது பத்தா அமைப்பும், ஹமாஸும் நல்லிணக்க உடன்படிக்கை ஒன்றை April 23, 2014இல் அறிவித்துள்ளன. இந்த உடன்படிக்கையின்படி, 5 வாரங்களுக்குள் ஒரு ஒருமைப்பாட்டு அரசாங்கம் (a unity government) அமைக்கப்படும். அதன்பின்னர் 6 மாதங்களில் பொதுத்தேர்தலும், அதிபர் தேர்தலும் நடக்கும்.

இஸ்ரேலுக்கும், அதிபர் மஃமுட் அப்பாஸின் ஃபத்தா கட்சிக்கும் இடையிலான சமரசப் பேச்சுவார்த்தை தோல்வியடைந்ததை அடுத்து இந்த உடன்படிக்கை வந்துள்ளது.

அதிபர் அப்பாஸ் அவர்கள் இஸ்ரேலை விட, ஹமாஸுடன் சமாதானம் செய்து கொள்ளவே விரும்புகிறார் என்று இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறியுள்ளார். ஹமாஸ் ஒரு பயங்கரவாத அமைப்பு என்றும் அதனுடன் அதிபர் அப்பாஸ் உடன்பட்டுள்ள தால் அவருடனான சமாதானப் பேச்சுக் களுக்கு மேலும் மேலும் பின்னடைவே ஏற்படும் எனவும் இஸ்ரேலிய அரசாங்கம் அறிவித்தது.



பரபரப்பு நிறைந்த

# எகிப்திய விமான விபத்து!

-விறுவிறுப்புக்காக தருவது ரிஷி

ஒரு வழியாக, விமானம் கடலுக்குள் விழுந்துவிட்டமையை கட்டுப்பாட்டு அறையில் இருந்தவர்கள் உறுதி செய்துகொண்டனர்.

பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள், கறுப்புப்பெட்டியில் இருந்து பெறப்பட்ட தகவல்கள் என்பவற்றின்படி, விமானம் கடலை தொடுவதற்கு 7 விநாடிகளுக்கு முன்னதாக, அதன் ஒரு பக்க எஞ்சின் விமானத்தில் இருந்து பிய்ந்து, தெறித்து கடலில் வீழ்ந்தது.

அதிலிருந்து, 1 நிமிடம், 24 விநாடிகளுக்கு முன்னதாக விமானம் கடலை நோக்கி வேகமாக வந்து கொண்டிருந்தபோது, கடல் மட்டத்தில் இருந்து 18,300 அடி உயரத்தில் இருந்தது.

அந்த விநாடியில் பைலட்டும், கோ-பைலட்டும் ஒன்றிணைந்து முயன்றிருந்தால், விமானத்தை காப்பாற்றியிருக்க முடியும். இருவரும் ஒன்றாகச் சேர்ந்து, விமானத்தின் கோணத்தை மாற்றி, கடல் மட்டத்துக்கு சமாந்தரமாக பறக்கச்செய்து, படிப்படியாக உயர வைத்திருக்க முடியும். அந்த சந்தர்ப்பம் தவறவிடப் பட்டது. அந்த விநாடியில் இருந்து சரியாக 31 விநாடிகளின் பின்னர் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அதுதான் இறுதி சந்தர்ப்பம்.

அந்த விநாடியில் பைலட்டும், கோ-பைலட்டும் ஒன்றிணைந்து முயன்றிருந்தால், விமானத்தின் கோணத்தை மாற்றி, கடல் மட்டத்துக்கு கொண்டுவந்திருக்கலாம். ஆனால் உயரவைக்க முடிந்திராது. மாறாக என்ன செய்திருக்க முடியுமென்றால், கடல் பரப்பில் விமானத்தை தரையிறக்கி இருக்கலாம்.

அப்படி நடந்திருந்தால், விமானம் உடைந்திருக்கும்தான். ஆனால், விமானத்தின் உடல்பகுதி கடலின்மேல் மிதந்திருக்கும். அதற்கு உள்ளேதான் விமானிகள் பயணிகள் எல்லோரும் இருந்தார்கள். பலரது உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கும். அதுவும் தவறவிடப்பட்டது.

### இறுதிக் கணத்தில் என்ன நடந்தது?


அந்த இறுதி சந்தர்ப்பத்தில், விமான ஹொக்பிட்டின் இடதுபுற சீட்டில் (பைலட் சீட்) இருந்தவர் விமானத்தை உயர்த்த முயன்றார் (அதுதான் செய்திருக்க வேண்டியது) அதேநேரத்தில் வலதுபுற சீட்டில் (கோ-பைலட் சீட்) இருந்தவர் விமானத்தை கடலை நோக்கி போக வைத்துக் கொண்டிருந்தார்.

அதாவது, ஒருவர் விமானத்தை காப்பாற்றி மேலேற்ற முயன்றார். மற்றவர் அதே விமானத்தை கீழே கடலை நோக்கி போக வைத்துக்கொண்டு இருந்தார்.

விமானம் அதிவேகமாக கீழ்நோக்கி சென்று கொண்டிருந்தபோது, ஒருவர் விமானத்தை மேலேற்ற, மற்றவர் கீழ்நோக்கி செலுத்திக் கொண்டிருந்தார். விமானம் கடலை தொடுவதற்கு 7 விநாடிகளுக்குமுன், அதன் ஒரு பக்க எஞ்சின் விமானத்தில் இருந்து பிய்ந்து, தெறித்து கடலில் வீழ்ந்தது.

அற்றுப்போய், அடுத்த 7 விநாடிகளில் விமானம் அட்லாண்டிக் கடலில் மூழ்கியது!

இதுவரை நீங்கள் படித்ததில் இருந்து, விமானத்தின் ஹொக்பிட்டில் தான் ஏதோ இழுபறி நடந்தது என்பதை விளங்கிக்கொண்டீர்கள் அல்லவா?



விமானத்தில் இருந்து கழன்று சென்ற விமானத்தின் இயந்திரப் பகுதி.

அத்துடன் அந்த விமானமோ, அதில் இருந்தவர்களோ காப்பாற்றப் படுவதற்கான சகல சந்தர்ப்பங்களும் ஹொக்பிட்டுக்குள் என்ன நடந்தது என்று அடுத்த வாரம் தெரிந்து கொள்வோம்...

# சவால்களுக்கு மத்தியில் கிழக்கு பல்கலைக்கழகம்

கிழக்குப் பல்கலைக்கழகம் குழப்பங்களின் கூடாரமா? என்ற கேள்வி பல தடவை-களில் கேட்கப்பட்டிருந்தது. அது சிங்கள மாணவன் ஒருவர் 2008ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 21ஆம் திகதி இரவு சுட்டுக் கொல்லப்பட்டதை யடுத்து கிழக்குப் பல்கலைக் கழகத்தில் நிறுவப்பட்ட பொலிஸ் காவலரண் காரணமாக ஏற்பட்ட பிரச்சினையை அடிப்படை யாகக் கொண்டிருந்தது.

ஆனால், அதற்குத் தீர்வு கிடைத்தாலும் பின்னர் கல்வி, அபிவிருத்தி சார்நது பிரச்சினைகள் தோற்றுவிக்கப்பட்டன.

இவற்றுக்கெல்லாம் தீர்வைப் பெற்றுக் கொடுப்ப தாக ஜனாதிபதியின் இரண்டு விஜயங்கள் முக்கியம் பெற்றன. கடந்த தடவை கிழக்குப் பல்கலைக் கழகத்திற்கு ஜனாதிபதி விஜயம் செய்தமை ஒரு சாதாரண விடயம் என்ற வகையில் இருந்தது.

இருப்பினும் இந்த வருடத்தின் ஏப்ரல், 19ஆம் திகதி ஜனாதிபதி வருகை தந்து பல்வேறு அபிவிருத்தி திட்டங்களைத் திறந்து வைத்தமை பெரும் மகிழ்வை ஏற்படுத்தியிருந்தது.

30 வருடங்களாக நடைபெற்ற யுத்தம், அதன் பின்னர் ஏற்பட்ட சமாதானம் என்பவற்றுக்கிடையில் சிக்கித் தவித்த கிழக்குப் பல்கலைக்கழகம் கடந்த 2 வருடங்களுக்குள் மிகப் பெரிய அபிவிருத்திகளைக் கண்டிருக்கிறது. அத்துடன் பெரும் மாற்றங்களையும் கண்டிருக்கிறது. இதற்குக் காரணம், அரசாங்கம் அதுவும் ஜனாதிபதி, உயர்கல்வி அமைச்சர் கொடுக்கும் முக்கியத்துவமும், ஒத்துழைப்புமே ஆகும்.

ஒரு கல்விச்சாலையில் முரண்பாடு களையும், அரசியல் பேதங்களையும் உருவாக்கி குழப்பங்களை ஏற்படுத்திவிட நினைக்கும் ஒவ்வொருவரும் தமது சமூகம் வளர்ச்சி பெறவேண்டும் என்று சிந்திக்கவேண்டும் என்பதற்கு கிழக்குப் பல்கலைக்கழகம் நல்ல உதாரணமாக இருக்கிறது.

சிங்கள, முஸ்லீம், தமிழ் மாணவர்கள் ஒற்றுமையாக கல்வி கற்கவேண்டிய இடத்தில் தமிழ்பேசும் என்றும் சிங்களம்பேசும் என்றும் பிரிவினையை ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் நடைபெற்றிருந்தன. அதே போல் தனிப்பட்ட இலாபங்களுக்காக கல்வியாளர்களான விரிவுரையாளர்கள் தூண்டபடப்பட்டனர்.

இவற்றுக்கெல்லாம் காரணம் அரசியலாக இருந்தது.

பல்கலைக்கழகம் என்பது கல்வி நிலையில் மிக உயர்ந்த இடத்தில் இருப்பதாகும். அந்தப் பல்கலைக்கழகம் பல்வேறு கல்வியாளர்களையும், புத்திஜீவி களையும் கொண்டிருப்பதுடன், உருவாக்குவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. அத்துடன் பல பிரச்சினை களையும் மோதல்களையும் கொண்டே இருக்கும்.

கிழக்குப் பல்கலைக்கழகம் கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக பல்வேறு பிரச்சினைகளையும், ஆபத்துக்களையும், வீணான விளைவுகளையும் சந்தித்த ஒரு பல்கலைக்கழகமாகும். கிழக்குப் பல்கலைக்கழகம் என்பது, வந்தாறுமூலை யில் உள்ள பிரதான பல்கலைக்கழகம், திருகோணமலையிலுள்ள வளாகம், கல்லடியில் உள்ள விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம், அரசடியிலுள்ள சௌக்கிய பராமரிப்பு பீடம் என்பவற்றினை உள்ளடக்கியதாகும்.

யுத்தம் நடைபெற்ற காலத்தில் கிழக்குப் பல்கலைக்கழக கல்வி அபிவிருத்திகளோ, பௌதீக அபிவிருத்தி களோ சிறப்பாக அமைந்திருக்கவில்லை. புலிகள் யுத்த காலத்தில் தங்களது அரசியல்களுக்காக பல்கலைக்கழகத்தின் மாணவர்களைப் பயன்படுத்தினர் போராட்டங்களை நடத்தினர்.

ஆனால், யுத்தம் நிறைவுபெற்ற பின்னர் நிலைமை முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. உபவேந்தர் நியமிப்பதிலேயே நெருக்கடிகள், அரசியல்வாதிகள் தங்கள் தங்கள் நடவடிக்கைகளுக்கு ஏற்றவர்களை நியமிப்பதில் ஆர்வம் காட்டினர். ஆனால், ஜனாதிபதியினது நியமனத்தினால் அரசியல்வாதிகளின் நோக்கங்கள் பிழைத்துப்போனது.

புதிய உபவேந்தராக கலாநிதி கிட்னன் கோபிந்தராஜா நியமிக்கப்பட்ட பின்னர் ஏற்கனவே கிழக்குப் பல்கலைக் கத்தில் தமது அதிகாரங்களை செலுத்திக் கொண்டிருந்த பலரது ஆதிக்கம் நடக்க வில்லை. அதன்பின்னர் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் பெரியளவான அபிவிருத்தி களும், அரசாங்கத்தின் நேரடி ஆசீர் வாதத்தில் அனைத்து விதமான வசதி களும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

உபவேந்தருக்கான அதிகாரமானது பல்கலைக்கழகங்களின் அனைத்து விதமான செயற்பாடுகளையும் நிகழ்த்தக் கூடியது என்பது எல்லோருக்கும் தெரியாவிட்டாலும் அதனை புதிய உபவேந்தர் பயன்படுத்திக்கொண்டார். இந்தப் பயன்படுத்தல் பெரும் முறுகலை ஏற்படுத்தியிருந்தது.

அந்தக் காலத்தில் உபவேந்தருக்கு எதிராக 170 பக்கங்கள் கொண்ட

**கிழக்கான்**

ஊழல் அறிக்கை ஒன்று கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் சங்கத் தினரால் உருவாக்கப்பட்டு பல்வேறு தரப்பினருக்கும் வழங்கப்பட்டது. இது பாராளுமன்றத்திலும் பல தடவைகள் பேசப்பட்டன. ஆனால் உயர்கல்வி அமைச்சரது நம்பிக்கை, ஜனாதிபதியின் திருப்தி என்பன இவற்றை இல்லை என்றாக்கின. அந்த நிலை அனைவரை யும் ஒன்றுமில்லை என்றாக்கிவிட்டு இருக்கிறது.

இதற்கிடையில் இந்தமாத இறுதி வாரத்தில், கிழக்குப் பல்கலைக் கழகத்தின் அபிவிருத்தி சார்ந்து அவற்றின் வேறுபாட்டை மறந்து செயற்படவேண்டும் என்றவகையில் ஒரு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது. ஒரு முழுநாள் பேச்சுவார்த்தையின் அடிப்படையில் அனைத்துவித குழப்பங்களும் தீர்க்கப்பட்டன. அதற்காக ஏற்கெனவே ஒரு பிரச்சினை இருந்தது என்று ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பது இதில் கேள்வியாகவே இருக்கிறது.

கிழக்குப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் என்று ஒன்று இருந்தாலும், புதிதாக ஜனநாயகத்துக்கும் அபிவிருத்திக்குமான ஆசிரியர் சங்கமும் உருவாகியிருக்கிறது.

பல்கலைக்கழகத்தின் கல்விசார் மற்றும் நிர்வாக முறைகளில் எதேச் சதிகாரமாக மாற்றங்கள் செய்யப்படு கின்றன, பல்கலைக்கழக முகாமைத்து வத்தில் வெளிப்படைத்தன்மையற்ற தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன என பல குற்றச்சாட்டுகள் பழைய ஆசிரியர் சங்கத்தால் முன்வைக்கப்பட்டாலும், அவை சட்டத்தின் அடிப்படையிலேயே நடக்கின்றன என்று வெளிப்படுத்தல்கள் பல்கலைக்கழக நிர்வாகத்தினால் கொடுக்கப்பட்டன.

கடந்த 30 வருடகாலத்தில் கிழக்கு பல்கலைக்கழகத்தில் குழுக்களின் நடவடிக்கைகள் காரணமாகவே பல்கலைக்கழகம் மிகமோசமான நிலைக்கு சென்றது அந்த நிலையினை மீண்டும் தலைதூக்காத வகையில் செயற்படவேண்டிய நிலை தேவைப் படுகிறது என்பது பொதுவான பார்வையாக இருந்தது.

கிழக்கு பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர்களின் எண்ணிக்கை 157. இவர்களில் 36பேர் கற்கை விடுமுறையில் உள்ளனர். தற்போது கடமையாற்றும் 121 விரிவுரையாளர்கள் கடமையில் இருக்கின்றனர். இதுவே கணக்காக இருக்கிறது.

(22ஆம் பக்கம் பார்க்க...)




பிரசவம் ஒரு இயற்கை நிகழ்வு. உலகில் 3 விநாடிக்குள் ஒரு குழந்தை பிறக்கின்றது. ஆனால் ஒவ்வொரு தாய்க்கும் இது வாழ்வில் ஓர் முக்கியமான காலம். மகிழ்ச்சி, பயம், கடின உழைப்பு கலந்த ஓர் புதிய அனுபவம்.

கர்ப்ப காலத்தில் தாய்மாருக்கு மனதில் எழும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதத்திலும் கர்ப்ப காலத்தில் ஏற்படும் மாற்றம், பிரச்சினைகள் என்பவற்றை விளக்கவும் எடுத்த முயற்சி இது. சற்று ஆழமாக காலை வைத்திருப்பதாக தோற்றலாம். ஆனால் இந்த கணினி யுகத்தில் கண்ணாடித் தன்மை (Transparency) அவசியமென நான் கருதுகின்றேன். மருத்துவம் மூடுமந்திரமாய் இருந்த காலம் விண்ணேறிவிட்டது. நோயாளிகள் தங்கள் பிரச்சினைகளை நன்கு விளக்கமாக அறியவிளைகின்றனர்.

**Dr. சி.நவநீதன்**

# மகப்பேற்றின் பின் குடும்பத் திட்டமிடல்


மகப்பேற்றின் பின்னர் பாலூட்டும் தாய்மாருக்கு 3 மாதமளவிற்கு மீண்டும் குழந்தை தங்குவதில்லை. சிலருக்கு 3 மாதங்களுக்குள்ளாகவே மாதவிடாய் சக்கரம் ஆரம்பிப்பதால் கருத்தரிக்கும் சாத்தியமுள்ளது.

பொதுவாக பிறந்த குழந்தைக்கு ஒரு வயது ஆகும்வரை கருத்தரிக்காமல் இருப்பது வளரும் குழந்தைக்கு அதிகளவு அக்கறை செலுத்தஉதவும். எனவே அதுவரை காலமும் குடும்பக்கட்டுப்பாட்டு முறைகள் பாவிக்கப்படலாம்.

### குடும்பக் கட்டுப்பாட்டு மாத்திரைகள்


இதில் இரண்டு வகைகள் உண்டு. பொதுவாக பாவிக்கும் முதலாவது வகை கூட்டு இனக் குளிகை (Combined Pills) (மித்துரி) பாலூட்டும் தாய்மாருக்கு விரும்பத்தக்கதல்ல. ஏனெனில், இம்மாத்திரைகளில் உள்ள ஹோர்மோன்கள் பால்மூலம் குழந்தையை சென்றடைந்து பக்க விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். எனவே பாலூட்டும் தாய்மாருக்கு (Progesterone Only Pill) என்ற வகை மாத்திரைகள் பாவிக்கப்படலாம்.

### ஊசி மருந்துகள்



DEPOT PROVERA எனப்படும் ஊசி மருந்து பாலூட்டும் தாய்மாருக்கு உகந்ததாகும். 3 மாதங்களுக்கு ஒரு முறை போடப்படும் இவ் ஊசி பக்கவிளைவுகள் குறைந்ததாகும். எனினும் இது சிலருக்கு தற்காலிகமாக மாதவிடாய் ஏற்படுவதை நிற்பாட்டக் கூடும்.

### லூப் முறைகள் (IUCD)



கருப்பைக்குள் வைக்கப்படும் சிறிய கம்பி போன்றதொரு சாதனம் கருத்தரிப்பதைத் தடுக்கும். இதுவும் பாலூட்டும் தாய்மார் பாவிக்கக்கூடியதொரு முறையாகும். சிலருக்கு இது குருதிப்போக்கை அதிகரிக்கும் பிரச்சினைகள் கொடுக்கக்கூடும்.

### நிரந்தர கருத்தடை முறைகள்

ஆண், பெண் இருபாலாருக்கும் இதை செய்துகொள்ள முடியும். ஆண்களுக்கான நிரந்தரக் கருத்தடை முறை சிக்கல்கள் குறைந்ததும் இலகுவானதுமாகும்.

பெண்களுக்கான நிரந்தரக் கருத்தடையின்போது பலோப்பியன் குழாய்கள் அடைக்கப்படுவதால் கருக்கட்டல் நிகழ்வதில்லை. சிறு சத்திரசிகிச்சை மூலமோ அல்லது Laparascopy எனப்படும் துளை மூலமான சத்திரசிகிச்சையாலோ இது செய்யப்படும்.

எத்தனை குழந்தைகளின் பின் நிரந்தர கருத்தடைச் சத்திரசிகிச்சை செய்யலாம் என நியதி எதுவுமில்லை. எனினும், தாயின் வயதையும், குழந்தைகளின் எண்ணிக்கையையும் வயதையும் கருத்திற்கொண்டு வைத்தியர்கள் சத்திரசிகிச்சை சில காலங்கள் தள்ளிப்போடுமாறு ஆலோசனை கூறக்கூடும்.

ஏனெனில், ஒரு முறை நிரந்தர கருத்தடை செய்தபின் அதை பழைய நிலைமைக்கு மாற்றுவது மிகவும் கடினமானதாகும்.

### குழந்தைப்பேறுக்காக வைத்தியசாலைக்கு எடுத்து வரவேண்டியவை

**தாயின் பாவனைக்கு**

1. சுத்தமான பருத்தியிலான சேலைகள் - 2
2. பருத்தியிலான பெட்ஜக்கெற்-03
   லுங்கி - 03
   துவாய் - 01
   படுக்கை விரிப்பு -02

சத்திரசிக்சை செய்யவேண்டி இருப்பின் வெள்ளைப் பாவாடை - 01
வெள்ளை பெட்ஜக்கெற் - 01
குளிர் காலத்தில்
கம்பளிச்சட்டை - 03
கம்பளிப் போர்வை

இப்பொருட்களை 7ஆவது மாதத்தில் இருந்து தயாராக வைத்திருக்கவேண்டும்.

**குழந்தையின் பாவனைக்கு**

சுத்தமான பருத்தியிலான கட்டும் துணிகள் (Nappies).

பருத்தியிலான சிறு சட்டைகள்- 06.

(தொடரும்...)

தினம்தோறும்
கல்விமுரசு
இணைப்பு

தினமுரசு
நாளிதழ்
ரூ.10/=
மட்டுமே

A/L, O/L மற்றும்
புலமைப் பரிசில்
மாணவர்களுக்கான
மாதிரி வினாத்தாள்கள்
விடைகளுடன் தினமும்
வெளியாகின்றன!

இப்போது நீங்கள் அறிய விரும்பும்
அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்", "பதிவிறக்கப் பெட்டகம்"

வடபுலத்தான்
எழுதும்
நாட்டு நடப்பு
குறிப்புகளும்
விமர்சனங்களும்

வடபுலத்தான் எழுதுவது...

# காதலர்கள் ஜாக்கிரதை

"இன்னும் எத்தன நாள்தான் இப்படியே இருக்குறதா உத்தேசம்"? என்று வழக்கம்போல் கேட்டான் "திரு". ஆனால், இந்த விஷயத்திற்கு இன்று ஒரு முடிவு கட்டிவிடவேண்டும் என்ற தீவிரம் அவன் குரலில் தொனித்தது..!

"எப்படியே...?" என்று சற்றும் சளைக்காமல் எதிர்க்கேள்வி கேட்டான் "ராஜா"

"எனக்கு என்னவோ இது சரியா படல. சீக்கிரமா உன் காதல அவகிட்ட சொல்லு...."

"காதல பத்தி உனக்கு என்னடா தெரியும்". அதெல்லாம் எடுத்தோம் கவுத்தோம்னு செய்யுற காரியமா என்ன?"

"சரிப்பா ஆற அமர செய்... அதுக்குள்ள நம்ம ஆயுசே முடிஞ்சுடு...."

ராஜாவின் முகம் வாடியது..!

"என்ன பா ஆச்சு"?

"வேற என்ன செய்ய உன்கூட பழகுன பாவத்துக்கு..?"

"அதெல்லாம் ஒன்னும் வேண்டாம்."


"அப்ப... ஒன்னு செய்" உனக்கு என் மேல உண்மையாவே அன்பு இருந்தா, நீ என்ன உண்மையான பிரண்டா நினைச்சிக்கிட்டு இருந்தா நீ அவ கிட்ட இன்னிக்கு சொல்லியே ஆகணும்.

"என்ன பா" பதிலையே காணோம்..? யோசிக்குரீயலோ..?

"......."

"ஒய்". சொல்லு பா.. என் மேல உண்மையா உனக்கு நட்பு இருக்கா? உண்மையாவே என் மேல உனக்கு அன்பு இருக்கா?"

"சரி" உனக்காக... நான் சொல்லுறேன்.



"கவலையா இருக்கு திரு.."

"ஏன்டா..?"

"மனசு சரி இல்ல..."

"அதுதான் ஏன்னு கேட்குறேன்..."

"அவ எனக்கு வேணும்டா...!"

"உஹ்"ஹும்" வேணும்னு சொல்லு.. ஆனா ஸ்டெப் எடுக்காத". நீயே இவ்வளவு தயங்கும்பொழுது அவ ஒரு பொண்ணுடா... எவ்வளவு தயக்கம் இருக்கும்....?"

"என்ன தயக்கம் வேண்டி இருக்கு..? வந்து சொன்னா நான் என்ன மாட்டேன்னா சொல்லப்போறேன்..?"

"ஏன் அதையே அவ நினைச்சு இருக்க கூடாதா"? இங்க பாரு ராஜா நாம எல்லாம் பழக ஆரம்பிச்சு ஒரு வாரம் ஓடிடுச்சு... நீங்க ரெண்டு பேரும் முதல் பார்வையிலேயே மனச பரிமாறிட்டீங்க.. உங்க லவ்வ பத்தி இங்க எல்லாருக்கும் தெரியும்" அப்பறம் என்ன யோசனை...? தைரியமா சொல்ல வேண்டியதுதானே..? நாம இருக்கப்போற கொஞ்ச நாளைக்கு நாம ஏன் மத்தவங்களுக்காக வாழணும்" தைரியமா நமக்காக வாழலாமே...?

"பயமா இருக்கு திரு"

"என்ன பயம்..?"

"நீ சொல்லுற மாதிரி வாழலாம்.. ஆனா அவ என் ஜாதி இல்லையே..?"

"அடச்ச" நீயெல்லாம் ஒரு ஜென்மம்.. ஜாதியில என்னடா இருக்கு?, "ஏன் நீயும் நானும் கூடத்தான் வேற வேற ஜாதி" ஒத்துமையா இல்ல...? யார் என்ன சொன்னா...?"

"நட்புக்கு ஜாதி முக்கியமில்ல" ஆனா வாழ்க்கைக்கு...? காதலுக்கு...? முக்கியமாச்சேடா...

"இங்க பாரு.. அவ உன்ன பாக்குற அந்த பார்வையில காதல் இருக்கு.. அது உனக்கும் தெரியும்" அத வெளிப்படுத்துனுதான் சொல்லுறேன்" இப்ப வந்து ஜாதி அது இதுன்னு... உனக்குள்ள ஜாதிவெறி இருக்கா..?"

"என்னடா இத்தன நாள் ஒன்னுக்குள்ள ஒன்னா பழகிட்டு, இப்ப வந்து இப்படி கேட்குற"?

"கேட்குறதுக்கு பதில் சொல்லு"

"எனக்கு அப்படி ஒரு எண்ணம் எப்பவுமே இருந்தது இல்ல... அப்படி இருந்திருந்தா அவள எப்படி நான் நேசிச்சு இருப்பேன்?"

"சரி அப்படினா... ஒன்னு செய்யலாம்". நான் வேணும்னா போய் சொல்லுறேன், உன் காதல அவகிட்ட...

"நீயா...? ஏன்டா இப்படி...?"

"எனக்காக வேண்டாம்" உனக்காக சொல்லு, உன் வாழ்கைக்காக, உன் காதலுக்காக, உன் இனவிருத்திக்காக என்று கண் சிமிட்டினான் திரு.

"ராஜாவின் கன்னங்களில் ப்ரெஷான ரெட் அப்பிள்!

ராணியும் அவ்வழியே வந்தாள். அவள் கண்கள் மின்னின, ராஜாவைப் பார்த்து காதல் பேசின.. இதழ்கள் மௌனப் புன்னகையை உதிர்த்தன..

"சொல்லு.. இப்பவே சொல்லிடு..." என்று திரு ராஜாவைச் சீண்டினான்.

ராஜாவோ, "இன்னிக்கு வேண்டாம்.. நாளைக்கு...." என்றவாறு அசடுவழிந்தான்.

"நாளைக்கு என்ன நல்ல நாளா...? "

"இல்ல.. நாளைக்கு வேலன்டைன்ஸ் டே"

"புரிஞ்சிடுச்சு புரிஞ்சிடுச்சு". நீ அசத்து என்றவாறு திரு நகர்ந்தான்.

ராஜா-ராணி இருவரின் விழிகளும் சந்தித்தன, காதல் மொழிபேசின, மனமும் முகமும் இன்பத்தை அள்ளி வீசின, இருவரின் வயிற்றிலும் சில்லு சில்லாய் பட்டாம்பூச்சிகள். இந்த காதல் வார்த்தைகளால் வடிவமைக்க முடியாது, அதை உணர மட்டுமே இயலும். காதல் வயப்படாதவர்களுக்கு அந்த உணர்வு புரியாது, வந்தவர்களுக்கோ அந்த உணர்வை வார்த்தைகளால் சொல்லிமாளாது. காதல் என்பது ஒரு இன்பம், அது தீண்டத்தீண்ட பெருக்கெடுக்கும். அந்த இன்ப ஊற்றில் எந்த ஒரு உயிருக்கும் சேதமிருக்காது, மாறாக அங்கேதான் பல உயிர்கள் உருவாகும். காதல் என்று ஒன்று இல்லையென்றால் இந்த உலகமும் அதிலுள்ள சிறுசிறு ஜீவராசிகளும் பிறத்தல் அரிது, என்னதான் தீவிரமாய் வாதம் செய்தாலும் இன்னும் இங்கே இந்த உலகில் காதலை மதியாதோர் இருக்கவே செய்கின்றனர். அவர்கள் பற்பல காதல்களை உடைக்கவே செய்கின்றனர். இதுதான் காதலின் சாபக்கேடு!

மறுநாள்,

என்றும் அல்லாமல் அன்று ஏதோ இம்மண்ணில் புதிதாய் அவதரித்ததைப் போல் காட்சியளித்தான் ராஜா. கூடவே என்றும்போல் குதூகலமாய் திரு.

இன்று எப்படியேனும் அவளிடம் தன் காதலை சொல்லிவிடவேண்டும் என்பதில் தீவிரமாய் இருந்தான் ராஜா. அதற்கு பல ஒத்திகைகள் வேறு திக்கித் திணற திரு தான் பாவம்(?)!

அவளும் வந்தாள், என்றும்போல் இனிமையாய் இளமையாய், மெல்லிய புன்முறுவலுடன் திரு அவனை உந்தித் தள்ளினான். அவன் அவளை நோக்கி மெல்லமாய் விரைந்தான். அங்கே தயக்கமும் பொறுமையையும் மேலோங்கியது.

இருவரின் மூச்சுக்காற்றும் இருவர் மேலும் இதமாய் பரவ, அந்த சில்லென்ற சூழலிலும் ஒருவிதமான வெதுவெதுப்பு அவர்களுக்குள் பல எண்ணங்களை எழுப்பியது என்று சொன்னால் அது மெய்தான்...!

காதல் என்ற ஒன்று இருந்தாலே அங்கே பிரச்சினை ஏற்படுத்த ஆட்களும் இருப்பர். சில இடங்களில் காதலர்களே பிரச்சினையாய் மலர்வர், வேறு சில இடங்களில் காதலர்கள் அல்லாது அவர்களைச் சார்ந்தவர்களோ, இல்லை அவர்களிடம் நேரடியாக தொடர்பில்லாதவர்களோ முளைப்பர். இங்கேயும் அதே பிரச்சினைத்தான். "கவிதா அக்காவால்" மலர்ந்தது.

திரு உந்தித்தள்ள, மனமோ பிந்தித்தள்ள, மெதுவாக மிகமிக மெதுவாக ராணியை நெருங்கும்பொழுது, இவன் மனதிலே முளைத்த கிலியும், அதை வெளிக்காட்டாமல் முகத்தில் தோன்றிய களிப்பும், அவளை ஒருவாறு யூகிக்கவும் வைத்தது.

வாய்திறந்து சொல்லும்வேளையில்... யாரோ அவனையும் அவளையும் மரணத்தின் வாயிலை எட்டிப்பார்க்க செய்தனர். அந்த "யாரோ" யார் என்று அவர்கள் உணர சில நொடிகள் எடுத்தது. அந்த யாரோவுக்கு சொந்தக்காரர் "கவிதா அக்கா".

அவர்களின் நிலை கண்டு திரு கதறியது அவர்களுக்கு மட்டுமே கேட்டது. உயிர்போகும் வலி என்ன என்பதை அவர்கள் அனுபவிக்கத் துவங்கிவிட்டனர். முதலில் அவர்களின் தலையில் ஒரு விதமான பாரம் அழுத்தியது, மெல்ல அதை முழுதாய் உணரும் முன் ஒரு வகையான மயக்கம் எத்தனித்தது, பின் மெல்ல மெல்ல சுவாசம் நிற்கத் துவங்கியது, நாசியின் துவாரம் வழியாக சுவாசம் உடைபட, செயற்கையாய் வாயால் சுவாசிக்க துவங்கினார்கள். இதய துடிப்பும் அதிகரிக்கத்துவங்கியது...

லப்டப், லப்டப், லப்டப், லப்டப்....

இதயத்துடிப்பு இயல்பைவிட வேகமாய், இன்னும் வேகமாய், இயல்பாய், மெல்லமாய், மெல்..ல..மாய், மெல்...ல... மெல்..ல..மாய், நிற்கப்போகும் தறுவாயில் மீண்டும் இயல்பான இதயத்துடிப்புடன் காணப்பட்டனர்.

பெண்களின் ஒவ்வொரு பிரசவமும் மறுபிறப்பு என்று சொல்லுவர். மனித சாதியில், ஆனால் அவர்களின் பிறப்பில், குறுகிய காலங்களில் அவர்கள் இதே போல் பல மறுபிறப்புகளை சந்திக்கவே செய்கின்றனர். அதுவும் அவர்களின் ஒட்டுமொத்த மறுபிறப்பும் இந்த மனிதர்களால்தான் செயற்படுதப் படுகின்றது... இந்த முறை அது கவிதா அக்கா என்னும் ஒரு பெண்பாலைச் சேர்ந்த ஒரு மனிதமிருகத்தால் வந்தது...

யாரோ முகம் தெரியாதவர்களுடன் கவிதா அக்கா உரையாடிக் கொண்டிருந்தாள்.

"ஒன்னும் இல்லங்க" நீங்க கேட்ட மீன்கூட இந்த மீனும் வந்துடுச்சு இப்ப இத விட்டுட்டா போச்சு.. நீங்க சொன்ன மீன மட்டும் ஒரு கவர் தண்ணியில போட்டுத்தரேன்.

அடுத்த விநாடி ராஜாவுக்கு மீண்டும் அதே "லப்டப்" போராட்டம். மீண்டும் அவன் அதே பழைய தொட்டிக்குள் செலுத்தப்பட்டான். ராணியை யாரோ ஒரு அப்பாவும் பெண்ணும் எடுத்துக் கொண்டு செல்கின்றனர். ராஜாவின் காதல், வார்த்தைகளால் வெளிப்படுத்தப் படாமலேயே காற்றில் மிதந்து தண்ணீரில் கரைந்தது. அதன் வெளிப்பாடுதான் அங்கே தண்ணீரிலிருந்து வெளிப்படும் சிறுசிறு முட்டைகள் (பபுல்ஸ்) என்று சொல்லித்தான் புரியவேண்டுமாஎன்ன? திருவின் ஆறுதல்களை ஏற்கும் மனநிலையில் ராஜா இல்லை..

காதலையும் மனதுக்குள் சுமந்து, வெளிப்படுத்தவும் முடியாமல், வெளிப்படும் தறுவாயில், காதலனை விட்டே பிரிந்து, தூரதேசம் செல்லும் ராணியின் தவிப்பை வார்த்தைகளால் கோர்த்திட முடியாது.

தண்ணீரில் அழும் மீனின் கண்ணீரை யாரும் அறியமாட்டார்கள். இந்த அற்ப மனிதர்கள் உட்பட அதற்கு சா[illegible] தான் அதோ அந்த சிறுமியின் பேச்சு.

அப்பா... அப்பா... இந்த மீன் பாருங்களேன். என்னமா குதிச்சு குதிச்சு விளையாடுது? எனக்கு ரொம்ப பிடிச்சு இருக்கு பா... ரொம்ப ரொம்ப தேங்க்ஸ் பா... என்ன பேரு பா வைக்கலாம் இந்த மீனுக்கு...?

அந்த சிறுமிக்கு எப்படித் தெரியும் "ராணி" குதிச்சு விளையாடவில்லை, காதலனைவிட்டு பிரியும் சோகத்தில் துடிக்கிறாள் என்பது?

"ஒருவர் சிரிக்கவேண்டும் என்றால் இங்கே மற்றவர் அழவேண்டும். இதுவே உலகநியதி... அதற்கு அந்த "ராணி" மீன் மட்டும் விதிவிலக்கா என்ன"? "ஆணானாலும், பெண்ணானாலும் ஏன் மீனானாலும் இதுவே நியதி"!

அந்த தந்தையோ அவர் புதல்வியின் மழலைத் தமிழையும் அதன் பொருளையும் அன்பு கலந்து ரசிக்கின்றார்..

அவர் அவரது அன்பை வெ[illegible] விட்டார். ஆனால் "ராஜா" என்[illegible] அந்த மீன்...?

## சிரிப்பதற்கு...




"என்னப்பா இது? துணி மூட்டை மாறிடிச்சா? ஐந்து வேட்டிகள்தானே சலவைக்குப் போட்டேன்? இதுலே நாலு வேட்டியும், இரண்டு துண்டும் வச்சிருக்கியே?"

"இல்லே சேர்! உங்க ஒரு வேட்டிதான் இரண்டு துண்டாகிவிட்டது! அதிகப்படி உருப்படிக்கு நீங்க மேலதிகமாக பணம் தரவேண்டாம்!"

## அனைவருக்கும் இனிய நல் வாழ்த்துக்கள்

**யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் (வ - து)**

Reg- NO : J/57 OF 20.10.2003



T.P : 021 222 2347
Fax: 021 222 9797

C/3655

இல: 100, பிரதான வீதி, யாழ்ப்பாணம், த.பெ. இல : 41

## தொழிலாளர்களுக்கு

இனிய வாழ்த்துக்கள்

**யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையம்**

**Jaffna Regional Bus Companies Association**

Reg.NO : GA 2493

C/3659



இல: 191, 1ஆம் குறுக்குத்தெரு,
(வேம்படிச் சந்தி அருகாமை)
யாழ்ப்பாணம்.

T.P: 222 6924

## தொழிலாளர் தின இனிய வாழ்த்துக்கள்

**சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**



மின்சார நிலைய வீதி,
சுன்னாகம்.

## அனைத்துத் தொழிலாளர்களுக்கும் இனிய வாழ்த்துக்கள்

**தெல்லிப்பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**

(வரையறுக்கப்பட்டது)

பதிவு இலக்கம்: J/1591
பதிவுத் திகதி : 06 - 03 -1972



சமூக நலத் திட்டங்கள்
கல்வி அபிவிருத்தித் திட்டம்

பனைசார் பொருட்கள் உற்பத்தி
கிராமிய வங்கிச் சேவை

C/3660

புகையிரத நிலைய வீதி, மல்லாகம். தொ.பே: 021 321 1351

## உழைக்கும் கரங்களுக்கு எமது உளமார்ந்த வாழ்த்துக்கள்

**குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம்**

பதிவிலக்கம் :217

C/3657



இல: 30 சென் ஜோன்ஸ் மகா வித்தியாலய வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

## அனைவருக்கும் தொழிலாளர் தின வாழ்த்துக்கள்

**பனை அபிவிருத்திச் சபை**

**Palmyrah Development Board**

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு

பனை அபிவிருத்திச் சபையின் "கற்பகம்" நிலையங்களில் விற்பனைக்குள்ள பிரதான பனம் பொருள் உற்பத்திகள்

- பனம் கோடியல்
- பனம் பானம்
- பனங்களி
- பனங்கட்டி
- பனம்பாணி
- பனாட்டு
- பாணிப்பனாட்டு
- கல்லாக்காரம்
- பனங்காய்ப் பலகாரம்
- ஒடியல்
- ஒடியல்மா
- புழுக்கொடியல்
- புழுக்கொடியல் மா
- பாம்போஷா
- கைவினைப் பொருட்கள்
- தும்பு உற்பத்திப் பொருட்கள்
- பற்பசை
- மற்றும் ஏனைய பனை சார்ந்த உற்பத்திகள்




பனை சார்ந்த உற்பத்தி பொருட்கள் அதி உயர் தரத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்யப்படுகின்றன

C/3652



மேலதிக விபரங்களுக்கு:-

பனை அபிவிருத்திச் சபை
தலைமை அலுவலகம்:-
தேசிய வீடமைப்பு செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-2222034, தொலைநகல்: 021-2224154
மின்னஞ்சல்: slpdbho@yahoo.com, info@katpahacholai.com
இணையம்: www.katpahachcholai.com

நகர அலுவலகம்:-
இல.244, காலி வீதி, கொழும்பு - 04.
தொலைபேசி: 011-2586820, தொலைநகல்:011-2553697
மின்னஞ்சல்: slpalmyrah@yahoo.com

## தொழிலாளர்கள் அனைவருக்கும் இனிய நல்வாழ்த்துக்கள்

**யாழ்.மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கம்**

(தலைமையகம்)

Reg -NO: 8232

C/3654



40, முனீஸ்வரன் வீதி,
யாழ்ப்பாணம்.




பூவில் தேன் இருக்கும்
தீ இருக்குமா?
இருக்கிறது அவளை
தீண்டும் போதெல்லாம்
தீ பரவுகிறதே!

தீ - இனிய தீ
தீண்டும் போதெல்லாம்
தகிக்க வைக்கும் தீ
அவளே யாவையுமாக
இருக்கிறாள்!

அவளே பூவாகவும்
புயலாகவும்
அவளே தேனாகவும்
தீயாகவும்! .
ஜான்சி ராணியின்
படையணியில் தான்
அவன் அவளை சந்தித்தான்!

வெள்ளைக் கழுகுகளை
விரட்டும் விரதம் பூண்டவள்!
சொந்த மண்ணை பங்கமாக்கும்
அந்நிய வல்லூறுகளுக்கு
மண்ணின் வீரத்தை
பெண்களும்
புரியவைப்போம்
என்று புறப்பட்டவள்!


அந்த வீரநங்கையைத்தான்
அவன் காதலித்தான்!
"உன்னை எனக்கு
பிடித்திருக்கிறது?"
என்றான் கவிஞன்!

"உங்கள் கவிதைகளை
படித்திருக்கிறேன்!
இப்போதுதானே
உங்களை படிக்கிறேன்!
என்றாள் அவள்.

"அவசரக் காதல் நமக்கு
வேண்டாம்! நண்பர்களாக
இருப்போம் - நமக்குள்
ஒத்து வந்தால் நல்ல
காதலர்களாவோம்"

அவள் சொன்னதை
கவிஞனும் ஏற்றான்!
நிதானமாக காதல்
மலர்ந்தது!
ஜான்சி ராணி மலர்
தூவி வாழ்த்த மணமக்கள்
மாலை மாற்றிக்
கொண்டனர்!
"பெண் என்றால் என்ன?"
கவிஞனுக்கும் பாதிதான்
தெரியும். ஆண் என்றால்
என்ன? அவளுக்கும்
பாதிதான் தெரியும்.

தொட்டபோது சுட்டதும்
வியந்தான் தீக்குள்
விழுந்தது போல்
தேகம் மாறியதே!
தீண்டும் போதெல்லாம்



## அப்போது கூடாது!

தீயை தூண்டுகிறதே!
என்று தித்தித்தான்!

முத்தமிட்டபோது மூடிய
விழிகளை அவளும்
திறக்கவில்லை! எதையும்
தடுக்க விரும்பாதபோது
கண்களை மூடிக்கொள்வது
காம தந்திரம்.

திறந்து கொண்டு அவனது
காமத்தில் மெய் மறந்து
போனாள் அவள்!

இதுதான் காமமா? நெஞ்சு
படபடக்க நினைவு தடுமாற
மூச்சு முட்டுகிறதே இதுதான்
காமமா?

கண்களை திறக்காது
மனதுக்குள் கேள்விக்
கணை தொடுத்தாள்.

அவனது மூச்சு அவள்
கழுத்தை சுட்டது
சுட்ட இடத்தில் சுகமாக
இருந்தது அவளுக்குள்
ஒரு குறும்பான ஆசை
உதித்தது
பிடிக்காது போல
ஊடல் கொண்டு
இவரை ஆட்டிப்
படைக்கலாமா? - எட்ட
நிற்கவைத்து ஏங்க
வைக்கலாமா?
நினைத்தபோதே
அவளை நிறுத்தியது
திருக்குறள் பாடல் ஒன்று.

பனையளவாய்
ஆசையிருள் போது
சிறு தினையளவுகூட
ஊடல் உள்வரக்கூடாது
கூடல் முடிந்ததும்
ஊடல் கொள்ளலாம்
ஊடல் முடிந்ததும்
கூடல் கொள்ளலாம்!
ஊடலின் போது
கூடல் கூடாது
சிவ பூசைக்குள்
கரடி புகவிடலாமோ
கூடாது கூடாது
அவளுக்குப் புரிந்தது
மேலும் புரியாதவை
கூடலில் புரிந்தது.

**"தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும் காமம் நிறைய வரின்"** அதிகாரம் : 129, குறள் : 1281

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## சவால்களுக்கு மத்தியில்....

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் கல்வி, கட்டமைப்பு; உட்கட்டமைப்பு, உள்ளிட்ட அனைத்து துறைகளினதும் அபிவிருத்திகள் எதிர்கால கிழக்கின் கல்விப் பொருளாதார மேம்பாடுகளில் பெரும்பங்காற்றும் என்றால் அது குறைவில்லாத வார்த்தையாகும். ஒரு சமூகத்தின் மேம்பாட்டுக்கு கல்வித்துறை எவ்வளவுக்குப் பங்காற்றுகிறது என்பதற்கு அப்பிரதேசத்தின் பல்கலைக்கழகம் பதில் சொல்வதாகவே இருக்கவேண்டும்.

கடந்த 30 வருட கால யுத்தத்தின் பிடியில் சிக்கித் தவித்த வடக்குக் கிழக்கின் ஒரு பகுதியான கிழக்கின் முன்னேற்றத்தின் எடுத்துக்காட்டாக எதிர்காலத்தின் அபிவிருத்திகளும் மேம்பாடுகளுமே சான்றாக அமைய வேண்டும்.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கு பல்வேறு பங்களிப்பினை விரிவுரையாளர்கள் வழங்கவேண்டும். ஏனெனில், கல்வியாளர்கள் சிறப்பான சிந்தனைகளை உருவாக்கக் கூடியவர்கள்.

பௌதீக அபிவிருத்தி மற்றும் உள்ளக அபிவிருத்தி பலவற்றினை அவர்களால் நிகழ்த்தமுடியும். ஆனாலும் முரண்பாடுகளை வளர்த்துக் கொண்டு செயற்படுவதில் எந்தப் பலனும் இல்லை.

எது எவ்வாறாக இருந்தாலும், ஒரு சிலர் பல குழப்பங்களை ஏற்படுத்திவருகின்ற நிலையிலும் அவற்றினையெல்லாம் தாண்டி குறிப்பாக சொல்லக்கூடிய அபிவிருத்திகள் அனைத்து வகைகளிலும் கிழக்கு பல்கலைக்கழகத்தில் நடைபெற்றே வருகின்றன.

புதிய உபவேந்தர் கடமையேற்ற காலம் தொடக்கம் விரிவுரையாளர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு 35பேருக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. கிழக்கு பல்கலைக்கழகத்தின் நான்கு வளாகங்களில் 17 பட்டப்படிப்புகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இதற்கு மேலதிகமாக புதிய துறைகள் ஏழு ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மிகவும் நீண்டகாலம் பின்தங்கிய நிலையில் இருந்த பல்கலைக்கழகம் கட்டியெழுப்பப்பட்டு வருகிறது.

இவற்றினைத் தடுத்து அவற்றின் மேம்பாட்டுக்கு தடைபோடுவது என்பது பிழையான விடயம் என்பது உயர் கல்வியமைச்சின் முடிவாக இருக்கிறது. இந்தவகையில் கடந்த வாரத்தில் நடைபெற்ற பேச்சுக்களின் அடிப்படையில் தீர்வுகள் காணப்பட்டுள்ளன. இவற்றின் வழியாக சட்ட நடவடிக்கைகளுக்காக நீதிமன்றம் சென்றவர்கள் சிலர் வழக்குகளை வாபஸ் பெறுவார்கள் என்றும் அதன் அடிப்படையில் தீர்வுகள் காணப்படும் என்றும் அறியமுடிகிறது.

இவற்றின்மூலம் பிரச்சினைகள் இருப்பதாக வெளியில் வரத்தொடங்கிய கிழக்குப் பல்கலைக்கழகத்தின் குழப்பங்கள் சார் பிரச்சினைகள் முடிவுக்கு வந்துள்ளதாக எண்ணிக்கொள்ளலாம்.

கிழக்கின் எதிர்கால அபிவிருத்தி, மேம்பாடுகளுக்கு சான்றாகப்போகும் இந்தக் குறிப்பிட்ட காலங்கள் மிகச் சிறப்பானவையாக அமையவேண்டும் என்பதே அனைவரதும் நோக்கமாகும் என்றவகையில் ஜனாதிபதியின் அண்மைய விஜயம் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வாக அமைந்ததாகக் கொள்ளுவோம்.




**சிந்தியா! பொதுபல சேனாவிற்கு அரச ஆதரவு இருப்பதால் அவர்களை எவராலும் அசைக்க முடியவில்லை யென தகவல்கள் வெளியாகிறதே?**

**க.வரதராஜா, கொழும்பு –06.**

நீங்கள் இப்படிக் கூறினாலும், அவர்கள் அரசுக்கும், ஜனாதிபதிக்கும் சவால்விடுகின்றார்களே. அதுவெல்லாம் செட்டப் கேம் என்று கூறுகின்றீர்களா? எனக்கென்னவோ, பொதுபல சேனாவினர் போன்றவர்களின் பயணம் இதுவரை இருந்த பாதையிலிருந்து இன்னொரு பாதைக்கு திரும்பியிருக்கின்றது போல் தெரிகின்றது. அந்தப் பாதை இதுவரை இருந்ததைப் போல் சுகமானதாக இருக்காது என்றே நம்புகின்றேன்.

இன்னொரு நண்பர் கூறினார். மத விவகாரங்களுக்கான புதிய பொலிஸ் பிரிவு என்பது பொதுபல சேனாதானா? என்று. எனக்கு இவற்றில் குழப்பமாகவே உள்ளது.

**சிந்தியா! பொருளாதாரத் தடை இலங்கைக்கு ஏற்படும் நிலை வருமா?**

**ஜெ.அனுராஜ், மாத்தறை.**

பொருளாதாரத் தடை வேண்டும் என்றும் இலங்கை அரசை சர்வதேச விசாரணைக்குக் கொண்டு செல்வோம் என்று பிரித்தானிய பிரதமர் டேவிட் கெமரூன் கூறினார். கடந்த வாரம் பிரிட்டன் பிரதிநிதி ஒருவர் இலங்கைமீது பொருளாதாரத் தடைக்கு வாய்ப்பில்லை. பிரிட்டன் இலங்கையுடன் நெருக்கமான பொருளாதார உறவுகளைக் கொண்டுள்ளது. அவற்றை மேலும் பலப்படுத்துவோம் என்று கூறியிருந்தார். இவற்றைப் பார்க்கும்போது, உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேற வாய்ப்பில்லை.

**சிந்தியா! போலி அகதிகளை அவுஸ்ரேலியாலிவிருந்து அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுகிறதாமே...?**

**என்.சங்கீதா, வாகரை.**

நமது பாதுகாப்புச் செயலாளர் தற்போது அவுஸ்திரேலியாவில் தங்கியிருந்து இத்தகைய வேலைத்திட்டத்தை திட்டமிடுவதாக தெரியவ்ருகின்றது. யுத்தத்துக்குப் பிறகு நாட்டைவிட்டுப் போனவர்கள் அத்தனைபேரும் போலி அகதிகள் என்பதே இதன் பொருளாகிறது. இவர்களில் போலி அகதிகள் என்ற பதத்துக்குப் பின்னாலுள்ள நோக்கம் புரியவில்லை. புனர்வாழ்வுக்கு உட்படாத புலிகளை குறிவைக்கும் திட்டமாகவே இது இருக்கலாம் என்று புலம் பெயர் ஊடகங்கள் கூறுகின்றன.

**சிந்தியா! நல்லதைச் சொன்னால் கசப்பாக இருக்கிறதே...?**

**அ.தாசன், நல்லூர்.**

யாருக்கு?

**மகிழ்ச்சியின் விலை என்ன சிந்தியா?**

**பி.அஷ்மிதா, வவுனியா.**

கண்ணீர் என்கின்றார்கள் சிலர். மௌனம் என்கின்றார்கள் வேறு சிலர். எனக்கென்னவோ இரண்டும் என்றே தோன்றுகின்றது.

**சிந்தியா!லண்டன் குட்டி இளவரசர் ஜோர்ச் ஒரு கலக்கு கலக்குகிறாரே..?**

**ஆர்.பிருந்திகா, நுவரெலியா.**

ஆம். அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து பயணங்களில் குட்டி இளவரசர் மிருகக் காட்சி சாலையில் மிருகங்களையும், பறவைகளையும் பார்த்து பரவசமடைந்ததையும், பராமரிப்பு இல்லத்திலுள்ள குழந்தைகளுடன் மகிழ்ந்து விளையாடியதையும் செய்திகளாகப் படிக்கும்போதும், பார்க்கும்போது நாமும் மகிழ்ந்தோம்.

**சிந்தியாவுக்கு பிடித்த நடிகை யார்?**

**மு.அனுசா, கச்சாய்.**

இந்தக் கேள்விக்கு பதிலை கறுப்பு, வெள்ளை சினிமாக் காலத்திலிருந்து தேட வேண்டும். ஆனால் மனோரம்மாவுக்குப் பிறகு அந்த இடைவெளி நிரப்பப்படாது என்றே தோன்றுகின்றது. அழகாக இருப்பது வேறு, நல்ல நடிகையாக இருப்பது வேறு. நயன்தாராவா, தமன்னாவா, அனுஷ்காவா, காஜல் அகர்வாலா, அல்லது இவர்கள் எல்லோருமா? என்று எதிர்பார்த்திருந்தால் எனது பதில் திருப்தியாக இருக்காது.

**யாரோ ஒருவர் என் கனவில் வந்து என்னைக் குழப்புகிறாரே..?**

**எம்.லொசியா, மன்னார்.**

பிரேமானந்தா, நித்தியானந்தா?, தன்மானத்தமிழர்களின் தேசியத் தலைவர் சம்மந்தன், தமிழீழத்தின் வெளிநாட்டு மந்திரி சுமந்திரன், வீர வேங்கை அனந்தி, கனவில் வருவது இவர்களில் யாராவது இருக்குமா?

**சிந்தியா! மீண்டும் நம்ம வைகைப் புயல் வடிவேலுவின் வருகை அவருக்கு வெற்றிவாகை சூடுமா?**

**சௌ.கபிலன், முள்ளியவளை.**

அப்படித்தான் எதிர்பார்க்கப்படுகிறது. இப்போதுகூட வடிவேலுவின் நகைச் சுவைகளை பார்த்துச் சிரிப்பதே பலருக்கு பிடித்த பொழுதுபோக்காக உள்ளது.

தற்போது பல நகைச்சுவை நடிகர்கள் வந்தபோதிலும் வடிவேலுக்கு நிகராக முடியவில்லை. அந்த எதிர்பார்ப்புகள், வடிவேலின்மீது எப்போதும் உண்டு.

தெனாலிராமனோ, 22ஆம் புலிகேசியைப் போல வெற்றி வலம்வருவார் என்று எதிர்பார்க்கலாம்.


ஸ்ரீ ராம ஜெயம்



ஸ்ரீ துர்க்கை தாசன்,
தேச பந்து, கலாநிதி,
பேராசிரியர்,
P.K.சாமி JP ஐயா

## மலையாள மாந்திரிக சக்தி

இன்று பெய்கின்ற மழையில் பூக்கின்ற பூக்கள் நிரந்தரம் அல்ல. காலம் காலமாக மணம் வீசும் மல்லிகை பூ மணம் போல 48 வருட காலமாக மாந்திரிக துறையில் சாதிக்க முடியாத விசயங்களைக் கூட சாதிக்கும் உச்சாட பீடம் என்றால் 48 வருட காலமாக தொன்று தொட்டு மலையாள மாந்திரிக துறையிலும் ஜோதிட துறையிலும் செம்மையாக செயல்படும் நிறுவனத்தில் உங்கள் குறை நிறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

1. ஓடிப் போனவர் தேடி வர வேண்டுமா?
2. தொடர்ந்து கணவன் மனைவி பிணக்கா?
3. காதலன் காதலி பிணக்கு தீர வேண்டுமா?
4. கல்யாணம் கை கூட வேண்டுமா?
5. கல்வியில் சித்தி பெற வேண்டுமா?
6. இழந்ததை ஈடு கட்ட வேண்டுமா?
7. குடி போதையை நிவர்த்தி வேண்டுமா?
8. தீராத நோய்க்கு பரிகாரம் தேவையா?
9. இழந்ததை மீட்க வேண்டுமா?
10. ஆண்மை குறைபாடுகளா?
11. தெட்டத் தெளிவான ஜாதகக் குறிப்புக்களுக்கு...

**MALAYALA MANTHIRIKA UCHCHADA PEEDAM**

23, Mayfield Road, Kotahena, Colombo - 13. Tel : 011 2342463/4, 011 2470615
Fax : 011 2344831 E-mail : drpksamy@sltnet.lk
நுவெரலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா.

# காதிலை பூ கந்தசாமி

"நான் சொல்வதெல்லாம் பொய் பொய்யைத் தவிர வேறொன்று மில்லை."

**வணக்கமுங்கோ. நாட்டில ரெண்டு விசயங்கள் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டு இருக்குதுங்கோ. ஒண்டு பாலியல் வன்முறைச் சம்பவம். மற்றையது கொள்ளைகள்.**

பாலியல் சம்பவம் எண்டால் பாருங்கோ, பாடசாலை சிறுமிகள் மீதான சம்பவங்கள் அதிகரித்து வருகுதுங்கோ. பொம்பிளைப் பிள்ளையளை யாரை நம்பியும் பாதுகாப்பாக விட்டிட்டுப் போக முடியாத கெடு காலமாகிட்டுதுங்கோ. அதிலையும் ஆசிரியர்மார்களாலை மாணவிகள் கெடுக்கப்படுகின்ற சம்பவங்களை நினைச்சால் பிள்ளையளை பாடசாலைக்கும், தனியார் வகுப்புக் களுக்கும் அனுப்புறதே பெரும் பிரச்சினையாக மாறியிருக்குதுங்கோ.

வேலியே பயிரை மேயிர கதை எண்டுவினமே. அதுதானுங்கோ இப்ப நடந்துகொண்டு இருக்குது. சட்டம் இருந்தும், காவல்துறை இருந்தும் பொம்பிளைப்பிள்ளையளின்ர பாதுகாப்பு மீதான அச்சம் தீரவில்லையுங்கோ. ஆகையாலை, பெற்றோர்கள் உந்த விசயத்தில கொஞ்சம் கூடுதல் விழிப்பாகவே இருப்பதுதானுங்கோ, எனக்கெண்டால் நல்லதெண்டு படுகுது.

அடுத்ததாகப் பாருங்கோ, கொள்ளைகள். நகைக்கடை, வங்கிகள் எண்டு தெரிவு செய்து கொள்ளை நடக்குதுங்கோ. நீர் கொழும்பில தொடர்ச்சியாக நடந்த கொள்ளைகளாலை அங்கு நகைக்கடை நடத்தும் தமிழ் வர்த்தகர்கள் தொழிலையே கைவிடும் எண்ணத்தோடை இருக்கினமாமுங்கோ.

வேலை இல்லாப் பிரச்சனை, வறுமை, படைகளில் இருந்து ஓடிவந்ததுகள், போதைப்பொருள் பாவனைக்கு அடிமை யானதுகள், கூலிக்கு மாரடிப்பவர்கள், அரசியல்வாதிகளின் அனுசரணை உடையவர்கள் என்போருக்கு ஒரே இரவில் பெருந்தொகைப் பணம் தேவை எண்டதாலை குறுக்குவழியைத் தானுங்கோ' தெரிவுசெய்யினம். ...கலில சண்டியர்களும், சில அரசியல்வாதிகளும் வந்து அல்லது கையாட்களை அனுப்பி தண்டிறது ஒரு தொல்லையெண்டால், உந்த மாதிரி கொள்ளையர்களின் கைவரிசையும், தாங்க முடியல்லையுங்கோ.

யாழ்ப்பாணத்தில பெண்களுக்கு தொலைபேசித் தொல்லைகள் கொடுக்கும் காடையர் மன்மதராஜாக்களின் தொல்லை அதிகரித்துள்ளதாமுங்கோ. திருமணமானவர், பிள்ளைகளின் தாய், தனித்து வாழும் பெண்கள், விதவைகள் என்று யாரையும் விட்டுவைக்காமல் எப்படியோ தொலை பேசி இலக்கங்களை எடுத்துக்கொண்டு சகிக்கமுடியாத வார்த்தைப் பிரயோகங்களில் தொல்லை கொடுக்கினமாமுங்கோ.

பாவம் சில பெண்கள் உந்தத் தொல்லையை வெளியால சொன்னால் குடும்பப்பிரச்சனையாகிப்போடும் எண்டும், தொல்லைகள் வேறொரு வடிவெடுக்கும் எண்டு நிம்மதி இழந்து நிக்கினமாமுங்கோ.

இரண்டு வாரத்துக்கு முன்னம் யாழ். பொலிஸ் தகவல் ஒன்று படித்து விறைத்துப் போனேணுங்கோ. ஒரு வாரத்தில யபழ்ப்பாணத்தில இருநூறு குற்றவாளிகள் கைதுசெய்யப்பட்டதாக அந்த செய்து இருந்ததுங்கோ.

அப்புடியெண்டால் பாருங்கோ, முழு நாட்டிலையும் ஒரு நாளைக்கு சுமார் இருபதுக்கு மேற்பட்ட குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுக் கொண்டிருக்கினமுங்கோ.

இலங்கையை ஆசியாவின் ஆச்சரிய மாக்குவேன் என்று ஜனாதிபதி சொன்னதை உந்தப் பிரகிருதிகள் பிழையாக விளங்கிக் கொண்டுட்டாங்கள் போலை இருக்குதுங்கோ.

யுத்தத்துக்கு அடியில அமிழ்ந்துபோய் பல சமாச்சாரங்கள் இருந்திருக்குது எண்டது இப்பதான் தெரியுதுங்கோ. இலங்கையில அரசியல் பிரச்சனையையும், உந்த மதவாத தீவிரவாதிகளின்ர சண்டித்தனங்களையும் தவிர்த்துப் பார்த்தால், சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் வன்முறைகள், கொள்ளைகள், போதைப்பொருள் பாவனை, கடத்தல் என்பனதானுங்கோ தலைதூக்கி நிக்குதுங்கோ.

நாடு அபிவிருத்திடைந்து புதுப் பொலிவுடன் வளர்ச்சி பெறுகின்றபோது, நாம் மனிதத்துவத்தையும், இன ஒற்றுமையையும், கலாசாரத்தையும், ஒழுக்கத்தையும் இழந்து நிற்போமோ? என்று எண்ணத்தோணுதுங்கோ.

அது கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம் எண்டுவினமே. அதுபோலை இருக்குமோ தெரியல்லையுங்கோ. ஆகையாலை தான் சொல்லுறேனுங்கோ, அபிவிருத்தி, அபிவிருத்தி எண்டு மட்டும் இருந்து போடாமல், இனங்களுக்கிடையே விரிசலை உண்டு பண்ணும் மதவாத தீவிரவாதிகளின்ர நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவும், பாலியல் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம், போதைப்பொருள் பாவனை போன்ற விடயங்களில் அக்கறையோடும், அர்ப்பணிப்போடும், சட்டம், ஒழுங்குகளை அமுல்படுத்தும் பொறுப்பிலுள்ளோர் தமது சேவையை செய்வது கண்காணிக்கப்பட வேணுமுங்கோ.

வறுமையையும், பட்டினியையும் எதிர் கொள்வதற்கு ஏற்ற வேலைத்திட்டம் முன்னுரிமை அடிப்படையில் மக்களுக்கு வழங்கப்படவேணுமுங்கோ. இல்லாட்டில் நாடு வளர்ச்சி கண்டிருக்கும் மக்கள் பஞ்சம் பரதேசிகளாக இருப்பார்கள் என்று கவிஞர் ஒருவர் பாடியதுபோல் ஆகிவிடுமுங்கோ.

இதை நான் சொன்னால் உளறுறன் எண்டு சொல்லி என்ர வாயை அடைச்சுப் போடுவியள். அதாலை நான் ஒண்டும் சொல்லமாட்டேனுங்கோவ்.

**"யாவும் கலப்படமற்ற கற்பனை"**



## சத்ரபதி சிவாஜி

சிவாஜியின் வாழ்க்கை முழுவதுமே வீரசாகசங்கள் நிறைந்தவை. சிவாஜியின் சாகசச் செயல்களை விளக்கும் கதை கள் ஏராளம். அவற்றில் அப்ஸல்கான் என்ற பீஜப்பூர் சுல்தானின் படைத் தலைவனைக் கொன்றது. ஔரங்கசீப்பின் தென்னகத்து கவர்னரான(சுபேதார்) சாயிஸ்தாகான் உயிர்தப்பி ஓடியது. ஆக்ராக் கோட்டையில் ஔரங்கசீப்பின் கைதியாகி சிறையிலிருந்த போது சாமர்த்தியமாக ஔரங்கசீப்பின் இரும்புப் பிடியிலிருந்து தப்பி வெளியேறியது ஆகியவை, பாரத வரலாற்றில் சத்ரபதி சிவாஜியின் சரித்திரத்தில் மிகப் பிரபலமானதாகும்.

இவற்றை அறியாதவர்கள் இருக்கமுடியாது. சிவாஜியை ஆங்கிலேயர்கள் 'கொள்ளைக்காரன்' என்றே வர்ணிக்கிறார்கள். படைவீரர்களான மாவலி இனத்தவர் முதலில் கொள்ளையர்களாக இருந்து பின்பு திருந்தி போர்வீரரானவர்கள். இதனாலும் சிவாஜி அரச குலத்தவரில்லாததினாலும் அவரது அதிரடிப் போர்முறைகளும் அவரைக் கொள்ளைக்காரனாக அந்நியர்களை நினைக்கச் செய்திருக்கலாம். ஆனால் நம் பாரத மக்களுக்கு, அந்த மகராஸ்டிர ஜீவன் மாமன்னரே! இந்து ராஜியத்தின் பாதுகாவலன். அப்ஜல்கான் கொலையுண்ட பின் மராட்டியப் படைகள் பீஜப்பூர் படைகள்மீது பாய்ந்தன. மூன்று மணிநேரப் போரில் பீஜப்பூர் படையின் மூவாயிரம் போர்வீரர்கள் உயிரிழந்தனர்.

தொடரும்...

# இந்தவாரம் உங்கள் பலன்

(01.05.2014 தொடக்கம் 07.05.2014 வரை)

### மேடம்

அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் மிகவும் கவனமாகப் பேசிப்பழகுதல் நல்லதாகும். ஒரு சிலருக்கு உற்றார் மற்றும் உறவினர்களால் எதிர்பாராத ஆதாயங்களை அடைவீர்கள். படித்த வேலை இல்லாதவர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்க வாய்ப்பு உள்ள காலமாகும். விவசாயம் செய்பவர்களுக்குப் புதிய முறை விவசாயங்களின் மூலமாக நல்ல இலாபம் பெறுவார்கள். புதிய ஆடை மற்றும் அணிகலன்கள் வாங்குவதைச் சற்றுத் தள்ளிப்போடுதல் நல்லது. திருட்டுப்போன பொருட்கள் நண்பர்களின் உதவி யால் திரும்பக் கிடைக்கும். காதல் விசயங்களில் எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்துசேரும். மாணவர்கள் கல்வியில் சிறந்துவிளங்குவர். காதல் சம்பந்தமாக நல்ல சேதிகள் வந்துசேரும். விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும்.

### இடபம்

மனத்தைரியமுடன் எடுத்த காரியத்தை வெற்றிகரமாகச் செய்துமுடிக்க வாய்ப்பு உள்ள காலமாகும். நண்பர்களால் வீண் பிரச்சினைகள் வர இருப்பதால் கவனமுடன் பேசிப் பழகுதல் நல்லதாகும். தாயின் உடல்நிலையில் இருந்துவந்துள்ள பாதிப்புகள் குறைந்து மனநிம்மதி அடைவீர்கள். பொருளாதாரத்தில் சற்று முன்னேற்றமான சூழ்நிலை காணப்படும். காதல் சம்பந்தமான விசயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லதாகும். தாயின் உடல்நிலையில் வெகுநாட்களாக இருந்துவந்துள்ள உடல்நிலை பாதிப்புகள் குறைந்து காணப்படும். கணவன் - மனைவிக்குள் காரணமற்ற மனக்கசப்புகள் வந்து போகும். பிரிந்துபோன உறவுகளுடன் திரும்பவும் தொடர்புகள் ஏற்படக்கூடிய காலமாகும்.

### மிதுனம்

வீடு, வாகனங்களைப் பழுதுபார்ப்பதன் மூலமாகப் பொருட்செலவுகள் உண்டாக லாம். உடம்பில் வாயு மற்றும் வயிறு போன்ற உபாதைகள் வந்துபோகலாம். தீராத நாட்பட்ட நோய்கள் தீர்வதற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள். ஒரு சிலருக்கு உத்தியோகத்தில் வீண் பிரச்சினைகள் உருவாகி பணி இடமாற்றம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. தீராத நாட்பட்ட நோய்கள் தீருவதற்காக புதிய மருத்துவர்களை நாடுவது நல்லது. காரண மற்ற மனச்சஞ்சலங்கள் வர இருப்பதால் புதிய நண்பர்களின் சேர்க்கையைத் தவிர்ப்பது உகந்த தாகும். புதிய கடன்வாங்கி பழைய கடன்கள் அடைப்பதற்காக முயற்சிப்பீர்கள். பொருளாதாரத்தில் இருந்துவந்துள்ள நெருக்கடிகள் தீர்ந்து மனநிம்மதி அடைவீர்கள்.

### கடகம்

சகோதர சகோதரிகளின் தடைப் பட்ட திருமண காரியங்கள் மற்றவர்களின் உதவியால் நிறைவேறும் காலமா- கும். புதிய கடன்வாங்கிப் பழைய கடன்களை அடைப்பீர்கள். வெளிநாடு சென்றுவருதல் போன்ற முயற்சிகளில் வெகுகாலமாக எதிர்பார்த்து இருந்த நல்ல தகவல்கள் வந்துசேரும். புதிய வீடுகள் மற்றும் வாகனங்களை வாங்குவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். உற்றார் மற்றும் உறவினர்களின் திடீர்வரவால் மனமகிழ்ச்சியும் பொருள்வரவும் உண்டாகும். ஒரு சிலருக்கு பணிசெய்யும் இடங்கள் மற்றும் வீடுகளை இடமாற்றம் செய்வீர்கள். பொதுநலத் தொண்டு களில் மிகவும் பிரியமுடன் ஈடுபட்டு நற்பெயர் புகழுடைய வாய்ப்பு உள்ளது.

### சிங்கம்

நீண்டகாலமாக பிள்ளை இல்லாத வர்களுக்கு இறையருளால் புத்திர பாக்கி யம் உண்டாகும். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் கவனமாகப் பேசிப்பழகுவதால் வர இருக்கும் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம். உத்தியோகம் இல்லாதவர்களுக்கு புதிய வேலைவாய்ப்பு கிடைக்கும். தந்தையின் உடல்நிலையில் ஏற்பட்டு இருந்த பாதிப்புகள் சற்றுக்குறைவதன் மூலம் மருத்துவச் செலவு- கள் குறைய வாய்ப்பு உள்ளது. வீடு மற்றும் தொழிற்சாலைகளை இடமாற்றம் செய்வதற்கு வாய்ப்பு உள்ளது. ஒரு சிலருக்கு வீடு மற்றும் பணி இடமாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான முயற்சிகளைச் சற்று தள்ளிப்போடவும்.

### கன்னி

இரும்பு இயந்திரம் இரசாயன சம்பந்தமான தொழில் செய்வோர்கள். பெற்றோல் டீசல் நிலக்கரி போன்ற எரிபொருட் களின் வியாபாரிகள். பழைய பொருட்களை விற்பனை செய்வோர்கள், பலசரக்கு வியாபாரிகள். வட்டித்தொழில் செய்வோர்கள். தரகு மற்றும் ஏஜென்சி குத்தகை போன்ற தொழில்களைச் செய்வோர்கள் ஆகியோர்கள் இலாபம் அடைவார்கள். உடம்பில் கண். காது தலை போன்ற பாகங்களில் சிற்சில உபாதைகள் வருவதன் மூலம் மருத்துவச் செலவுகள் ஏற்படலாம். குடும்பச் சொத்துக்களில் வெகுகாலமாக இருந்துவந்துள்ள பிரச்சினைகள் பெரிய மனிதர்களின் தலை யிடுதலால் திரும்பக் கிடைக்கும். புதிய ஆடை அணிகலன்களை வாங்குவதற்கான முயற்சிகளில் சற்று பின்னடைவுகள் உண்டாகும்.

### துலாம்

விவசாயம் செய்பவர்களுக்கு சுமா ரான நற்பலனையே செய்யும். மற்ற வர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட் களைக் கடன்கொடுத்து ஏமாற்றம் அடைய வேண்டாம். மஹான்களின் எதிர்பாராத தரிசனங்களால் மனநிம்மதி அடைவதோடு புதிய பெரிய மனிதர்களின் தொடர்புகள் ஏற்படும். உடல்நிலையில் வாயு மற்றும் வாத சம்பந்தமான உபாதைகள் வந்துபோகும். தந்தை. மகன் உறவு- களில் இருந்துவந்துள்ள பிரச்சினைகள் குறைந்த ஒற்றுமை உண்டாகும். புதிய ஆடைகள் மற்றும் அணிகலன்களை வாங்குவதற்கு வாய்ப்பு உள்ள காலமாகும். புதிய நண்பர்களின் சேர்க்கையை தவிர்த்தல் நல்லது. பழுதுபட்ட பழைய வீடு, மற்றும் வாகனங்களைப் பழுது பார்ப்பதற்காக பொருட்செலவுகள் வந்துசேரும்.

### விருச்சிகம்

பழைய வாகனங்களை விற்றுப் புதிய வாகனம் வாங்குவதற்கான முயற்சிகளில் சற்று பின்னடைவுகள் ஏற்பட்டு விலகும். காதல் சம்பந்தமான விசயங்களில் எதிர்பார்த்து இருந்த நல்ல செய்திகள் வந்துசேரும். தன்னிடம் பணிசெய்யும் அடிமையாட்களால் பிரச்சினைகளும் பொருள் இழப்பும் வர இருப்பதால் கவனம் தேவை. திடீர் அதிர்ஷ்டமாகிய ரேஸ் லாட்டரி மற்றும் சேர் மார்க்கெட் தொழிலில் ஈடுபடுவோர்களுக்கு நல்ல பலன்கள் கிடைக்கும். நீண்டநாட்களாக வராத கடன்கொடுத்து இருந்த பணம் பொருட்கள் திரும்பக் கை வந்துசேரும். மாணவர்கள் கல்வியில் பரிசு மற்றும் பாராட்டுக்களைப் பெறுவதோடு அரசு உதவித்தொகைகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. தரகு மற்றும் கமிசன் தொழில் செய்வோர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் செயற்படுவது நல்லதாகும். பெண்களால் தென்திசையில் இருந்து சில நல்ல செய்திகள் கிடைக்கும்.

### தனுசு

ஒரு சிலருக்குப் புதிய வீடு மாற்றம் ஏற்படலாம். விட்டுப்போன பழைய உறவு- களில் இருந்துவந்த மனக்கசப்புகள் தீர்ந்து நல்ல சுழ்நிலை உருவாகும். நண்பர்களின் வீட்டு சுப காரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நீண்ட தூரப் பயணங்களை மேற்கொண்டு மனமகிழ்ச்சி அடைவீர்கள். காதல் சம்பந்தமான விசயங்களில் உறவினர்களின் மூலமான நல்ல செய்திகள் வந்துசேரும். உத்தியோகத் துறையினர்களுக்கு மேலதிகாரிகளிடம் மனக்கசப்புகள் ஏற்பட்டு பணி இடமாற்றம் ஏற்பட இருப்தால் முன்கோபத்தை தவிர்த்துப் பணியாற்றுதல் சிறந்ததாகும். பெண்களால் தென்திசையில் இருந்து சில நல்ல செய்திகள் கிடைக்கும்.

### மகரம்

குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்துவருவதன் மூலம் மனதிருப்தி அடைவீர்கள். உற்றார் மற்றும் உறவினர்களின் திடீர் வரவுகளால் எதிர் பாராத பொருட்செலவுகளும் மனநிம்மதிக் குறைவுகள் ஏற்படலாம். விவசாயம் செய்பவர்களுக்கு சுமாரான பலன்கள் கிடைக்கும் காலமாகும். வேண்டாத விசயங்களில் தலையிட்டு வீண் சிக்கலில் மாட்டிக் கொள்ளவேண்டாம். பொருளா தாரத்தில் இருந்துவந்துள்ள நெருக்கடிகள் மாறி சற்றுமுன்னேற்றமான சுழ்நிலைகள் காணப் படும். வடதிசையில் இருந்து நற்செய்திகள் வந்துசேரும். விபரீதமான எண்ணங்களை கை விட்டுக் காரியத்தில் கவனமாய் இருப்பது நல்லது. பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### கும்பம்

காதல் சம்பந்தமான விசயங்களில் மிகுந்த கவனமுடன் நடந்துகொள்வது நல்லது. திருமண சம்பந்தமான முயற்சிகளை இன்னும் சற்றுக்கால தாமதமாகவே நடத்துவது சிறந்ததாகும். மாணவர்களுக்கு புதிய படிப்புகள் சம்பந்தமாக நல்ல தகவல்கள் கிடைக்கும். உடல்நிலையில் காய்ச்சல் மற்றும் உஷ்ண சம்பந்தமான உபாதைகள் வந்துபோகும். கண். காதுகளில் கவனம்தேவை. தடைப்பட்டுப் போன சகோதர சகோதரிகளின் சுபகாரிய சம்பந்தமாக நல்ல தகவல்கள் வந்துசேரும். வராத பணம் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. புதிய வீடு மற்றும் நிலபுலன்களை வாங்குவதற்காகப் புதிய கடன்களை வாங்குவீர்கள். புதிய வாகனங்கள் வாங்குவதற்கான முயற்சிகளை சற்று தள்ளிப்போடுதல் நல்லது.

### மீனம்

நீண்ட காலமாக திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமண காரியங்கள் நிறைவேறும். விடுபட்டுப்போன பழைய வழக்குகள் மீண்டும் தொடரவாய்ப்பு உள்ளது. அரசுத்துறை சரர்ந்த உயர்பதவிகள் வகிப்பவர்கள் ஜவுளி நூல் போன்ற பொருட்களை ஏற்றுமதி. இறக்குமதி செய்வோர்கள். மருந்துப் பொருள்களின் வியாபாரி கள். மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மற்றும் இவைகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் ஆகியோர்கள் நற்பலன்களை அடைவார்கள். தேவையற்ற மனச்சஞ்சலங்களைத் தவிர்க்கவும். தாயின் உடல் நிலையில் சில பாதிப்புகள் வரக்கூடுமாகையால் கவனமுடன் இருக்கவும். குலதெய்வ வழிபாடு- களை செய்துவருவது நல்லது. உற்றார் மற்றும் உறவினர்களால் எந்தவிதமான ஆதாயமும் இல்லை.




## ஒற்றுமையின் அடையாளம்





அமெரிக்காவில் 70 வருடங்களாக ஒற்றுமையாக வாழ்ந்த ஒரு தம்பதியினர் அடுத்தடுத்து 15 மணிநேரத்தில் மரணம் அடைந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவில் உள்ள Nashport என்ற நகரில் 92வயது Helen Felumlee என்ற பெண்ணும் அவருடைய கணவர் 91 வயது Kenneth Felumlee என்பவரும் அடுத்தடுத்து 15 மணி நேரத்தில் இயற்கை மரணமடைந்தனர்.

இவர்களுக்கு 8 குழந்தைகள் உள்ளனர். தங்கள் பெற்றோர் திருமணமானதில் இருந்து இதுவரை காலை உணவை ஒன்றாக சாப்பிட்டு வந்தவர்கள் என்றும், அவர்கள் இருவரது மரணம் தங்களை அதிர்ச்சியுற செய்துள்ளது என்றும் அவரது மூத்தமகன் கூறியுள்ளார். கடந்த 1944ஆம் ஆண்டு இந்த தம்பதியினர்களுக்கு திருமணம் நடந்தது. திருமணமாகி 70 வருட தாம்பத்திய வாழ்க்கையில் இவர்கள் இருவரும் ஒருநாள்கூட பிரிந்திருந்தது இல்லையாம்.

இருவரது இறுதிச்சடங்கையும் ஒரே இடத்தில் நடத்திய இவரது வாரிசுகள், சாவிலும் இணைபிரியாத தங்கள் பெற்றோர்களை ஒரே இடத்தில் புதைத்துள்ளனர். இந்த அபூர்வ சோக சம்பவம் அந்த பகுதியில் இருப்பவர்களை வியப்பையும் வருத்தத்தையும் அளித்துள்ளது.

## சறுக்குப் பலகை



தங்க முலாம் பூசப்பட்ட சறுக்குப் பலகையொன்றை (ஸ்கேட் போர்ட்) மத்தியூ விலட் எனும் கலைஞர் வடிவமைத்துள்ளார். தூய தங்கத்தால் இந்த சறுக்குப் பலகை முலாமிடப்பட்டுள்ளது. நியூயோர்க் நகரிலுள்ள கடையொன்றுக்காக இந்த சறுக்குப் பலகையை மத்தியூ விலட் தயாரித்துள்ளார். இதன் விலை 15000 டொலர்கள் (சுமார் 20 இலட்சம் ரூபா) ஆகும். உலகின் மிக அதிக விலையுள்ள சறுக்குப் பலகை இதுவாகும். தூய தங்கத்தால் முலாமிடப்பட்டுள்ளதால் சாதாரண சறுக்குப் பலகையைவிட இது 80 சதவீத அதிக பாரமானதாக காணப்படுகிறது. தங்க முலாமிடப்பட்டுள்ள போதிலும் இந்த சறுக்குப் பலகையின் அனைத்து பாகங்களும் முற்றிலும் இயங்கக்கூடியதாக உள்ளது என மத்தியூ விலட் கூறுகிறார்.


## செல்லப்பிராணியின் செலவு



இங்கிலாந்தில் உள்ள வொர்க்க்ஷையர் மாகாணத்தில் அன்னெட் எட்வர்ட்ஸ் என்பவர் தனது செல்லப்பிராணியாக முயலை வளர்த்துவருகிறார். டேரியஸ் என்ற பெயரைக் கொண்ட இந்த முயல், உலகிலேயே மிகப்பெரியது என்று கருதப்படுகிறது. இது சுமார் 4 அடி 4 அங்குலம் நீளம் கொண்டதாகும். குறித்த முயல் உணவாக தினமும் 12 கேரட்டுகளை சாப்பிடுகிறது. அப்படியெனில் இது வருடத்திற்கு சுமார் 4000 கேரட்டுகளை சாப்பிட்டுவருகிறது.

இது குறித்து அதன் உரிமையாளர் கூறுகையில், "டேரியஸை பராமரிப்பதற்கு மட்டும் வருடத்திற்கு 2500 யூரோ செலவாகிறது. இது மிகவும் பேராசை பிடித்தது. சாப்பிடுவதை ஒருபோதும் இது நிறுத்தாது. ஆனாலும் டேரியஸ் ஆரோக்கியமாக உள்ளது" என்று தெரிவித்தார்.

## மண் மாளிகை





Octvio Mendoza எனும் 64 வயதான கட்டடக்கலை நிபுணர் சுமார் 5,400 சதுர அடிகள் கொண்ட பிரமிக்க வைக்கும் களிமண் வீடு ஒன்றினை உருவாக்கியுள்ளார்.

கொலம்பியாவில் அமைக்கப்பட்டுள்ள இவ்வீடானது குறித்த கட்டடக்கலை நிபுணரின் 14 வருட உழைப்பில் உருவானது என்பது குறிப்பிடத்தக்கது.

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 சித்திரை 18 வியாழக்கிழமை (01.05.2014) பக்கங்கள் IV ஓசை - 212

# அரசியல் இலக்கை வெற்றி கொள்ள உழைப்போர் தினத்தில் உறுதி பூணுவோம்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறைகூவல்



(யாழ்ப்பாணம்)

உலகெங்கும் வாழும் உழைக்கும் மக்கள் தமது உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து எழுகின்ற மேதினத்தில், உழைக்கும் மக்களோடு இணைந்து தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் இலக்கையும் வென்றிட உறுதிகொள்வோம் என்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தனது மேதின செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மே 1 ஓர் வீரிய தினம். அன்றைய சூழலில் உழைக்கும் மக்கள் ஒடுக்கு முறைகளை சுட்டெரிக்க எழுந்த சூரிய தினம்.

உலகத்தொழிலாளர்களே!... ஒடுக்கப்படுகின்ற தேச மக்களே!... ஒன்றுபடுங்கள் என்று அறைகூவல் விடுக்கப்பட்ட உன்னத தினம்.

இத்தினத்தில் உழைக்கும்

IV ஆம் பக்கம் பார்க்க

# வடமாகாண சபைத் தீர்மானங்களை தெரிவுக்குழுவில் முன்வையுங்கள்

## கூட்டமைப்புக்கு கூறுகிறது அரசு



வடமாகாண சபையில் நிறைவேற்றப்படுகின்ற தீர்மானங்களை, நாடாளுமன்ற தெரிவுக் குழுவிடம் முன்வைத்தால் அது குறித்து கலந்துரையாட முடியும் என ஆளும் கட்சியின் பிரதம கொறடாவான அமைச்சர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

வடமாகாண சபையில் கடந்த திங்கட்கிழமை நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் பி.பி.சி.க்கு வழங்கிய செவ்வியிலேயே குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்றால் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவது தொடர்பிலும் பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்வது தொடர்பிலும் கலந்துரையாட முடியும் என அமைச்சர் இதன்போது சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கையின் தேசிய பாது

IV ஆம் பக்கம் பார்க்க

# அனந்தி மீது எரிந்து விழுந்த கூட்டமைப்பு எம்.பி.க்கள்

## அழுதுகொண்டு உரையை நிகழ்த்தினார் அவர்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்களின் கூட்டுக் கூட்டத்தில், வடமாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரன் மீது கடுமையான விமர்சனங்களை எம்.பி.க்களான சம்பந்தன், சுமந்திரன், சரவணபவன் ஆகியோர் முன் வைத்தனர்.

திருகோணமலையில் நேற்று நடந்த கூட்டமைப்பின் இரண்டாவது நாள் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் ஆரம்பமானதில் இருந்து கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கட்சித் தலைமையின் அனுமதியின்றி அனந்தி ஜெனிவா சென்றமை மற்றும் அங்கு அவர் ஆற்றிய உரைகள் தொடர்பாக, திரும்பத் திரும்ப பேசிக்கொண்டிருந்தார். இந்நிலையில் குற்றச் சாட்டுக்களுக்குப் பதிலளிக்கும் வகையில், அனந்தி விளக்க அறிக்கை ஒன்றை வாசிக்க முற்பட்டார்.

அவ்வேளையில் குறுக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எழுதித் தந்தவற்றை இங்கு வாசிக்க வேண்டாமெனத் தெரிவித்தார். அதனைப் பொருட்படுத்தாமல் அனந்தி தொடர்ந்தும் வாசிக்க முற்பட மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான சரவணபவனும் அங்கு சுமந்திரனுடன் இணைந்து கொண்டு அனந்திக்கு எதிரான கருத்துக்களை முன்வைத்தார்.

IV ஆம் பக்கம் பார்க்க

# நேரெதிரே மோதின ரயில்கள் எழுபது பயணிகள் படுகாயம்

## குருநாகலில் சம்பவம்



குருநாகல் பகுதியில் இரண்டு ரயில்கள் நேற்றுக் காலை நேருக்கு நேராக மோதிக்கொண்டதில் சுமார் 70 பேர் படுகாயமடைந்துள்ளதுடன், இவர்களில் நால்வரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு காயமடைந்தவர்களில் நான்கு சிறுவர்கள், இரண்டு சிறுமிகள் உட்பட 45 பெண்கள், 25 ஆண்க்ள் அடங்குவர்.

குருநாகல் பொத்துஹெர எனுமிடத்தில் நேற்றுக் காலை

IV ஆம் பக்கம் பார்க்க

# பாக். உளவுப் பிரிவுடன் தொடர்பு இலங்கையர் சென்னையில் கைது



இந்தியாவின் மத்திய புலனாய்வு அமைப்புகளும் தமிழகக் காவல்துறையும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையில் பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ.யை சேர்ந்தவராகக் கருதப்படும் ஒரு நபர் சென்னையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஜாகிர் ஹுசைன் (வயது-37) என்ற இந்த நபர் கண்டியைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகிறது. நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட இவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

பயங்கரவாத அமைப்பிற்காக தமிழகத்தில் ஆட்சேர்ப்புப் பணியில் ஜாகிர் ஈடுபட்டிருந்ததாக மத்திய புலனாய்வு அமைப்புகள் கொடுத்த தகவலையடுத்து, தமிழ்நாடு காவல்துறை

IV ஆம் பக்கம் பார்க்க

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கட்சியாகப் பதிவு செய்யக் குழு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தேர்தல் திணைக்களத்தில் அரசியல் கட்சியாகப் பதிவு செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழு கடந்த எட்டு மாதங்களில் முதற் தடவையாக நேற்று முன்தினம் திருகோணமலையில் கூடிய போதே இந்தக் குழு நியமிக்கப்பட்டிருப்பதாக சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

ஐந்து கட்சிகள் கூட்டுச் சேர்ந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஓர் அரசியல் கட்சியாக, தேர்தல்கள் திணைக்களத்தில் பதிவு செய்ய வேண்

IV ஆம் பக்கம் பார்க்க

# ஊழல், மோசடியில் ஈடுபட்டவர்கள் மீளவும் சங்க நிர்வாகக் குழுவில்

## மக்கள் விசனம் தெரிவிப்பு

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாகக் குழுவிற்கு கடந்த ஞாயிறு நடைபெற்ற தேர்தலில் ஊழல் மோசடி குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் நிர்வாக சபை உறுப்பினர்கள் இருவர் மீண்டும் தெரிவாகியுள்ளமை பொது மக்கள் மத்தியில் பலத்த விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. நல்லூர் பிரதேசசபை உறுப்பினராகத் தெரிவானவரும் தமிழரசுக் கட்சியின் உப பொருளாளருமான கனகசபாபதி, கல்வியங்காடு செங்குந்தா இந்துக்கல்லூரி அதிபர் பத்மராஜா ஆகியோரே தெரிவான இருவருமாவார்.

இவர்கள் இருவரும் நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாகசபை உறுப்பினர்களாக பதவி வகித்திருந்த யுத்த காலத்தில், பொது மக்களுக்கு கட்டுப்பாட்டு விலையில் விநியோகிக்கவென அரசாங்கத்தால் அனுப்பிவைக்கப்பட்டிருந்த பல

IV ஆம் பக்கம் பார்க்க

## சிறுவிளம்பரங்கள்

### வேலைவாய்ப்பு

நிரந்தரமான தொழில், நிரந்தரமான சம்பளத்துடன் 24,000.00 - 38,000.00 வரை வருகைதரும் தினமே சேர்த்துக்கொள்ளப்படும். (உற்பத்தி பொதியிடல், மேற்பார்வையாளர்) சாப்பாடு, தங்குமிட வசதியுண்டு. 18 - 55 வரையான ஆண், பெண்களும் குழுக்களாகவும் இணைந்து கொள்ளலாம். 071 085 4068.

விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18 - 55 வரையான ஆண், பெண் தேவை. சம்பளம் 18,000.00, 35,000.00 வரை. தங்குமிடம், உணவு, பயிற்சி வழங்கப்படும். வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள். 077 596 4299 (R/348)

### காணி, வீடு விற்பனைக்கு

சுதுமலை தெற்கில் சகல வசதிகளுடனுள்ள ஒரு வீடும், அதை அடுத்துள்ள இரண்டு சிறு வீடு களாக்கக்கூடிய கட்டடத் தொகுதியும் விற்பனைக்குண்டு. வாங்குவோரின் வசதிக்கேற்ப சிறு சிறு பகுதிகளாகவும் விற்க முடியும். தொடர்பு : காலை, மாலையில் - க.சிவறட்ணம், சம்பந்தர் ஒழுங்கை, சுதுமலை தெற்கு. (ஏகாம்பரம் கடையடி) (R/347)

### டயானா பிளாஸ்ரிக்

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088. (C/3595)

---

### வாழ்க வளமுடன்

பெயர் : ப.தமிழ்நிலா
முகவரி : ஐயன்கன்குளம்
புத்துவெட்டுவான்



அகவை
6 இல்
பல்லாண்டு காலம்
வாழ்கவென
வாழ்த்துகின்றோம்

---

### தொழிலாளர் தின நல்வாழ்த்துக்கள்

**வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி (வ.து)**

பதிவு இல:யா.மா.2154 | சங்கானை வீதி, மானிப்பாய். | பதிவு திகதி 06.11.1993

**எமது தொழிற்பாடுகள்**

- மதுசார உற்பத்தி சாராய உற்பத்தி, விற்பனை
- நிழற்பட பிரதி சேவைகள்
- தொலைபேசிச் சேவைகள்
- கள் போத்தலில் அடைத்து விற்பனை செய்தல்

பனை வளம் பெருக்கி
பயன் பல பெற்று
மனைவளம் சிறந்து
மகிழ்வுடன் வாழ்வீர்!

**கூட்டுறவுக் கொள்கைகளுக்கமைவான எமது நலன்புரித் திட்டங்கள்**

- அங்கத்துவ சங்கங்களின் உறுப்பினர்களுக்கான இலவச ஒய்வு, மரணக் கொடுப்பனவு
- அங்கத்தவர், பணியாளர் இலவச மருத்துவ பரிசோதனைத் திட்டம்
- பணியாளர்களுக்கான நலன்புரித்திட்டம்
- முன்பள்ளி மாணவர்களுக்கான இலவச சத்துணவுத் திட்டம்
- முன்பள்ளி ஆசிரியர், மாணவர்களுக்கான இலவச சீருடைத்துணி வழங்கல்
- மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கல்
- அங்கத்தவர், பணியாளர்களுக்கான பயிற்சி நெறிகள்
- முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பறியிற்சி நெறிகள்.

(C/3668)

---

### தொழிலாளர் தின நல்வாழ்த்துக்கள்

**சங்கானை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்**

- கிளை நிலையம்
- மொத்த நிலையம்
- எரிபொருள் நிலையம்
- கிராமிய வங்கி
- உணவகம்
- போட்டோ பிரதி சேவை



சங்கானை

(C/3667)

---

### அனைவருக்கும் தொழிலாளர் தின நல் வாழ்த்துக்கள்

இப்புதிய வருடத்தை
Anna Spiced Coffee
உடன் தொடங்குவோம்.

பல ஆண்டுகளாக தம்முடைய உற்பத்திப் பொருட்களை சந்தையில் விற்பனை செய்யும் அண்ணா உற்பத்திகளின் இன்னுமொரு புதிய பரிமாணம்

*Anna Spiced Coffee*

அனைத்து Supermarket, Food City, Groceries மற்றும் Pharmacy களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured & Distributed by
**ANNA INTERNATIONAL (PTE) LTD**
214/5, Messenger Street, Colombo 12.
Tel: +94-11-2424877, +94- 11-2436063.

(C/3669)

---

### உழைப்பாளர் அனைவருக்கும் இனிய வாழ்த்துக்கள்

**மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்** (வரையறுக்கப்பட்டது)

பிரதான வீதி, மானிப்பாய். | தொலைபேசி: 021 225 5109

**எமது சேவைகளும் செயற்பாடுகளும்**

- போத்தலில் அடைக்கப்பட்ட சுவையூட்டப்பட்ட பதநீர்
- சுத்தமான முறையில் தயாரிக்கப்பட்ட பனை வெல்லம்
- முன்பள்ளிகளை நிர்வகித்தல்
- கிராமிய வங்கி
- கற்பகதரு விற்பனை நிலையம்
- ஓய்வூதியம் மற்றும் சமூகநல மேம்பாட்டுத் திட்டங்கள்

(C/3663)

---

### தொழிலாளர் தின நல்வாழ்த்துக்கள்

யாழ்.மாவட்ட
**பேக்கரி உரிமையாளர் சங்கம்**
Jaffna District
**Master Bakers Assosiation**

இல.183, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. | பதிவு இல. 649, Tel: 021 222 3814 | 559. நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.



இ.பேரின்பநாயகம் ........ தலைவர் | கா.பாஸ்கரன் ........ செயலாளர்.

(C/3665)

---

### கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

பதிவு இல REGD PA /50-08.03.1972

ஏ 9 வீதி, கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி.

**வியர்வைகளால் முத்துக்கள் செய்பவனே....**

நீ விதைத்த வியர்வைகள் தான்
கல்லாய்க் கிடந்த இந்த பூமிப்பந்து
கர்ப்பம் தரித்து உயிர்பிடித்திருக்கிறது...!

நீ... உடல் முழுவதும் சகதிகள் பூசி
இந்த உலகத்தை மிளிரச் செய்தவன்...
நீ... அழுக்காகி அழுக்காகியே
அர்த்தப்பட்டவன...

உன் வியர்வை நாற்றம்...
அது உன் நாட்டை மணக்கச்செய்யும்
மகரந்தத்துகள்கள்...

தலைவர்,
பொதுமுகாமையாளர்
அங்கத்தவர்கள்
பணியாளர்கள்
கிளிநொச்சி பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
ஏ9 வீதி, கரடிப்போக்கு.
கிளிநொச்சி

T.P 0217901723, 0214924218

(C/1978)

# வெல்லட்டும் தொழிலாளர் கோரிக்கை வாழ்வுரிமைக் கனவுகளும் நிஜமாகட்டும்



(யாழ்ப்பாணம்)

உலகத் தொழிலாளர்களுடைய உரிமையின் குறியீடாக விளங்கும் மே தினத்தில் எங்கள் சகல உரிமைகளுக்குமான குரலை ஓங்கி ஒலிக்கத் திடசங்கற்பம் பூணுவோம். ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளுக்காகவும் அவர்களுடைய விடுதலைக்காகவும் அவர்களின் சுதந்திரத்திற்காகவும் போராடி, உழைத்து வரும் எங்கள் பயணம் மேலும் வீறுடன் தொடரும் என்று உறுதியெடுக்கிறோம் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித்தலைவருமான மு. சந்திரகுமார் விடுத்துள்ள மே தினச் செய்தியில் தெரிவித்துள்ளார்.


அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

மண்ணோடும், மக்களோடும் மக்களின் வாழ்வோடும் பின்னிப் பிணைந்த எங்கள் அரசியல் பணிகள் தினமும் நிகழும் மே தினத்துக்கு ஒப்பானவையாகும். சம்பிரதாயத்துக்காக மேதினத்தில் மட்டும் ஒரு நாள் கொண்டாட்டமாகவோ, ஒரு நாள் புரட்சியாகவோ, ஒரு நாள் உரிமைக் கோரிக்கையாகவோ எங்கள் குரலை உயர்த்த விரும்பவில்லை நாம். வாழ்க்கை நெருக்கடிகளோடு அல்லற்படும் மக்களின் மீட்சிக்காக தினமும் உழைத்து வரும் எமக்கு உழைக்கும் மக்களுடைய கண்ணீரின் பெறுமதியும் வியர்வையின் மதிப்பும் புரியும். எனவே உழைப்பாளிகளாகிய உங்களோடு இணைந்து நின்று உலகத்திசைகளில் எங்கள் குரலை எழுப்புகிறோம். சம்பிரதாயபூர்வமாக மேதினத்தைக் கொண்டாடும் ஒரு நிலை இன்று உலகெங்கும் உள்ளது. எங்களுடைய மண்ணில் கூட இப்படித் திடீரெனத் தொழிலாளர்களின் மீதும், மக்கள் மீதும் பற்றும் பாசமும் கொண்ட வேசதாரிகள், மேதினத்தைக் கொண்டாடுவதாக நடிக்கிறார்கள். இது நகைப்பிற்குரியது மட்டுமல்ல தொழிலாளர்களை அவமரியாதை செய்து ஏமாற்றும் நடவடிக்கையாகும். எனவே இந்த வேசதாரிகளுக்கு எதிராகவும் நாங்கள் ஒன்றிணைந்து எங்கள் உரிமைக்குரலை எழுப்பி உலகத்தில் நிமிர்வோம்.

உலகத் தொழிலாளர் என்ற பொது அடையாளத்தோடு இந்த நாளில் எழுச்சியடைந்து நிற்கின்ற அனைவருக்கும் என் வாழ்த்துக்கள்.

வெல்லட்டும் தொழிலாளர் உரிமைக்கோரிக்கைகள்! வெற்றியாக அமையட்டும் உழைப்பாளிகளின் வாழ்வுரிமைக் கனவுகள்!

# உரிமைகளை வெல்பவர்களோடு தொழிலாளர் பயணம் தொடரட்டும்



(யாழ்ப்பாணம்)

உலக வரலாற்றில் இன்னும் உயிர்ப்போடு காணப்படும் நாள் இந்நாள். இந்த நாள் உழைக்கும் வர்க்கம் ஒன்றுகூடி ஒற்றுமையாய் குரல்கொடுத்து ஒற்றுமையாய் கைகோர்த்து எதையும் வெல்லும் சக்தி மிக்கதாய் பரிணமித்த நாள் என ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் விடுத்துள்ள மே தின வாழ்த்தில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தொழிலாளர் தினம் உழைப்பவர்கள் உரம் பெறும் அத்தினம் முதலாளித்துவத்திற்கு எதிராக வியர்வை வழிந்தோடி வீறுகொண்டு எழுந்த தொழிலாளர்கள் அலைகடல் என சிக்காக்கோ நகரில் ஆர்ப்பரித்த நாள்.

பெருங்காடகற்றி அரும் நாடு உருவாக அயராது உழைத்தவர்கள் உடல் உரமேறி தெளிவான பார்வைகொண்டு தேசத்தை பார்த்த நாள் கொஞ்சும் குருவிகளும் கூடு கட்டி வாழுகின்ற இக்காலத்தில் உழைத்து உழைத்து ஓடாய்ப் போனவர்கள் வீடுகட்டி வாழவழி தெரியாமல் நின்று விழியோரம் கண்ணீர் சிந்தி தெருவோரம் தவித்து கருவிழி கலங்கிய காலங்கள் கழிய உழைக்கும் வர்க்கம் ஒன்றுபட்டு குரல் கொடு.

உழைப்பவர் தி ம் எல்லாம் சாக்கடை அரசிய க்குள் அடிபடக்கூடாது சொந்த நலனுக்காய், சுயதே க்காய் அரசியல் கதிரைக் ாய் உழைப்பவர் தினத்தை உரமாக்கி கொள்பவர்களை பாட்டாளி வர்க்கமே இனங்கண்டு கொள். குடிசை வீட்டிற்குள் உட்கார்ந்து நீங்கள் தவிர்த்த பொழுது நேசக்கரம் நீட்டி பாசத்தோடு உங்கள் கண்ணீர் துடைத்து ஒளிமயமாக்கி உங்கள் உரிமைகளை வென்றெடுப்பவர்களோடு உங்கள் உரிமைப் பயணம் தொடரட்டும்

சிந்திய வியர்வைத்துளிகள் எல்லாம் சிப்பிக்குள் முத்தாய் மாறட்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தொழிலாளருக்காக நாம் ஒன்றுபடுவோம்



தேசியங்கள், தேசங்கள் கடந்து உலகப் பெரு விழாவாக கொண்டாடப்படும் பெரு விழாவே இவ் மேதினமாகும். உழைக்கும் வர்த்தகத்தினரான தொழிலாளர்களை ஏற்றிப் போற்றும் நாளான இந்நாள் உலகப் பெருவிழாவாகக் கொண்டாடப்படுகின்றது என ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.வி.குகேந்திரன் (ஜெகன்) விடுத்துள்ள மே தினச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஏழை, பணக்காரன் ஆழ்பவன், ஆழப்படுகின்றவன், சுரண்டுபவன், சுரண்டப்படுகின்றவன், ஒடுக்குபவன், ஒடுக்கப்படுகின்றவன் என்று உலகமெங்கும் முரண்பாடுகள் பரந்து கிடக்கின்றது

அதற்கு எதிரான ஒரு தொழிலாளர் புரட்சி தினமான நாளே இந் நாளென்றும், அத் தொழிலாளருக்காக ஒன்றுபடுவோம் என் அவர்களது உரிமைகளை வென்றுவிடவும், உரிமைக்கும், உறவுக்கும் கரம்கொடுப்போம் என்று அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உரிமைகளை வென்றெடுக்கும் நாள்



(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் உழைக்கும் மக்கள் யாவரும் தத்தமது உரிமைகளை வென்றெடுக்கவும், நிலைநாட்டவும் கூட்டாகத் தீர்மானிக்கும் நாளாகவே ஒவ்வொரு வருடமும் மே முதல் நாளை உழைப்பாளர் தினமாகக் கைக்கொண்டு வருகிறார்கள். தொழிற்சங்கங்களின் முக்கியத்துவம் குறைவடைந்தாலும் உழைப்பாளர் தினத்தின் முக்கியத்துவம் குறைவடையவே இல்லை என வடமாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் விடுத்துள்ள மே தினச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழினத்தைப் பொறுத்தவரை எமது சனத்தொகையில் தொண்ணூற்றொன்பது வீதமான மக்கள் உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களே.

ஆகவே உழைக்கும் வர்க்கத்தினராகிய நாம் எம்மீது திணிக்கப்பட்டிருக்கும் பாரபட்சம், பாகுபாடு, அடக்கு முறை என்பவற்றுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டிய கட்டாயத் தேவையிலுள்ளோம் என அவர் விடுத்துள்ள மே தினச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வவுனியாவில் கடும் மழை

வவுனியா,வெங்கலச் செட்டிக்குளம் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இர்வு பெய்த கடும் மழையினால் 57 குடும்பங்களைச் சேர்ந்த 173 பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.

வவுனியா வெங்கலச் செட்டிக்குளம் பிரதேச கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட தம்பனை வீதி, கல்லுமலைவீதி, மருக்காரம்பளை, கண்ணாட்டி, கணேசபுரம் கிராமம் முதலிய கிராமங்களிலேயே இவ்வாறு காற்றுடன் கூடிய அடைமழை பெய்துள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டதாக வவுனியா இடர் முகாமைத்துவ நிலைய பொறுப்பதிகாரி எஸ். சூரியராஜா தெரிவித்தார்.

வவுனியாவில் பல்வேறு இடங்களிலும் நேற்று முன்தினம் மாலை கடும் காற்றுடன் பெய்த மழையால் குடியிருப்புகளின் கூரைகள் சேதமடைந்து வீடுகளுக்குள் மழை நீர் புகுந்துள்ளது.

தற்போது கால நிலை சீரடைந்த நிலையில், பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது வீடுகளுக்கு திரும்பி வருகின்றனர்.

இதேவேளை, வீடுகள் முற்று முழுதாக பாதிக்கப்பட்டமையினால் சில குடும்பங்கள் தொடர்ந்தும் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ளன.

சேதவிபரங்கள் குறித்து அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தகவல்களை பதிவுசெய்கிறது.


## பாராட்டி வாழ்த்துகிறோம்



யாழ்.பல்கலைக்கழகத்தில்
கலைமாணிப் பட்டத்தைப் பெற்ற
**திருமதி கவிதா சதீஸ்வரன்**
(B.A, Dip.in tea S.L.T.S.2-II)

அவர்களை மனதார வாழ்த்தி மகிழ்கின்றோம்.

பொருளோடும், புகழோடும் ஊரறிய இருந்தாலும் உண்மைக் கல்விசார் பட்டமெனும் ஆதாரமே உலக வாழ்வியலில் வெற்றியைத் தேடித் தரும் ஆஸ்திக்கும், அந்தஸ்துக்கும் ஆயிரம் அர்த்தம் இருந்தாலும் உண்மைக் கல்விக்கு ஒரே ஒரு அர்த்தம் இருந்தால் அதுவே எம் வாழ்வில் வெற்றியைத் தரும்

மனதார வாழ்த்தும்
திரு.திருமதி.சற்குரு தேவி
திருமதி வே.சசிதேவி,
திரு.திருமதி சத்தியபாமா புஸ்பராசா

கோண்டாவில்,
யாழ்ப்பாணம்.

(C/3662)



அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

**நியத்த ஜய**
உத்தியோகபூர்வ முடிவு

| | |
|---|---|
| வெற்றி வாரம் - | 251 |
| திகதி - | 2014:04.29 |
| வர்ணம் - | மஞ்சள் |

வெற்றி இலக்கங்கள் — ஆங்கில எழுத்து

04 20 47 54 P

பரிசுத் தொகை ரூபா. 17,653,540/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| [illegible] | 50,000/- | 07 | 350,000/- |
| [illegible] | 1,000/- | 226 | 226,000/- |
| [illegible] | 1,000/- | 353 | 353,000/- |
| [illegible] | 60/- | 10105 | 606,300/- |
| [illegible] | 40/- | 5188 | 207,520/- |
| [illegible] | 20/- | 131640 | 2,632,800/- |
| [illegible] | 20/- | 19074 | 381,480/- |
| [illegible] | 17,653,540/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,757,100/- |

எதிர்வரும் வெள்ளிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 17,911,020/-

2014.05.02ம் திகதி வெள்ளிகிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது நீல வர்ண டிக்கட்களாகும்
வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47
web : www.dlb.lk

(C/3379)

# தாவடி மதுபான நிலயத்தின் முன்பக்க கதவுடைத்து திருட்டு

கே.கே.எஸ்.வீதி தாவடியிலுள்ள மதுபான விற்பனை நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு பல இலட்சம் பெறுமதியான மதுபானங்கள் திருடப்பட்டுள்ளதாக உரிமையாளரால் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினமிரவு 9 மணியளவில் உரிமையாளர் குறித்த மதுபான நிலையத்தை பூட்டிவிட்டுச் சென்ற நிலையில் நேற்றுக் காலை வழமைபோல் திறக்கச் சென்றவேளை நிலையத்தின் முன்பக்க கதவின் பூட்டுக்கள் உடைக்கப்பட்டிருந்ததுடன், உள்ளேயிருந்த மதுபானங்கள், மதுபான வெற்றுப்போத்தல்கள் திருடிச் செல்லப்பட்டுள்ளன. அத்துடன் மதுபான நிலையத்திற்கு பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கமராவையும் திருடர்கள் பிடுங்கி எடுத்துச் சென்றுள்ளனர்.

குடியிருப்புகள் நெருக்கமாகவுள்ள இப்பகுதியில் இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக யாழ்.பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (137)

## தமிழ்த் தேசியக்...

டும் என்று நீண்ட காலமாகக் கோரப்பட்டிருந்தது. இந்தக் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் அது தொடர்பான நடவடிக்கைகளை இந்தக் குழு மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தக் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், மாவை சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், புளொட் அமைப்பின் தலைவருமாகிய சித்தார்த்தன் ஆகியோர் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். அதேவேளை, இந்த ஒருங்கிணைப்புக் குழு நிலைமைகள் மற்றும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக மாதந்தோறும் கடைசி வெள்ளிக்கிழமைகளில் கூடும் என்றும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

வடக்கு, கிழக்கு மாகாண சபைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கையகளை ஆராய்ந்து சிபாரிசுகளை முன்வைப்பதற்கும் குழுவொன்றை நியமிப்பதற்கும் இந்தக் கூட்டத்தில் ஆலோசனை முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

## பாக்.உளவு...

யில் அடிப்படைவாத இயக்கங்களைக் கண்காணிக்கும் பிரிவான 'க்யூ' பிரிவு அந்த நபரை நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளது.

இலங்கையிலிருந்து இந்த நபர் சுற்றுலாப் பயணிகளுக்கான விசாவில் தமிழகத்திற்கு வந்த நிலையிலேயே கைது செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

விரைவில் இதுகுறித்த மேலதிக தகவல்களை வெளியிடவிருப்பதாக தமிழக காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

## வடமாகாண...

காப்பிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் செயற்படுவோருக்கும் அமைப்புக்களுக்கும் எதிராகவே தடை விதிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய தடைகள் தேவையற்றது எனக் கருதினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தடை செய்யப்பட்டுள்ள புலம் பெயர் அமைப்புக்கள் அல்லது வடமாகாண சபையின் முதலமைச்சர் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் அதனைத் தெரிவிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 7 ஆவது ஐ.பி.எல்

**ஹைதராபாத் 172/5**

ராகுல் - 46, வோனர் - 65

சகீர்கான், அன்டர்சன் தலா 2 விக்கெட்டுக்கள்.

**மும்பை - 157/7**

பொலாட் - 78, ராயுடு - 35, டங்க் - 20

ஸ்ரெயின், பிரவீன்குமார், இர்பான் பதான் தலா 2 விக்கெட்

15 ஓட்டங்களால் ஹைதரபாத் வெற்றி.

ஆட்ட நாயகன் பிரவீன்குமார்.

## நேரெதிரே...

8.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. பளையிலிருந்து கொழும்பு வந்துகொண்டிருந்த அதிசொகுசு ரயில், ரயில் நிலையத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த நிலையில் வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்த ரஜரட்ட ரயில் அதனுடன் மோதியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சமிக்ஞை கோளாறு காரணமாகவே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. காயமடைந்தவர்கள் குருணாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ரயில் விபத்தைத் தொடர்ந்து, வடபகுதிக்கான தூரரயில் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டுத்துறை தெரிவித்துள்ளது.

கொழும்பிலிருந்து வவுனியா, பளை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பகுதிகளுக்கும் மற்றும் மேற்படி பகுதிகளிலிருந்து கொழும்புக்கான ரயில் சேவைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இந்த ரயில் சேவைகள் இன்று இடம்பெறுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ரயில்வே அத்தியட்சகர் எல்.ஏ.ஆர். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்

இந்த விபத்து தொடர்பில் ஆராய்வதற்காக விசேட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக ரயில்வே பொது முகாமையாளர் பீ.ஏ.பீ.ஆரியரத்ன குறிப்பிட்டார். இலங்கையில் இடம்பெற்ற பெரும் பாதிப்புடைய ரயில் விபத்து இது என அவர் கூறினார். இந்த விபத்தின் காரணமாக 10 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக ரயில் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ரயில் பெட்டிகள் முற்று முழுதாக சேதமடைந்துள்ளன.

## ஊழல்...

இலட்சம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொருட்களைத் தனியார் வர்த்தக நிலையங்களுக்கு மோசடியாக விற்பனை செய்து அவ்வாறு விற்பனை செய்யப்பட்ட பணமும் கையாடல் செய்யப்பட்டிருந்தவிடயம் யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து கண்டுபிடிக்கப்பட்டு இவர்கள் உட்பட முன்னாள் நெறியாளர் குழு உறுப்பினர்கள் அனைவரும் பதவி விலகியிருந்தனர். அதன் பின்னர் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் தலைமையில் நியமிக்கப்பட்ட நெறியாளர் குழுவினால் நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் நிர்வகிக்கப்பட்டு இலாபத்திலும் இயங்கத் தொடங்கியிருந்தது.

இந் நிலையில், வடமாகாண சபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியதைத் தொடர்ந்து வட மாகாண கூட்டுறவுத்துறை முதலமைச்சர், நீதியரசர் விக்னேஸ்வரன் தலைமையின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தது. இந்தச் சூழ்நிலையிலேயே கூட்டுறவுத்துறை அபிவிருத்தி ஆணையாளரால் பகிரங்கமாக பல இலட்சம் ரூபா மோசடி தொடர்பில் குற்றச்சாட்டுப்பத்திரம் வழங்கப்பட்டிருந்த முன்னாள் கூட்டுறவுச்சங்க நிர்வாகக் குழுவைச் சேர்ந்தவர்களுள் மேற்படி இருவரும் மீண்டும் நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாக சபைக்குத் தெரிவாகியுள்ளனர்.

இது கூட்டுறவுத் துறைக்குப் பொறுப்பான அமைச்சரான நீதியரசர் விக்னேஸ்வரனுக்குத் தெரிவிக்கப்பட்டும் அவர் குறித்த இருவரையும் போட்டியிடுவதிலிருந்து தடை செய்ய எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லையெனவும், தேர்தலில் கனகசபாபதி வெற்றி பெற்ற பின்னர் வட மாகாண சபை அவைத் தலைவர் சிவஞானம் நேரில்சென்று அவருக்கு மாலை அணிவித்து வாழ்த்துத்தெரிவித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யுத்தம் நடைபெற்றிருந்த போது ஏ-9 பாதை பூட்டப்பட்டு அத்தியாவசிய உணவுப் பொருடகளுக்கு குடாநாட்டில் பெரும் தட்டுப்பாடு நிலவியிருந்த காலத்தில், பாதை பூட்டப்பட்டதால் வடமாகாண ஏழை மக்கள் பட்டினியால் பலியாகிறார்கள் என ஒரு புறம் பிரசாரம் செய்து கொண்டு, மறுபுறம் அரசாங்கத்தால் பொதுமக்களுக்கு விநியோகிக்கவென அனுப்பப்பட்டிருந்த அத்தியாவசிய உணவுப் பொருட்களை வசதி படைத்தவர்களுக்காக தனியார் வியாபாரிகளுக்குப் பெரும் கொள்ளை இலாபத்தில் விற்று அந்தப் பணத்தையும் கையாடல் செய்திருந்தமை, வட மாகாண கூட்டுறவுத்துறை வரலாற்றிலேயே முன்னரெப்போதும் நடைபெற்றிருந்திராத பெரும் மோசடி என விபரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அனந்தி...

அதற்குப் பதிலளித்த அனந்தி, ஜெனிவா விவகாரம் உங்களிற்கு அரசியலாக இருக்கலாம். எனக்கோ அதுவே வாழ்க்கைப் பிரச்சினை. காணாமற்போன எனது கணவர் உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோருக்கு தீர்வு கிடைக்குமென்ற நம்பிக்கையுடனேயே அங்கு போனேன் எனக் கூறி அழுதவாறு உரையினை நிறுத்தி அமர்ந்து விட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து அனந்தி சசிதரன் நண்பகல் 12.00 மணிக்கு சபையிலிருந்து வெளியேறியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை இவ்விடயம் தொடர்பாக அனந்தி சசிதரன் தெரிவிக்கையில், என்னுடைய ஜெனிவா பயணம் குறித்து விமர்சிப்பதற்கான கூட்டம்போன்றே இன்றைய (நேற்றைய) கூட்டம் நடைபெற்றது.

நான் கட்சியின் ஒழுங்குகளுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என கேட்கப்பட்டிருக்கின்றேன். மேலும் நேற்றைய தினம் சபையில் நடை பெற்ற விடயங்களை ஊடகங்களுக்கு தெரிவிக்க வேண்டாம் என நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றேன். ஆனால் மிக விரைவில் ஊடகவியலாளர்கள் சந்திப்பொன்றை நடத்தி உண்மையை வெளிப்படுத்துவேன் என்றார்.




## அரசியல்....

மக்களோடு இணைந்து தமிழ பேசும் மக்களின் அரசியலுரிமை சுதந்திரத்திற்காகவும் உழைப்பவர் உரிமைக்காகவும் நாம் உறுதியுடன் குரல் எழுப்பி நிற்கின்றோம். உரிமை என்பது வெறுமனே பேசிக்கொண்டிருப்பதற்கான விடயமல்ல.

அது அடைந்தே தீரவேண்டிய எமது மக்களின் மாபெரும் சுதந்திர சொத்து.

உலக உருண்டை எங்கும் அரசியல் உரிமைகளுக்காகவும், உழைப்பவர் உரிமைகளுக்காகவும் போராட வேண்டிய நியாயங்கள் இருந்தே வருகின் றன.

அவ்வாறு எழுந்த போராட்டங்கள் யாவும் வெற்றி பெற்று, அல்லது அரசியல் தீர்வின் திசை நோக்கி சென்று விடிவு பெற்ற வரலாறுகளே நடந்து முடிந்திருக்கின்றன.

ஆனாலும், அறுபது ஆண்டு கால நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்ட தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமை பிரச்சினை மட்டும் தீர்வுகளுக்கான சந்தர்ப்பங்கள் கிடைத்தும் தீராப்பிரச்சினையாக நீடித்துச் செல்கிறது.

இது வரை கிடைத்த அரசியல் தீர்வுகளுக்கான அரிய வாய்ப்புகள் யாவும் சுயலாப அரசியல் தலைமைகளின் அடங்காத பதவி நாற்காலி கனவுகளால் தெருவில் வீசப்பட்டு தொலைந்துபோன வரலாறுகளே எஞ்சியுள்ளன.

இறுதியாக கிடைத்த மாகாண சபை அரசியல் அதிகாரமும் குரங்கின் கை பூமாலை போல் ஆகிவிட்டது.

அடுத்த தேர்தல் வெற்றியை மட்டும் இலக்காகக் கொண்டு விடுகின்ற வெற்று வீர அறிக்கைகளும், சுயலாப வீராவேசப் பேச்சுக்களும் எமது மக்கள்

அரசியல் தீர்வின்றி வாழும் துயரங்களையே தொடர்ந்தும் தந்துகொண்டிருக்கின்றன.

கிடைத்த வாய்ப்புகளை பெற்றுக்கொண்டு, மேலும் பெற வேண்டிய உரிமைகளை அடைவதற்கான மதிநுட்ப சாணக்கிய தந்திர வழிமுறை களே இங்கு அவசியம்.

எமது நிலங்கள் எமக்கே சொந்தம்! நிலமிழந்தவர்கள் வீடிழந்தவர்கள் என்று யாரும் இங்கு இருக்க முடியாது. மீள் குடியேறிய எமது மக்கள் வாழ்வாதார உரிமைகளை மேலும் பெறவேண்டும்.

வேலையற்ற இளைஞர் யுவதிகள் தொழில் வாய்ப்புக்களைப் பெறவேண்டும்.

இல்லாமை என்பது இல்லாமல் ஒழிந்து சகல மக்களும் சகல வாழ்வியல் உரிமைகளும் பெற்றிங்கு நிமிர்ந்து வாழ வேண்டும்.

உழைக்கும் சகல மக்களுக்கும் உடலை வருத்தி வியர்வை சிந்தும் உழைப்புக்கு, உரிய ஊதியமும், மரியாதையும் இங்கு வழங்கவேண்டும்.

மனித நாகரிகம் வளர்ச்சியடைந்த உலகில் எந்தெந்த வசதி வாய்ப்புகளை சகல மக்களும் அனுபவிக்கின்றார்களோ, அதே வசதி வாய்ப்பின் வாழ்வாதார உரிமைகளை உழைக்கும் மக்களுடன் இணைந்து தமிழ் பேசும் மக்களும் அனுபவிக்க வேண்டும். உழைக்கும் மக்களின் உரிமைகள் எங்கும் வெல்லட்டும். தமிழ் பேசும் மக்களின் அரசியல் இலக்கு நோக்கிய பயணம் நடைமுறை யதார்த்த வழி நின்று வெற்றி வரை செல்லட்டும்.

இவ்வாறு தனது மேதினச் செய்தியில் தெரிவித்திருக்கும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, உழைக்கும் மக்களுடன் இணைந்து அனைத்து தமிழ் பேசும் மக்களும்

சரியான திசை வழி நோக்கி அணிதிரண்டு வருமாறு அறை கூவல் விடுத்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 மே 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.